சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
சனிக்கிழமை
3 பிப்ரவரி 2018
திருச்சி
16 பக்கங்கள் ரூ.5

Prithvi®
INNER WEARS
Bra
Slips
Panties
E-Mail
info@prithviinnerwears.com

அரசியல் சாசன அமர்வில் ஜல்லிக்கட்டு வழக்கு

நமது நிருபர்

புது தில்லி, பிப். 2: ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த அனுமதிக்கும் தமிழக அரசின் அவசரச் சட்டத்துக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணையை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த அவசரச் சட்டம் தொடர்பாக பல்வேறு கேள்விகளையும் அரசியல் சாசன அமர்வுக்கு உச்ச நீதிமன்றம் முன்வைத்துள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்தும்பொருட்டு அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் அனுமதியின் பேரில் வழங்கப்பட்ட மத்திய அரசின் மிருக வதை தடுப்புச் சட்டத்துக்கான மாநில அரசின் சட்டத் திருத்தத்துக்கு தமிழக ஆளுநர் கடந்த ஜனவரி 21-ஆம் தேதி ஒப்புதல் அளித்தார். இதைத் தொடர்ந்து, ஜல்லிக்கட்டுப் போட்டி தொடர்பான தமிழக அரசின் அவசரச் சட்டம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உள்ளதாகவும், இச்சட்டத்துக்கு அரசியல் சாசன அங்கீகாரம் உள்ளதா எனக் கேட்டும் விலங்குகள் நல அமைப்பான 'பீட்டா', உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இந்நிலையில், தமிழக அரசின் அவசரச் சட்டம் அமலுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து, அவசரச் சட்டத்தை எதிர்த்து விலங்குகள் நல அமைப்புகள் எவையேனும் வழக்குத் தொடுத்தால்,

(கோப்புப்படம்)

மாநில அரசின் கருத்தைக் கேட்டறியாமல் உத்தரவு ஏதும் பிறப்பிக்கக் கூடாது எனக் கோரி உச்ச நீதிமன்றத்தில் ஜனவரி 22-ஆம் தேதி தமிழக அரசின் சார்பில் 'கேவியட்' மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம். கான்வில்கர், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் கடந்த நவம்பர் 6-ஆம் தேதி விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், இது தொடர்பாக 4 வாரங்களுக்குள் பதில் அளிக்க தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பஉத்தரவிட்டனர். இந்நிலையில், இது தொடர்பானமனுகடந்தடிசம்பர்12-ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது, ஜல்லிக்கட்டு நடத்த கொண்டு வரப்பட்ட தமிழக அரசின் அவசரச் சட்டத்துக்கு இடைக்கால தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்ததுடன், இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றுவதற்கு முடிவு செய்திருப்பதாகவும்,இது தொடர்பான தீர்ப்பை விரைவில் அளிப்பதாகவும் நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

தீர்ப்பு: இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆர். எஃப். நாரிமன், நவீன் சின்ஹா ஆகியோர் அடங்கிய அமர்வு வெள்ளிக்கிழமை அளித்த தீர்ப்பு விவரம்:

இந்த 'ரிட்' மனுக்கள் நிலுவையில் இருக்கும் போதே, விலங்கு வதை தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தம்) 2017-க்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் மேற்கண்ட திருத்தப்பட்ட சட்டம்செல்லாது என அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் மனுவில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நிலையில், மனுதாரர், எதிர்மனுதாரர் ஆகியோரின் வாதங்களைக் கேட்ட பிறகும், இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விளக்கம் தொடர்பாக, கணிசமான கேள்விகள் எழுப்பப்படுவதால், இந்த மனுக்களை 5 நீதிபதிகள் கொண்ட அரசியல்சாசன அமர்வு அதிகாரப்பூர்வமாக விசாரிக்க வேண்டும் எனக் கருதுகிறோம். மேலும், மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கேள்விகளைத் தாண்டி பின்வரும் வினாக்கள் குறித்தும் விசாரிக்க வேண்டும் என்று நீதிபதிகள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

விசாரிக்க வேண்டிய கேள்விகள்

1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 3-ஆவது பட்டியலில் 17-ஆவது பிரிவில் உள்ள கோட்பாட்டுடன் தமிழ்நாடு சட்டத் திருத்தம் தொடர்புடையதா? அல்லது விலங்கு வதையை மேலும் நீடிக்கச் செய்கிறதா? விலங்கு வதை தடுப்பு நடவடிக்கையாக அமையுமா? பொதுப் பட்டியலில் 17-ஆவது குறிப்பு அல்லது மாநிலப் பட்டியலில் ஏதாவது குறிப்பில் தொடர்பில்லாத தோற்றமளிக்கும் சட்டமா?
2. தமிழகத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவே இந்தச் சட்டத் திருத்தம் என மாநில அரசு கூறுகிறது. தமிழகப் பண்பாட்டு பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக உள்ளதாகக் கூறப்படும் இச்சட்டத் திருத்தம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 29-ஆவது பிரிவின் பாதுகாப்பைப் பெறுமா?
3. இச்சட்டத் திருத்தம் பாரம்பரிய காளை இனங்களின் நலத்தையும், வாழ்வாதாரத்தையும் உண்மையிலேயே பாதுகாக்குமா? மேலும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 48-ஆவது பிரிவுடன் தொடர்புடையதா?
4. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 51ஏ(ஜி), 51ஏ(எச்) ஆகிய பிரிவுகளுக்கு முரணாக இச்சட்டத் திருத்தம் உள்ளதா? அப்படி சொல்லும் பட்சத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 14, 21 ஆகிய பிரிவுகளை காரணமற்று மீறுவதாகாதா?
5. இச்சட்டத் திருத்தம், ஏ. நாகராஜா தீர்ப்புக்கும், 2016-ஆம் ஆண்டு நவம்பர் 16-ஆம் தேதி வழங்கப்பட்ட மேல்முறையீட்டு தீர்ப்புக்கும் முரண்பாடானதா? மேற்கண்ட இரு தீர்ப்புகளில் தெரிவிக்கப்பட்ட குறைகளைச் சமாளிக்கும் வகையில் இச்சட்டத் திருத்தம் உள்ளதா? என விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூ.156 கோடியில் 1,500 அடுக்குமாடி குடியிருப்புகள்

சென்னை, பிப்.2: தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ரூ.156 கோடியில் கட்டப்பட்ட 1,500 அடுக்குமாடிக் குடியிருப்புகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெள்ளிக்கிழமை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். ரூ.20.16 கோடி மதிப்புள்ள நான்கு ஆற்றுப் பாலங்களையும் அவர் திறந்து வைத்தார்.

(விரிவான செய்தி பக்கம் – 9)

காஸ்கஞ்ச் கலவரம்: எதிர்க்கட்சிகள் அமளியால் மாநிலங்களவை ஒத்திவைப்பு

புது தில்லி, பிப். 2: உத்தரப் பிரதேச மாநிலம், காஸ்கஞ்ச் பகுதியில் நிகழ்ந்த கலவரத்தை முன்னிறுத்தி சமாஜவாதி உறுப்பினர்கள் மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனிடையே, தில்லியில் சாலையோரக் கடைகளை அப்புறப்படுத்தியதற்கு எதிராக ஆம் ஆத்மி எம்.பி.க்கள் குரல் எழுப்பினர்.

(விரிவான செய்தி பக்கம் – 9)

……

பாஜக–தெலுங்கு தேசம் கூட்டணி தொடருமா?

(செய்தி பக்கம் – 11)

……

இன்றைய இதழுடன் 32 பக்க சிறுவர்மணி இணைப்பு

தமிழ் வழக்காடு மொழியா?

உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை என மத்திய அரசு தகவல்

நமது நிருபர்

புது தில்லி, பிப். 2: சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்கும் முன்மொழிவை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை என்று மாநிலங்களவையில் மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை இணையமைச்சர் பி.பி. செளத்ரி தெரிவித்தார்.

மாநிலங்களவையில் அதிமுக உறுப்பினர் சசிகலா புஷ்பா, 'மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழை உருவாக்க குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி 2006-ஆம் ஆண்டில் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?' என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பி.பி. செளத்ரி வெள்ளிக்கிழமை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதில் விவரம் வருமாறு:

மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழைப் பயன்படுத்த அனுமதிக்கக் கோரி 2006-இல் தமிழக அரசிடமிருந்து மத்திய அரசுக்கு முன்மொழிவு வந்தது. இந்த முன்மொழிவு உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. இது தொடர்பாகஉச்சநீதிமன்றத்தலைமை நீதிபதி 16.10.2012-இல் கடிதம் எழுதியிருந்தார். அதில், '11.10.2012-ஆம் தேதி உரிய பரிசீலனைக்குப் பிறகு சம்பந்தப்பட்ட முன்மொழிவை ஏற்பதில்லை என உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் முழு அமர்வு முடிவு செய்துள்ளது' எனத் தெரிவித்திருந்தார். மேலும், இதே போன்ற முடிவை முன்னர் உச்ச நீதிமன்றம் 07.05.1997 மற்றும் 15.10.1999-ஆம் தேதிகளிலும் எடுத்திருந்தது. உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் முழு அமர்வின் முடிவைக் கருத்தில் கொண்டு இந்த விஷயத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று எழுத்துப்பூர்வ பதிலில் தெரிவித்துள்ளார்.

ஒரு மாநிலத்தின் உயர் நீதிமன்ற வழக்காடு மொழியாக அம்மாநில மொழியை அறிவிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்கக் கோரி தமிழக சட்டப்பேரவையில் 6.12.2006-ஆம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், அத்தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக அதன் மீது எவ்வித முடிவு அறிவிப்பும் இன்னும் வெளியிடப்படவில்லை. இந்நிலையில், மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் வெள்ளிக்கிழமை இவ்வாறு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்.டி.ஓ. அலுவலகங்கள் இன்று செயல்படும்

தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, பிப். 2: தமிழகம் முழுவதும் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் (ஆர்.டி.ஓ.,) மற்றும் பகுதி அலுவலகங்கள் (மோட்டார் வாகன ஆய்வாளர்கள் அலுவலகம்) சனிக்கிழமை (பிப். 3) செயல்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:-அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தை தமிழக அரசு அண்மையில் அறிவித்தது. இந்தத் திட்டத்தில் பயனாளியாகச் சேர விரும்பும் பெண்கள், விண்ணப்பங்களைப் பெற்று அளித்து வருகின்றனர். இந்தத் திட்டத்தில் இணைய பழகுநர் உரிமம் அவசியமாகும்.

இந்த உரிமம் இல்லாத மகளிர் அதனைப் பெறுவதற்காக அதிக எண்ணிக்கையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களை அணுகி வருகிறார்கள். இதையடுத்து, பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு பழகுநர் உரிமங்களை வழங்கும் பணிக்காக வட்டாரப் போக்குவரத்து, பகுதி அலுவலகங்கள் சனிக்கிழமை(பிப்.3)வேலைநாளாகச்செயல்படும். இந்த தினத்தில் பழகுநர் உரிமம் தொடர்பான பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்படும். இதர பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படாது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

மஹாசிவராத்திரி
isha
ஈசனுடன் ஓர் இரவு
13 பிப்ரவரி, 2018
மாலை 6 மணி முதல் இரவு முழுவதும்
ஈஷா யோக மையம், கோவை
சத்குருவுடன்
ஞானம் • தியானம் • ஆனந்தம்
அனைவரும் வருக
ருத்ராட்ச வரப்பிரசாதம்
ஆதியோகி ஒரு வருடமாக அணிந்திருந்த ருத்ராட்சம், மஹாசிவராத்திரிக்கு வரும் அனைவருக்கும் வரப்பிரசாதமாக வழங்கப்படும்.
தமிழகம் முழுவதும் தன்னார்வலர்கள் மூலம் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.
94868 94868
tamil.sadhguru.org/MSR
83000 83111
காணத்தவறாதீர்கள்:
colors
epic
TATA sky Gurus
தூர்தர்ஷன் பொதிகை
Polimer
Sankara
புதுயுகம்
Prime Sponsors
Jio DIGITAL LIFE
ICICI PRUDENTIAL MUTUAL FUND TARAKKI KAREIN!
ADITYA BIRLA CAPITAL Mutual Funds
HDFC ERGO Take it easy!

போஃபர்ஸ் வழக்கு: சிபிஐ மேல்முறையீடு

புது தில்லி, பிப். 2: போஃபர்ஸ் ஊழல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அனைவரையும் விடுவித்து, கடந்த 2005-ஆம் ஆண்டில் தில்லி உயர் நீதிமன்றம் அளித்ததீர்ப்புக்குஎதிராக,உச்சநீதிமன்றத்தில் சிபிஐ வெள்ளிக்கிழமை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது.

முன்னதாக, இந்த வழக்கில் தீர்ப்பு வெளியாகி 12 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்வதால் எந்த பயனும் இருக்காது என்று அட்டர்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால் ஆலோசனை வழங்கியிருந்தார். எனினும், தங்களிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாக கூறி, மேல்முறையீட்டு மனுவை சிபிஐ தாக்கல் செய்துள்ளது.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு: கடந்த 1986-இல் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது இந்திய ராணுவத்துக்கு ரூ. 1,437 கோடி செலவில் ஹோவிட்சர் பீரங்கிகளை வாங்க ஸ்வீடன் நாட்டின் போஃபர்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை பெறுவதற்காக, இந்தியாவைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதிகளுக்கும், ராணுவ அதிகாரிகளுக்கும் அந்த நிறுவனம் ரூ.64 கோடி லஞ்சம் கொடுத்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த விவகாரத்தை முன்வைத்து அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு எதிராக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை எழுப்பின. அதன் எதிரொலியாக 1989 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்விகண்டது.

சிபிஐ வழக்குப் பதிவு: இதனிடையே, போஃபர்ஸ் நிறுவனத்தின் அப்போதைய தலைவர் மார்ட்டின் அர்த்போ, இடைத்தரகர் வின் சத்தா, ஹிந்துஜா சகோதரர்கள் 3 பேர் ஆகியோருக்கு எதிராக சிபிஐ 1990-இல் வழக்குப் பதிவு செய்தது. இவ்வழக்கில், இடைத்தரகர்கள் வின் சத்தா, குவாத்ரோச்சி, அப்போதைய பாதுகாப்புத் துறை செயலர் எஸ்.கே.பட்நாகர், மார்ட்டின் அர்த்போ ஆகியோர் மீதும், போஃபர்ஸ் நிறுவனத்தின் மீதும்1999-இல் சிபிஐ குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது. ஹிந்துஜா சகோதரர்கள் மீது 2000-ஆம் ஆண்டில் துணைக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பு: இவ்வழக்கை விசாரித்த தில்லி உயர் நீதிமன்றம், வழக்கில் இருந்து ராஜீவ் காந்தியை விடுவித்து கடந்த 2004-இல் தீர்ப்பளித்தது. அதைத் தொடர்ந்து, வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஹிந்துஜா சகோதரர்கள் மற்றும் போஃபர்ஸ் நிறுவனத்துக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளையும் ரத்து செய்து 2005-இல் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனிடையே, இவ்வழக்கை விசாரித்த தில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றம், குற்றம்சாட்டப்பட்ட குவாத்ரோச்சியை 2011-இல் வழக்கில் விடுவித்து தீர்ப்பளித்தது. அவர் 2013-இல் மரணமடைந்தார்.

மேல்முறையீடு செய்ய முடிவு: இந்நிலையில், போஃபர்ஸ் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களை விடுவித்து, தில்லி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் முறையிட விரும்புவதாக பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்ற பொது கணக்குக் குழுவிடம் சிபிஐ கடந்த ஆண்டு தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு, மத்தியப் பணியாளர், பயிற்சித் துறையிடம் சிபிஐ கோரியது. இந்த விவகாரத்தில், அட்டர்னி ஜெனரல் கே.கே. வேணுகோபாலிடம் மத்திய பணியாளர், பயிற்சித் துறை சட்ட ஆலோசனை கேட்டது.

'நிராகரிக்கப்பட வாய்ப்பு': அதற்கு, 'தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் இருந்து 90 நாள்களுக்குள் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும். தற்போது 12 ஆண்டுகள் ஆகிவிட்டன. இத்தனை தாமதமாக மனு தாக்கல் செய்வதற்கான உறுதியான காரணங்களும் இல்லை. எனவே, மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரிக்கவே அதிக வாய்ப்புள்ளது' என்று அட்டர்னி ஜெனரல் தெரிவித்திருந்தார்.

எனினும், உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதற்கு, தங்களிடம் முக்கிய ஆதாரங்களும், ஆவணங்களும் உள்ளதாக சிபிஐ கூறியது.

மனு தாக்கல்: அதன்படி, போஃபர்ஸ் வழக்கில் தில்லி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் சிபிஐ வெள்ளிக்கிழமை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. சில முக்கிய ஆவணங்களையும்சிபிஐசமர்ப்பித்துள்ளது. முன்னதாக, போஃபர்ஸ் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட நபர்களை விடுவித்து தில்லி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து பாஜக பிரமுகரான அஜய் அகர்வால் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அந்த மனு மீதான விசாரணை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், சிபிஐ புதிய மனுவை தாக்கல் செய்துள்ளது.

ரூ.17.58 லட்சம் கையாடல்: கூட்டுறவு சங்க செயலாளர் கைது

12 பேர் தலைமறைவு

திருச்சி, பிப். 2: மணப்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ரூ.17.58 லட்சம் கையாடல் செய்ததாக செயலாளர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில், தலைமறைவான மேலும் 12 பேரை போலீஸார் தேடி வருகின்றனர்.

மணப்பாறை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், கடந்த 2011-16-ஆம் ஆண்டு வரை, சங்க உறுப்பினர்களின் நிரந்தர வைப்புத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. மேலும்,உறுப்பினர்களின் கணக்கில் இருந்த பணம், போலி கையெழுத்திட்டு எடுக்கப்பட்டுள்ளது. மொத்தம், ரூ.17.58 லட்சம் கையாடல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுறவுத்துறை உயர் அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து, அப்போது சங்க செயலாளராக இருந்த சக்திவேல் (59), எழுத்தர் சேசுதாஸ் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இந்நிலையில், இதுதொடர்பாக, திருச்சி கூட்டுறவு இணை பதிவாளர் பாலச்சந்திரன், கூட்டுறவுத்துறை குற்றங்கள் தடுப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் செந்தில்குமாரிடம் புகார் அளித்தார். அவர் அறிவுறுத்தலின் பேரில், சக்திவேல், சேசுதாஸ், சங்கத்தின் தலைவராக இருந்த அதிமுக பிரமுகர் ராமச்சந்திரன், மதி உதயன் உள்ளிட்ட 13 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், வியாழக்கிழமை இரவு சக்திவேலை போலீஸார் கைது செய்தனர். தலைமறைவான மேலும் 12 பேரை தேடி வருகின்றனர்.

குங்குமவல்லி அம்மன் கோயிலில் வளைகாப்பு விழா தொடக்கம்

வளையல் அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்த குங்குமவல்லி அம்மன்.

திருச்சி, பிப்.2: திருச்சி உறையூர் சாலை ரோட்டிலுள்ள அருள்மிகு குங்குமவல்லி சமேத தாந்தோன்றீஸ்வரர் திருக்கோயிலில் 68-ஆம் ஆண்டு வளைகாப்பு விழா வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இதில், கர்ப்பிணி பெண்களுக்கு சுகப்பிரசவம் வேண்டி அம்பிகைக்கு ஹோம பூஜை நடைபெற்றது. பிற்பகல் 1 மணிக்கு வளைகாப்பு சம்பிரதாய பூஜைகளும், பிற்பகல் 2.30 மணிக்கு குங்குமவல்லி அம்மனுக்கு தீபாராதனையும் நடைபெற்றது.

தொடர்ந்து வளையல் அலங்காரத்தில் பக்தர்களுக்கு குங்குமவல்லி அம்மன் காட்சியளித்தார். சிறப்பு பூஜைகளுக்குப் பின்னர் 48 நாள் அர்ச்சிக்கப்பட்ட வளையல், குங்குமம், அம்மன் படம் பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. சனிக்கிழமை காலையில் குழந்தை பாக்கியம், சந்தானபாக்கியம் வேண்டி அம்பிகையிடம் பிரார்த்தனைசெய்து ஹோம பூஜையும், ஞாயிற்றுக்கிழமை காலை சுமங்கலி பூஜையும், பிற்பகல் 1 மணிக்கு திருமணத் தடை நீங்க, மாங்கல்ய பாக்கியத்துக்கான சிறப்பு பூஜையும் நடைபெறஉள்ளது. கோயில் பரம்பரை அறங்காவலர் ஏ. கருணாமூர்த்தி உள்ளிட்டோர் விழா ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

புதிய தமிழகம் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

திருச்சி, பிப். 2: திருச்சி சிந்தாமணி அண்ணா சிலை அருகே புதிய தமிழகம் கட்சியினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்துக்கு தெற்கு மாவட்டச் செயலர் கோ. சங்கர் தலைமை வகித்தார். துணைச் செயலர் இளையராஜா, இளைஞரணி செயலர் அசோக், ஒன்றியச் செயலர் ரஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மலைக்கோட்டை பகுதி செயலர் அருள் ஜோதி வரவேற்றார். இதில், சென்னையில் வாடகை கார் ஓட்டுநர் மணிகண்டனை தாக்கி, உயிரிழக்கச் செய்த காவல்துறையினரை பணி நீக்கம் செய்ய வேண்டும். அவரை மரணத்துக்கு காரணமானவர்கள் மீது தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப்பதிவு செய்ய வேண்டும். மணிகண்டன் குடும்பத்தினருக்கு ரூ.50 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும். பேருந்து கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதில், நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ரயில் நிலையங்களை தூய்மையாக பராமரிக்க விழிப்புணர்வு பிரசாரம்

திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில் தூய்மை விழிப்புணர்வு ஏற்படுத்திய சாரண இயக்க மாணவர்கள்.

திருச்சி, பிப். 2: தெற்கு ரயில்வே சாரண இயக்கத்தினர், திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில் வெள்ளிக்கிழமை தூய்மை விழிப்புணர்வு பணியில் ஈடுபட்டனர்.

தெற்கு ரயில்வேயின் பாரத சாரண, சாரணீய இயக்கத்தின் மத்திய மண்டலம் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தை விளக்கியும், ரயில் நிலையங்களைத் தூய்மையாகப் பராமரிப்பது குறித்தும் கடந்த ஜனவரி 26-ஆம் தேதி சென்னையில் விழிப்புணர்வு பிரசாரம் தொடங்கப்பட்டது. இந்த பிரசார குழுவில் 23 பேர் பங்கேற்று உள்ளனர். சென்னையில் தொடங்கி பாலக்காடு, குருவாயூர், திருவனந்தரபுரம், நாகர்கோயில், மதுரை ரயில் நிலையங்களில் தூய்மை விழிப்புணர்வு பிரசாரத்தை இந்த குழுவினர் மேற்கொண்டனர். இந்நிலையில், வெள்ளிக்கிழமை திருச்சி வந்த குழுவினர், ரயில் நிலையங்களைத் தூய்மையாகப் பராமரிப்பது எப்படி என்பது குறித்த செயல்விளக்கத்தை செய்து காண்பித்தனர்.

அப்போது, ரயில் நிலையங்களிலும், ரயில்களிலும் புகைப்பிடிக்கக் கூடாது. ரயில் நிலையங்களில் எச்சில் துப்புவது, சிறுநீர் கழிப்பது கூடாது, ரயில் நிலையத்தில் ரயில்கள் நிற்கும்போது கழிவறைகளைப் பயன்படுத்தக் கூடாது உள்ளிட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

முன்னதாக பிரசாரக் குழுவினருக்கு திருச்சி ரயில் நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் 10 மோட்டார் சைக்கிள்கள், காரில் புதுச்சேரிக்குப் புறப்பட்டனர். அவர்களை திருச்சி கோட்ட மேலாளர் உதயகுமார் ரெட்டி வழியனுப்பி வைத்தார். சனிக்கிழமை சென்னையில் இவர்களது பிரசாரம் நிறைவு பெறுகிறது. மொத்தம் 2000 கி.மீ. தொலைவுக்கு இவர்கள் இரு சக்கர வாகனங்களில் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த இலக்கு நிர்ணயித்திருக்கின்றனர்.

பேருந்து கட்டண உயர்வைக் கண்டித்து மக்கள் அதிகாரம் அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அதிகாரம் அமைப்பினர்.

மணப்பாறை, பிப். 2: திருச்சி மாவட்டம் மணப்பாறையில் தமிழக அரசின் திடீர் பேருந்து கட்டண உயர்வைக் கண்டித்து மக்கள் அதிகாரம் அமைப்பினர் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழக அரசின் பேருந்து கட்டண உயர்வால் அனைத்து தரப்பினரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் பேருந்துக் கட்டணத்தை திரும்பப்பெற வேண்டும் என வலியுறுத்தி, மக்கள் அதிகாரம் அமைப்பினர் வெள்ளிக்கிழமை மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மணப்பாறை செய்தி தொடர்பாளர் வை.கண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அரங்கசாமி, காளி, முரளி உள்ளிட்ட அமைப்பின் பிரதிநிதிகள் பேருந்து கட்டண உயர்வின் பாதிப்பு குறித்து பேசினார்கள். திருச்சி ராஜா சிறப்புரையாற்றினார். லா.லெனின் நன்றியுரை கூறினார்.

தொழிலதிபர் வீட்டில் 30 பவுன் நகை திருடிய 2 பேர் கைது

திருச்சி, பிப். 2: திருவெறும்பூர் அருகே தொழிலதிபர் வீட்டில்,30 பவுன் நகை, பொருள்களை திருடிச் சென்ற இரு இளைஞர்களை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

திருச்சி திருவெறும்பூர் அருகே உள்ள பெல்நகர் பகுதியில் உள்ள சிட்கோ தொழிற்சாலை பகுதியைச்சேர்ந்தவர் ஆரோக்கிய ரூபா (37). இவரது கணவர் அதே பகுதியில் பொறியியல் தொழிற்சாலை வைத்து நடத்தி வருகிறார். இந்நிலையில் கடந்த ஜனவரி 7-ஆம் தேதி ஆரோக்கிய ரூபா வீட்டை பூட்டிவிட்டு வெளியே சென்றார். மாலையில் திரும்பிவந்து பார்த்தபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, பீரோவில் இருந்த 30 பவுன் நகை, பொருள்களை மர்ம நபர்கள் திருடிச் சென்றது தெரியவந்தது. இதுகுறித்த புகாரின் பேரில், துவாக்குடி போலீஸார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர். இந்நிலையில் துவாக்குடி அண்ணா வளைவுப் பகுதியில் சந்தேகத்துக்கிடாக சுற்றித்திரிந்த 2 பேரை போலீஸார் பிடித்து விசாரித்தனர். அப்போது, அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர். இதையடுத்து, அவர்களிடம் நடத்தப்பட்ட தீவிர விசாரணையில் இருவரும் துவாக்குடி வாழவந்தான்கோட்டை ஈச்சங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த சசிக்குமார் (24), அவரது நண்பர் மணிகண்டன் என்பதும், இவர்கள் இருவரும் தான் ஆரோக்கிய ரூபா வீட்டில் திருடியதும் தெரியவந்தது. இதையடுத்து சசிக்குமார், மணிகண்டனை போலீஸார் கைது செய்தனர்.

திருச்சி கல்லூரியில் பிடிபட்ட மண்ணுளி பாம்பு !

திருச்சி, பிப். 2: திருச்சி வயலூர் சாலையில் உள்ள பிஷப் ஹீபர் கல்லூரியில் 'இருதலை மணியன்' என அழைக்கப்படும் சிவப்பு நிற மண்ணுளி பாம்பு வெள்ளிக்கிழமை பிடிபட்டது.

இக்கல்லூரி வளாகத்தில் உள்ள முதல்வர் குடியிருப்புக்கு அருகே பாம்பு ஒன்று ஊர்ந்து சென்றதை கண்ட பணியாளர்கள், இதுகுறித்து கல்லூரி துணை முதல்வரும், திருச்சி மாவட்ட கௌரவ வன உயிரினக் காவலருமான ஏ.ரெல்டனுக்கு தகவல் தெரிவித்தனர். அவர் அங்கு வந்து பார்த்தபோது, அது மூன்றரை கிலோ எடையும், 2 அடி நீளமும் கொண்ட சிவப்பு நிற மண்ணுளி பாம்பு என்பது தெரியவந்தது.

இதுதொடர்பாக, ரெல்டன் கூறுகையில், 'இந்த பாம்புக்கு இருதலை மணியன் அல்லது சிவப்பு உழவன் பாம்பு என இருபெயர்கள் உள்ளன. கிராமப்புறங்களில் இருதலை அல்லது மண்ணுளி பாம்பு என அழைக்கின்றனர். இவை வளைகளில் வாழக்கூடியது. உடலில் பளபளப்பான செதில்களுடன், உருளை வடிவில் தடித்த உடலுடன் இருக்கும். இதன் வால் மழுங்கி மொட்டையாக இருக்கும். செம்பழுப்பு மற்றும் சாம்பல் நிறம் அல்லது மஞ்சள்-பழுப்பு நிறத்திலும் மண்ணுளி பாம்புகள் காணப்படும். பயந்த, கூச்சம் சுபாவமுடைய இந்த பாம்புகள் இதுவரை யாரையும் கடித்ததாக பதிவுகள் இல்லை' என்றார்.

இந்த அரிய வகை பாம்பை ஆசிரியர்களும், மாணவர்களும் ஆர்வமுடன் பார்வையிட்டனர். பின்னர், திருச்சி வனத்துறையினரிடம் மண்ணுளி பாம்பு ஒப்படைக்கப்பட்டது.

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் வெள்ளிக்கிழமை பிடிபட்ட மண்ணுளி பாம்பு.

தினமணி
கொண்டாட்டம்
நாளைய இணைப்பில்
அனுபவபூர்வமாக தெரிந்துகொள்வதே ஹிந்து ஆன்மிகம்!
சிந்தை கவர்ந்த திருவிழாக்கள்:
பூடான் நிமலங் திருவிழா
-சாந்தகுமாரி சிவகடாட்சம்
தந்தைக்கு மகள் எடுக்கும் விழா
விடாதே பாண்டியா...
- டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்
பிடித்த பத்து
என்னை பக்குவப்படுத்தியவை புத்தகங்களே
-கே.பாக்யராஜ்
இங்கே லேபிள்தான் முக்கியம்!
- ராமகிருஷ்ணன்

பிளஸ்-2 செய்முறைத் தேர்வு தொடக்கம்

திருச்சி சேவா சங்க பள்ளி ஆய்வகத்தில் செய்முறைத் தேர்வில் ஈடுபட்ட பிளஸ்-2 மாணவிகள்.

திருச்சி, பிப். 2: திருச்சி மாவட்டத்தில் பிளஸ்-2 பொதுத் தேர்வெழுதும் மாணவ, மாணவிகளுக்கான செய்முறைத் தேர்வு வெள்ளிக்கிழமை தொடங்கியது.

தமிழகத்தில் பிளஸ்-2 பொதுத் தேர்வு மார்ச் 1-ஆம் தேதி தொடங்குகிறது. இத்தேர்வை மாநிலம் முழுவதும் 8.91 லட்சம் மாணவ, மாணவிகள் எழுத உள்ளனர். பொதுத் தேர்வுக்கு முன்னர் செய்முறைத் தேர்வுகளை வரும் 13-ஆம் தேதிக்குள் நடத்தி முடிக்க தேர்வுத்துறை உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, திருச்சி மாவட்டத்தில் 181 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கான செய்முறைத் தேர்வு 112 மையங்களில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. இரு கட்டங்களாக நடத்தப்படும் இந்த தேர்வு, வரும் 10-ஆம் தேதி வரை நடைபெறும்.

பிளஸ்-1 மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வு 12-ஆம் தேதி தொடங்குகிறது என மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நா. ராமகிருட்டிணன் தெரிவித்துள்ளார்.

ஆசிரியையிடம் 7 பவுன் செயின் பறிப்பு

மண்ணச்சநல்லூர், பிப்.2: திருச்சி சிறுகனூர் அருகே பள்ளி ஆசிரியையிடம் 7 பவுன் செயின் பறித்துச் சென்ற மர்ம நபர்கள் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

லால்குடி வட்டம், நெய்குப்பை கிராமத்தைச் சேர்ந்தவர் ரோஷ்லின் மாலா(42). மாற்றுத்திறனாளியான இவர், குமுளூரில் உள்ள அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இந்நிலையில், வெள்ளிக்கிழமை காலை வீட்டில் இருந்து இருசக்கர வாகனத்தில் பள்ளிக்கு சென்று கொண்டிருந்தார்.

தச்சங்குறிச்சி காட்டுப்பகுதியில் சென்றபோது, எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் 2 பேர், ரோஷ்லின் மாலாவை வழிமறித்து, அவர் அணிந்திருந்த 7 பவுன் செயினை பறித்துக் கொண்டு தப்பிச்சென்றனர். இது குறித்த புகாரின்பேரில், சிறுகனூர் போலீஸார் வழக்குப்பதிந்து, மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

திருச்சி மருத்துவக் கல்லூரி டீன் தந்தை மறைவு: கண் தானம்

திருச்சி, பிப். 2: திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் அனிதா தந்தை மறைந்ததைத் தொடர்ந்து, அவரது கண் தானமாக வழங்கப்பட்டது.

திருச்சி கி.ஆ.பெ.வி. அரசு மருத்துவக்கல்லூரி முதல்வரின் தந்தையும், திருச்சிஸ்டாண்டர்டு எலக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளருமான கணபதி உடல் நலக்குறைவால் வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

தில்லைநகர் 7-ஆவது குறுக்குத்தெருவில் உள்ள அவரது வீட்டில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்திய பிறகு இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

முன்னதாக கணபதி ஏற்கெனவே அவரது கண்களை தானமாக வழங்க பதிவு செய்திருந்தார். அதன்படி, மருத்துவக்குழுவினர் கண்களை அறுவை சிகிச்சை மூலம் எடுத்துச் சென்றனர். பின்னர், காத்திருப்போர் பட்டியலில் மூப்பு அடிப்படையில் துவாக்குடியைச் சேர்ந்த மாரிமுத்துவுக்கு வெள்ளிக்கிழமை மாலை கணபதி தானமாக வழங்கிய ஒரு கண் பொருத்தப்பட்டது. மற்றொரு கண் வேறு ஒருவருக்கு பொருத்தப்பட உள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகள்

சாரநாதன் பொறியியல் கல்லூரி : நிறுவனர் நாள் விழா, கே. சந்தானம் நினைவு சொற்பொழிவாற்றுபவர்- ஜவஹர்லால் நேரு தேசிய பொறியியல் கல்லூரி முதல்வர் எச். ஆர். மகாதேவசாமி. கல்லூரி வளாகம், பகல் 2.

இந்திராகாந்தி மகளிர் கல்லூரி: நிறுவனர் நாள் விழா, பங்கேற்பு- ஜிவிஎன் மருத்துவமனை தலைவர் வி. ஜெயபால், கல்லூரி வளாகம், காலை 11.30.

புனித வளனார் கல்லூரி: மாற்றுத் திறனாளிகளுக்கான சுய அதிகாரமளித்தல் குறித்த கருத்தரங்கம், கல்லூரி வளாகம், காலை 9.30.

இராசவேலர் செண்பகத்தமிழ் அரங்கு: அறக்கட்டளை சொற்பொழிவு தொடக்க விழா, காந்தி சாலை, ஸ்ரீரங்கம், மாலை 6.

சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி : ஊட்டச்சத்து மற்றும் உணவுக்கட்டுப்பாடு குறித்த கருத்தரங்கம், கல்லூரி வளாகம், மதியம் 2. 30.

அண்ணா நினைவு நாள் பொது விருந்து: அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில், பகல் 10 மணி.

மத்திய அரசின் பட்ஜெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருச்சி, பிப். 2: திருச்சி திருவெறும்பூர் பெல் பயிற்சி மையத்தில் மத்திய அரசின் பட்ஜெட்டை கண்டித்து வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பெல் பாரதீய மஸ்தூர் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் செயல் தலைவர் விஷா குமார் தலைமை வகித்தார். செயலாளர் சங்கர் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். நிர்வாகி மணி, துணைச் செயலாளர் ரெங்கராஜ் உள்ளிட்ட மஸ்தூர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர் . இதில், மத்திய அரசு பட்ஜெட்டில் தொழிலாளர்களின் வருமான வரி உச்சவரம்பில் மாற்றம் செய்யாதது, இசிஎஸ்எஸ் வரியில் கல்வியுடன், மருத்துவத்தையும் இணைத்து 4 சதவீதமாக வரியை உயர்த்தியது, நலிவடைந்துள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கு மறுசீரமைப்பு நிதி ஒதுக்காதது, பொதுத்துறை நிறுவன பங்குகளை விற்பது ஆகியவற்றை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

சிமென்ட் ஆலைக்கு எரிபொருளாகும் மக்காத குப்பைகள்!

திருச்சி, பிப்.2: திருச்சி மாநகராட்சியின் திட்டக்கழிவு மேலாண்மை திட்டத்தின் ஒரு பகுதியாக மக்காத குப்பைகளை சிமென்ட் ஆலைக்கு எரிபொருளாக அனுப்ப ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ஆண்டுக்கு 12 ஆயிரம் மெட்ரிக் டன் மக்காத குப்பைகள் வழங்கப்படுகிறது. மத்திய அரசின் தூய்மை நகரங்களின் பட்டியலில் திருச்சி மாநகராட்சி 6-ஆவது இடத்தில் உள்ளது. இந்தாண்டு முதலிடத்தை பெறும் வகையில் மாநகரில் பல்வேறு தூய்மைத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில்

அதில், முதன்மைத் திட்டமாக திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வீடுகள், கடைகள் என அவரவர் இருப்பிடம் தேடிச் சென்று குப்பைகளை தரம் பிரித்து பெறுவதுடன், அவற்றை உரமாகவும் மாற்றி விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. உரம் தயாரித்தது போக மீதமுள்ள மக்காத குப்பைகளை, மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவு ஆலைகளுக்கும், சிமென்ட் ஆலைகளுக்கும் எரிபொருள் தேவைக்காக வழங்கப்படுகிறது. இதன் மூலம் வருவாய் பெற்று, திட்டப் பணிகளை மேலும் சிறப்பாக செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் 450 மெட்ரிக் டன் குபபைகளில் 350 மெட்ரிக் டன் குப்பைகளை தனியார் நிறுவனம் பெற்று வருகிறது.

மக்காத குப்பையை சிமென்ட் ஆலை பயன்பாட்டுக்கு லாரியில் அனுப்பும் பணியை கொடியசைத்து தொடங்கி வைத்த திருச்சி மாநகராட்சி ஆணையர் ந. ரவிச்சந்திரன்.

இந்த நிறுவனமானது மக்காத குப்பைகளை அரியலூரில் உள்ள அல்ட்ரா டெக் சிமென்ட் நிறுவனத்துக்கு தேவைக்கு ஏற்ற வடிவத்தில், உரிய தரத்தில் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பை வழங்கப்படவுள்ளது. இந்த மக்காத குப்பைகளை சிமென்ட் ஆலை நிர்வாகம் எரிபொருளுக்கு பயன்படுத்திக்கொள்கிறது. இந்த ஒப்பந்தப்படி அரியமங்கலம் குப்பைக் கிடங்கில் சேகரமான மக்காத குப்பைகளை சிமென்ட் ஆலைக்கு அனுப்பும் பணி வியாழக்கிழமை நடைபெற்றது.

15 டன் மக்காத குப்பைகளுடன் சென்ற லாரியை மாநகராட்சி ஆணையர் ந. ரவிச்சந்திரன் வழியனுப்பினார். இந்நிகழ்ச்சியில், உதவி ஆணையர் வைத்தியநாதன், உதவி செயற்பொறியாளர் ஜி.குமரசேன், குப்பைகளை கையாளும் தனியார் நிறுவன மேலாளர் விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வணிக நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

திருச்சி மாநகராட்சிப் பகுதியில் உள்ள வணிக நிறுவனங்கள் அனைத்தும் குப்பைகளை கையாள தனித்தனியே வண்ணத் தொட்டிகள் வைத்திருக்க வேண்டும் என மாநகராட்சி ஆணையர் ந. ரவிச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக, அவர் கூறியது:

மாநகராட்சியின் எல்லைக்குள்பட்ட பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்கள், கடைகளில் தினசரி திடக்கழிவுகளுக்கு ஏற்ப தனித்தனியே குப்பைத் தொட்டிகளை பராமரிக்க வேண்டும். மக்கும் குப்பைகளை சேகரிக்க பச்சை நிற குப்பைத்தொட்டியும், மக்காத குப்பைகளுக்கு நீல நிற குப்பைத் தொட்டியும் வைத்திருக்க வேண்டும். 3 நாள்களுக்குள் இந்த குப்பைத் தொட்டிகளை அவரவர் கடை முன்பாக வைக்க வேண்டும். இல்லையெனில், தொடர்புடைய நிறுவனங்கள், கடைகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றார் ஆணையர் ரவிச்சந்திரன்.

மருத்துவ ஆய்வக சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருச்சி, பிப். 2: ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, திருச்சியில் அரசு மருத்துவ ஆய்வக நுட்புநர் சங்கத்தினர் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திருச்சி மத்திய பேருந்து நிலையம் வ.உ.சி. சாலையிலுள்ள இணை இயக்குநர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர். வசந்த் தலைமை வகித்தார்.

இதில், ஆய்வக நுட்புநர் நிலை-1 க்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும், காலிப்பணியிடங்களை உயர் நீதிமன்ற ஆணைப்படி நிரப்ப வேண்டும், புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் பிரிக்கப்பட்ட மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளில் ஆய்வக நுட்புநர் நிலை-1 உருவாக்க வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட ஆறு அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலர் செல்வராணி, மாவட்டச் செயலர் பி. அனந்தலட்சுமி, மாநிலத் துணைத் தலைவர் ஹெலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

லால்குடியில் ஆக்கிரமிப்புகள் அகற்றம்

லால்குடி, பிப். 2: லால்குடி பேரூராட்சியில் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருச்சி மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி, லால்குடி பேரூராட்சி நிர்வாகம், காவல் துறை, நெடுஞ்சாலைத்துறையினர் இணைந்து இப்பணியில் ஈடுபட்டனர்.

லால்குடி வடக்கு வீதி, கீழவீதி, தெற்கு வீதி, மேலவீதி, திருமஞ்சனவீதி, சன்னதி வீதி ஆகிய பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. இப்பணி இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணப்பாறை அருகே சாலை சீரமைப்பு பணி: எம்எல்ஏ சந்திரசேகர் தொடங்கி வைத்தார்

விடத்திலாம்பட்டி – ஆணையூர் சாலை சீரமைக்கும் பணிக்கான பூமிபூஜையில் கலந்து கொண்ட எம்எல்ஏ ஆர்.சந்திரசேகர்.

மணப்பாறை, பிப்.2: மணப்பாறை நகர்புறங்களில் பழுதாகியுள்ள சாலைகளை சீராமைக்கும் பணிகளுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கியது. அதற்கான வெள்ளிக்கிழமை நடைபெற்ற பூமி பூஜையில் சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு பணியினை துவக்கி வைத்தார்.

மணப்பாறையை அடுத்த வையம்பட்டி ஒன்றியம் வீ.பெரியப்பட்டி ஊராட்சிக்கு உள்பட்ட விடத்திலாம்பட்டி – ஆணையூர் இடையிலான சாலையை ரூ.3 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க ஆட்சியர் உத்தரவிட்டார். அதன்படி, வெள்ளிக்கிழமை இதற்கான பூமி பூஜை நடைபெற்றது. இதில், மணப்பாறை எம்எல்ஏ ஆர்.சந்திரசேகர் பங்கேற்று, சாலை அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அதிமுக பொருளாளர் செல்வராஜ், நகரச் செயலாளர் பவுன்.ராமமூர்த்தி, முன்னாள் நகர் மன்றத் துணை தலைவர் நெட்ஸ் இளங்கோ, மாவட்ட பிரதிநிதி ஏ.டி.எஸ்.ராமச்சந்திரன், மணப்பாறை நகராட்சி ஆணையர்(பொறுப்பு) உள்பட பலர் கலந்து கொண்டனர். 8 ஆண்டுகளுக்கு பிறகு இந்த சாலை சீரமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஹார்வர்டு பல்கலை. தமிழ் இருக்கைக்கு திருச்சி அம்மன் ஸ்டீல்ஸ் ரூ.1 லட்சம் நிதியுதவி

திருச்சி, பிப். 2: அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு திருச்சி அம்மன் ஸ்டீல்ஸ் நிறுவனம் சார்பில் ரூ.1 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

செம்மொழி அந்தஸ்துடன், திராவிட மொழிகளுக்குத் தாய் மொழியாக விளங்குவது தமிழ் மொழி மட்டுமே. இலக்கண, இலக்கியங்களை தன்னகத்தே கொண்ட ஏற்றமிகு மொழியான தமிழுக்கு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் இருக்கை அமைப்பதற்கு அமெரிக்க வாழ் தமிழர்களான மருத்துவர்கள் வி. ஜானகிராமன், திருஞானசம்பந்தம் ஆகியோர் நிதி திரட்டி முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக தமிழக அரசு ரூ.10 கோடி நிதியுதவி அளித்துள்ளது. மேலும், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள், தமிழ் அமைப்புகள், தமிழ் திரையுலகினரும் நிதியுதவி அளித்து வருகின்றனர்.

ஹார்வர்டு பல்கலை. தமிழ் இருக்கைக்கு ரூ.1 லட்சம் நிதியுதவிக்கான காசோலையை பேராசிரியர் கு.ஞானசம்பந்தனிடம் வழங்கிய திருச்சி அம்மன் ஸ்டீல்ஸ் உரிமையாளர் முத்துராமலிங்கம். உடன், திருச்சி நகைச்சுவை மன்றச் செயலாளர் சிவகுருநாதன், முனைவர் அமுதா ஞானசம்பந்தன்.

இதன் தொடர்ச்சியாக திருச்சி அம்மன் ஸ்டீல்ஸ் நிறுவனம் சார்பில் ரூ.1 லட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. நிதி திரட்டும் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும், மதுரை நகைச்சுவைமன்றத் தலைவருமான பேராசிரியர் கு. ஞானசம்பந்தனிடம் இதற்கான காசோலையை அம்மன் ஸ்டீல்ஸ் நிறுவன உரிமையாளர் முத்துராமலிங்கம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், திருச்சி நகைச்சுவை மன்றச் செயலர் சிவகுருநாதன், முனைவர் அமுதா ஞானசம்பந்தன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். தமிழ் இருக்கை அமைக்க 6 மில்லியன் அமெரிக்க டாலர் தேவைப்படுகிறது. இருக்கை தொடங்க காரணமாக இருந்த மருத்துவர்களே 1 மில்லியன் டாலர் அளித்துவிட்டனர். இதர வகையில் நன்கொடையாக 4 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் பெறப்பட்டுள்ளன. தொடர்ந்து நன்கொடைகள் பெறப்பட்டு வருவதாக ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

ராஜா சில்க் பேலஸ்
பட்டுக்கோட்டை.
வேலைக்கு ஆட்கள் தேவை
படித்த, படிக்காத
ஆண்கள், பெண்கள்
இருபாலரும் தேவை
உணவு, தங்குமிடம் இலவசம்.
சம்பளம் ரூ. 7000 முதல் 15000 வரை
தொடர்புக்கு: 99400 05601

TVS
பொங்கலுக்கு பிறகும் தொடரும் சந்தோஷம்
அம்மா இரு சக்கர வாகனம் திட்டத்தில் பயன் பெறுவீர்
(http://www.tamilnadumahalir.org)
₹63,415/-** ஆன்-ரோடு விலை
₹64,268/-** ஆன்-ரோடு விலை
₹59,873/-** ஆன்-ரோடு விலை
₹50,999/-** ஆன்-ரோடு விலை
TVS Jupiter அதிகத்தின் பயன்
BEST IN CLASS MILEAGE 62*
TVS Wego 110
BEST IN CLASS MILEAGE 62*
Zest 110
BEST IN CLASS MILEAGE 62*
Scooty Pep+
BEST IN CLASS MILEAGE 65*
5 YEAR WARRANTY
Powered by TVS CREDIT
Download TVS Service App

Accessories shown in the ad may not be a part of the standard equipment. ^On select models. 0% PF + low interest offer.
^^Subject to vehicle condition & prevailing exchange market rate. Offers may vary from model to model and at Dealer's discretion.
Finance at the sole discretion of the financier & offers cannot be clubbed together. *Under simulated conditions. Terms and conditions apply.
For T&C, please visit www.tvsmotor.com **On-road price in Tamil Nadu for basic variant of Jupiter, Wego, Zest & Pep+. +5 yr. Warranty without any additional charges.

'0' பிராசஸிங் மற்றும் '0' ஆவணக் கட்டணம்^ | 3.99% குறைந்த வட்டி விகிதம்^ | எக்ஸ்சேஞ்ச் மீது '0' முன்பணம்# | ₹5555/-# முதல் மிகக் குறைந்த முன்பணம்

FOR ALL INSTITUTIONAL/BULK REQUIREMENTS, PLEASE MAIL corporatecustomersupport@tvsmotor.co.in
Toll Free Number: 1-800-266-0090

dentsuindia/dm che/01/18

ஆன்மிக சிந்தனை

யாரையுமே தனிப்பட்ட நபராகவோ, எதிரியாகவோ கருத வேண்டாம். எல்லோரும் ஒன்றேதான். எனவே, யார் உன்னை அணுகினாலும் அவரை அவமரியாதை செய்ய வேண்டாம். பல ஜென்மத்துத் தொடர்பால்தான் அந்த நபர் உன்னை நோக்கி வருகிறார். எனவே, முடிந்த வரைக்கும் அவருக்கு உதவி செய். அவரை உன் சொந்தமாகவே ஏற்றுக்கொள்.

– ஷீரடி ஸ்ரீசாய்பாபா

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு. அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

– சங்கீதம் 111:10

மனிதர்களே! உங்களையும், உங்களுக்கு முன் சென்றோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். இதனால் (தண்டனையிலிருந்து) தப்பித்துக் கொள்வீர்கள்.

– திருக்குர்ஆன் 2: 20

இன்றும் நாளையும்

சனிக்கிழமை

(03-02-2018)

ஹேவிளம்பி ஆண்டு, தை 21

பிறை: தேய்பிறை

திதி	: திருதியை பிற்பகல் 02.52 வரை, பிறகு சதுர்த்தி.
நட்சத்திரம்	: பூரம் பிற்பகல் 03.38 வரை, பிறகு உத்திரம்.
யோகம்	: சித்த /மரணயோகம்.
ராகுகாலம்	: காலை 9.00 – 10.30 மணி.
எமகண்டம்	: பகல் 1.30 – 3.00 மணி.
சூலம்	: கிழக்கு
நல்ல நேரம்	: காலை 7 – 8 மணி. மாலை 5 – 6 மணி.

இன்றைய விசேஷம்: சங்கடஹர சதுர்த்தி. குச்சனூர் சனிபகவான் சிறப்பு அலங்காரம். பழநி ஆண்டவர் காலை தோளுக்கினியானிலும், இரவு தெப்பத்தேரிலும் விழா. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் திருக்கோயிலில் வரதராஜ மூலவருக்குத் திருமஞ்சன ஸேவை. சிருங்கேரி சாரதாம்பாள் ரதோற்ஸவம். உப்பிலியப்பன் கோயில் ஸ்ரீநிவாசப் பெருமாள் சிறப்பு ஸ்திரவார வழிபாடு.

மேஷம்	சாந்தம்
ரிஷபம்	சுகம்
மிதுனம்	இரக்கம்
கடகம்	நிறைவு
சிம்மம்	கவனம்
கன்னி	நன்மை
துலாம்	உறுதி
விருச்சிகம்	செலவு
தனுசு	பெருமை
மகரம்	இன்பம்
கும்பம்	தனம்
மீனம்	தடை

ஞாயிற்றுக்கிழமை

(04-02-2018)

ஹேவிளம்பி ஆண்டு, தை 22

பிறை: தேய்பிறை

திதி	: சதுர்த்தி நண்பகல் 01.52 வரை; பிறகு பஞ்சமி.
நட்சத்திரம்	: உத்திரம் பிற்பகல் 03.06 வரை, பிறகு அஸ்தம்.
யோகம்	: அமிர்தயோகம்.
ராகுகாலம்	: மாலை 4.30 – 6.00 மணி.
எமகண்டம்	: நண்பகல் 12.00 – 1.30 மணி.
சூலம்	: கிழக்கு
நல்ல நேரம்	: காலை 7 – 8 மணி. மாலை 3 – 4 மணி.

இன்றைய விசேஷம்: சுப முகூர்த்த தினம். திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி பிரதிஷ்டா தினம். கீழ்த்திருப்பதி கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதி எதிரில் அனுமாருக்குத் திருமஞ்சன ஸேவை. சண்டேசுவர நாயனார் குருபூஜை. சூரியனார் கோவில் சூரியநாராயணருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம்.

மேஷம்	உத்வேகம்
ரிஷபம்	நட்பு
மிதுனம்	மேன்மை
கடகம்	ஆர்வம்
சிம்மம்	போட்டி
கன்னி	தெம்பு
துலாம்	இன்பம்
விருச்சிகம்	நன்மை
தனுசு	பொறுப்பு
மகரம்	நிறைவு
கும்பம்	பொறுமை
மீனம்	வெற்றி

மேட்டூர் அணை நீர்மட்டம்

தஞ்சாவூர், பிப். 2: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 43.84 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 38 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 50 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

நாணய (இந்திய) மதிப்பு

அமெரிக்க டாலர்..........ரூ. 64.11
யூரோ............................ரூ. 80.08

சந்தை நிலவரம்

	தங்கம் (22 கேரட் 1 கிராம்)	வெள்ளி (10 கிராம்)
தஞ்சாவூர்	ரூ.2,918	ரூ. 425
கரூர்	ரூ.2,918	ரூ. 425
பெரம்பலூர்	ரூ.2,890	ரூ. 430
அரியலூர்	ரூ.2,920	ரூ. 425
புதுக்கோட்டை	ரூ.2,925	ரூ. 426
திருச்சி	ரூ.2,918	ரூ. 425

காரீப் பயிர்களுக்கு ஒன்றரை மடங்கு ஆதார விலை

மத்திய அரசின் பட்ஜெட் அறிவிப்பு

சாத்தியமா; கண்துடைப்பா?

நமதுநிருபர்

திருச்சி, பிப். 2: கோடைகால பயிர்களுக்கு (காரீப்) உற்பத்தி செலவிலிருந்து ஒன்றரை மடங்கு வரை குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்க முடிவு செய்திருப்பதாக பட்ஜெட்டில் மத்திய அரசு அறிவித்துள்ளது கண்துடைப்பு நடவடிக்கையே என விவசாயிகள் ஒருங்கிணைப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகளின் போட்டி நாடாளுமன்ற கூட்டம் புதுதில்லியில் கடந்த நவ.20, 21, 22 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதில், கடனிலிருந்து விவசாயிகளின் விடுதலை சட்ட வரைவு-2017, வேளாண் விளைபொருள்களுக்கு உறுதி செய்யப்பட்ட லாபகரமான விலை பெறுவதற்கான விவசாயிகளின் உரிமை சட்ட வரைவு-2017 ஆகிய இரு முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த சட்ட வரைவில் இடம்பெற்றுள்ள சாராம்சங்களை நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கும், விவசாய சங்கப் பிரதிநிதிகளுக்கும் கொண்டு சேர்க்கவும், விவசாயிகளை ஓரணியில் திரட்டவும் அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் குழு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

பி.அய்யாக்கண்ணு

இந்நிலையில், மத்திய அரசின் பட்ஜெட்டில் கோடைகாலபயிர்களுக்கு (காரீப்) நெல், சோளம், சோயா, பீன்ஸ், பருப்பு வகைகளுக்கு உற்பத்திச் செலவில் இருந்து ஒன்றரை மடங்கு வரை குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக, **தேசிய-தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பி. அய்யாக்கண்ணு கூறியது:** விளைபொருள்களுக்கு உற்பத்தி செலவைவிட கூடுதலாக 50 சதவீதம் விலை சேர்த்து குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற எம்.எஸ். சுவாமிநாதன் குழு அளித்த பரிந்துரை 12 ஆண்டுகளாகியும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதை அமல்படுத்தக் கோரி உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அண்மையில் மத்திய அரசு பதில் அளித்தபோது, வேளாண் விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வது அரசின் கொள்கை முடிவு என வாதிட்டது. இதையடுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றத்திலேயே குறைந்தபட்ச ஆதார விலை குறித்து தெரிவிக்காத பாஜக அரசு, இப்போது பட்ஜெட்டில் ஒன்றரை மடங்கு குறைந்தபட்ச ஆதாரவிலை அறிவித்திருப்பது ஏமாற்று வேலை. இது சாத்தியமில்லை என தெரிந்தே இத்தகைய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

பூ.விசுவநாதன்

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத்தலைவர் பூ. விசுவநாதன் கூறியது: வேளாண் விளை பொருளுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் அறிவித்த பரிந்துரைப்படி விலை நிர்ணயம் செய்வோம் என உறுதியளித்து, பாஜக ஆட்சிக்கு வந்தது. தற்போது 4 ஆண்டுகளாகியும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இப்போது, 2022-க்குள் ஒன்றரை மடங்கு விலை கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளது. ஆனால், அதற்கான வழிமுறைகளையோ, சாத்தியக்கூறுகளையோ தெரிவிக்கவில்லை. எனவே, தேர்தலை கருத்தில்கொண்டு விவசாயிகளை குழப்பும் நோக்கில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கடன் தள்ளுபடி, டீசல் விலையை அரசு நிர்ணயம்செய்தல், இடுபொருள், விளைபொருளுக்கு ஜிஎஸ்டி வரி ரத்து உள்ளிட்ட விவசாயிகளின் பிரதான எதிர்பார்ப்புகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றார்.

பி.ஆர்.பாண்டியன்.

தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பி.ஆர். பாண்டியன் கூறியது:

வேளாண் உற்பத்திக்கு வேளாண்மைத் துறை, கொள்முதலுக்கு உணவுத் துறை, விலை நிர்ணயம் செய்ய நிதித்துறை, இடுபொருள் விலை நிர்ணயம் செய்ய ரசாயனத்துறை, தண்ணீர் விநியோகத்துக்கு பொதுப்பணித்துறை என விவசாயிகள் பல்வேறு துறைகளிடம் சிக்கி அல்லல்படுகின்றனர். இந்தச் சூழலில் ஒன்றரை மடங்கு குறைந்தபட்ச ஆதார விலை என மத்திய அரசு அறிவித்துள்ளது. இது சாத்தியமில்லை. முதலில் வேளாண்மை சார்ந்த அனைத்தையும் ஒரே துறையின் கீழ் கொண்டுவர வேண்டும். அதன்பிறகே விளைபொருளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிப்பது சாத்தியமாகும் என்றார்.

ஆக்கிரமிப்புகளை அகற்றச் சென்ற

அதிகாரிகள் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைக்க முயற்சி

பெண் உள்பட 3 பேர் கைது

கம்பம் அருகே உள்ள குள்ளப்பகவுண்டன்பட்டியில் ஆக்கிரமிப்புகளை அகற்றச் சென்ற ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் மீது மண்ணெண்ணெய் ஊற்றும் பெண் செல்வி.

கம்பம், பிப். 2: தேனி மாவட்டம் கம்பம் அருகே வெள்ளிக்கிழமை ஆக்கிரமிப்புகளை அகற்றச் சென்ற அதிகாரிகள் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரித்துக் கொல்ல முயன்றதாக பெண் உள்பட 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

இங்குள்ள குள்ளப்பகவுண்டன் ஊராட்சியில் சுருளியாறு மின்நிலையம் செல்லும் பிரதான சாலையில் ஆக்கிரமிப்புகள் உள்ளதாக வந்த புகாரையடுத்து, அதை அகற்ற கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சார்பில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு முன்னெச்சரிக்கை நோட்டீஸ் தரப்பட்டது. பின்னர் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆக்கிரமிப்புகள், அகற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அவற்றை அகற்ற கம்பம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரெங்கராஜன், சேதுகுமார் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், கூடலூர் தெற்கு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயக்குமார் மற்றும் போலீஸார் சென்றனர். அப்போது அதிகாரிகள் அங்குள்ள பிள்ளையார் கோயில் பிரதான சாலையில் ஆக்கிரமித்துள்ள செல்வி (45) என்பவரின் வீட்டில் பொருள்களை எடுத்துக் கொள்ளுமாறு கூறினர். அதற்கு செல்வி மற்றும் அவரது உறவினர்கள் மறுத்து அதிகாரிகளை தகாத வார்த்தைகளால் பேசினராம். மேலும் ஊராட்சி எழுத்தர் ஈசுவரனை, செல்வி தாக்கினாராம். பின்னர் அங்கு மண்ணெண்ணெய்கேனுடன் வந்த செல்வி, கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் சேதுகுமார் மீது ஊற்றினார். இதில் அருகில் இருந்த ஆணையர் ரெங்கராஜன், காவலர் நவபிரசாத் மீதும் மண்ணெண்ணெய் பட்டது. இதைத் தொடர்ந்து வட்டார வளர்ச்சி ஆணையர் ரெங்கராஜன் புகாரின் பேரில் செல்வி, அவரது கணவர் கண்ணன் (50), செல்வியின் அண்ணன் சுந்தரபாண்டியன் ஆகியோரை கைது செய்த போலீஸார் மேலும் 15 பேர் மீது வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். பின்னர் மாலை 3 மணிக்கு மேல், அதிகாரிகள் தொடர்ந்து ஆக்கிரமிப்புகளை அகற்றினர்.

பைந்தமிழ் இயக்க பாவரங்கம்

விழாவில், மலேசியா நாட்டின் பாவலர் கோ. ராசுவுக்கு நினைவு பரிசு வழங்குகிறார் உலகத்தமிழ் கழக இயக்குநர் பழ. தமிழாளன்.

திருச்சி, பிப். 2: திருச்சி உலகத் தமிழ் கழகம், பைந்தமிழ் இயக்கம் ஆகியவை சார்பில் தமிழ்ப் புத்தாண்டு சுறவப் பொங்கல் விழா பாவரங்கம் நடத்தப்பட்டது. சுறவம் (தை) முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாட வேண்டும் என்பதை தமிழ் ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதன்படி, திருச்சி உலகத் தமிழ்க் கழகம், பைந்தமிழ் இயக்கம் ஆகியவை சார்பில் தமிழ்ப் புத்தாண்டு சுறவப் பொங்கல் விழா பாவரங்கம் நடத்தப்பட்டது.

திருச்சி சுருதி மஹாலில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு கவிஞர் வா.மு. சேதுராமன் தலைமை வகித்தார். பைந்தமிழ் இயக்க துணை இயக்குநர் சொ. வேல்முருகன் வரவேற்றார். சிந்தனையாளர் கழகத் தலைவர் கு.ம. சுப்பிரமணியன், ஆசிரியர் சி. வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழின் சிறப்புகள் குறித்து கவிஞர்கள், புலவர்கள், பாவலர்கள் என 17 பேர் பாவரங்கம் நிகழ்த்தினர்.

விழாவில், மலேசியா நாட்டின் பாவலர் கோ. ராசுவின் தமிழ்ப் பணியை பாராட்டி, உலகத் தமிழ் கழக இயக்குநரும், பொதுச் செயலாளருமான பழ. தமிழாளன் பரிசு வழங்கி பாராட்டி பேசினார். பாவலர் கா. மாரிமுத்து நன்றி கூறினார்.

கள்ள துப்பாக்கி விற்பனை வழக்கு

தனிப்படை போலீஸாரிடம் சிக்கிய நெல்லை ரௌடிகள்

திருச்சி, பிப். 2: கள்ளத் துப்பாக்கி விற்பனை வழக்கில் திருச்சி தனிப்படை போலீஸாரிடம் நெல்லையைச் சேர்ந்த பிரபல ரௌடிகள் 3 பேர் சிக்கியுள்ளனர்.

சென்னை பேசின்பிரிட்ஜ் காவல் நிலைய குற்றப்பிரிவு தலைமைக் காவலர் பரமேஸ்வரன் (29) கடந்த 26–ஆம் தேதி, திருச்சி ஹோட்டலில் கள்ளத் துப்பாக்கியுடன் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அருகில் மற்றொரு ஹோட்டலில் தங்கியிருந்த பரமேஸ்வரனின் நண்பர்களான சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த நாகராஜ், பட்டுக்கோட்டை திருச்சிற்றம்பலம் பகுதியைச் சேர்ந்த சிவா ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து அதிநவீன எம்.எம். 7.65 பிஸ்டல்கள்–2 , 10 தோட்டாக்கள் மற்றும் செல்லிடப்பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்நிலையில், பரமேஸ்வரன் உள்ளிட்ட 3 பேரிடமும் திருச்சி மாநகர காவல் துணை ஆணையர் சக்தி கணேஷ் தலைமையிலான தனிப்படை போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர். இதில், சென்னை மற்றும் கோவையைச் சேர்ந்த வழக்குரைஞர்கள், ரியல் எஸ்டேட் அதிபர்கள் இருவர் ஆகியோரிடம் 4 கள்ளத் துப்பாக்கிகள் விற்பனை செய்த விவரங்களை தெரிவித்தனர். மேலும், திருச்சியில் தொழில் அதிபர் ஒருவருக்கும், ரௌடி கும்பலுக்கும் இரு துப்பாக்கிகளை விற்பனை செய்ய வந்தபோது பிடிபட்டதாக மூவரும் தெரிவித்தனர்.

அவர்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில், தனிப்படை போலீஸார் வியாழக்கிழமை திருநெல்வேலிக்கு சென்று, அங்கு 3 பேரை பிடித்து வந்து, ரகசிய இடத்தில் வைத்து விசாரித்து வருகின்றனர். பிடிபட்டுள்ள மூவருமே தென் மாவட்டத்தில் பிரபல ரௌடிகள் எனக் கூறப்படுகிறது. எனவே, பரமேஸ்வரன் தென் மாவட்ட ரவுடிகளுக்கும் துப்பாக்கி விற்பனை செய்திருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு, சென்னையில் பிடிபட்ட கள்ளத் துப்பாக்கி வழக்குடன் சேர்த்து சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளதால், திருச்சி போலீஸார் விசாரணையை நிறுத்தி விட்டனர். பரமேஸ்வரன் உள்ளிட்டோரையும், காவலில் எடுத்து விசாரிக்கும் முடிவையும் திருச்சி தனிப்படை போலீஸார் கைவிட்டுள்ளனர்.

வரகனேரி பகுதியில் இன்று மின்தடை

திருச்சி, பிப். 2: திருச்சி வரகனேரி பகுதியில் சனிக்கிழமை மின் விநியோகம் இருக்காது.

இதுதொடர்பாக திருச்சி நகரிய மின்வாரிய செயற்பொறியாளர் சு. கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வரகனேரி துணை மின்நிலையத்தில் மாதாந்திர பாரமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், மகாலட்சுமி நகர், தனரத்தினம் நகர், வெல்டர்ஸ் நகர், தாராநல்லூர், அலங்கநாதபுரம், வீரமாநகரம், பூக்கொல்லை, காமராஜர் நகர், செக்கடி பஜார், பாரதி நகர், கலைஞர் நகர், ஆறுமுகா கார்டன், பி.எஸ். நகர், லட்சுமிபுரம், புறவழிச்சாலை, வரகனேரி, பெரியார் நகர், பிச்சை நகர், அருளானந்தபுரம், அன்னைநகர், மல்லிகைபுரம், கீழ்புதூர், படையாட்சி தெரு, தர்மநாதபுரம், கல்லுக்காரத் தெரு, கான்மியான் மேட்டுத்தெரு, துரைசாமிபுரம், இருதயபுரம், குழுமிக்கரை, மரியம்நகர், சங்கிலியாண்டபுரம், பாத்திமா தெரு, அன்புநகர், பெரியபாளையம், பிள்ளை மாநகர், பென்சனர் தெரு, எடத்தெரு, முஸ்லீம் தெரு, ஆனந்தபுரம், நித்யானந்தபுரம், பருப்புகாரத்தெரு, சன்னதி தெரு, பஜனைகூடத்தெரு ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை (பிப்.3) காலை 9.45 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் இருக்காது.

லஞ்ச வழக்கில் பிடிபட்ட திருச்சி பொறியாளர் வீட்டில் 1 கிலோ தங்கம், 2 கிலோ வெள்ளி பறிமுதல்

திருச்சி, பிப். 2: திருச்சியில் லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் வீட்டில் 1 கிலோ தங்கம், 2 கிலோ வெள்ளி, ரூ. 4.50 லட்சம் ரொக்கம், ஆவணங்களை லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி திருவானைக்கா பெரியார் நகரைச் சேர்ந்தவர் முரளிதரன், தனது கிரஷர் உரிமத்தை புதுப்பிக்க திருச்சி மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்தார். அப்போது, உரிமம் புதுப்பிக்க வேண்டுமானால் தனக்கு ரூ.1.50 லட்சம் லஞ்சம் தர வேண்டும் என மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளர் ரெங்கசாமி (57) கூறியுள்ளார். இது குறித்து முரளிதரன் லஞ்ச ஒழிப்பு போலீஸில் புகார் அளித்தார். இந்நிலையில், பொறியாளர் ரெங்கசாமி முன்பணமாக ரூ.50 ஆயிரம் பெற்றபோது, லஞ்ச ஒழிப்பு போலீஸார் அவரை வியாழக்கிழமை கைது செய்தனர். இதையடுத்து திருவானைக்கா அகிலா நகர் பகுதியில் உள்ள வீடு உள்பட ரெங்கசாமியின் 3 வீடுகள், அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை மேற்கொண்டனர். இதில், ரூ. 27 லட்சம் மதிப்பில் அசையா சொத்துகளின் பத்திரங்கள், ஒரு கிலோ தங்க நகைகள் மற்றும் கட்டிகள், 2 கிலோ வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் நகைகள், 8 வங்கி கணக்கு புத்தகங்கள், ரூ. 4.50 லட்சம் ரொக்கம், வங்கி லாக்கர் சாவி உள்ளிட்டவற்றை லஞ்ச ஒழிப்பு போலீஸார் வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்தனர்.

பாஜக பிரமுகர் ஸ்ரீதருக்கு அஞ்சலி

டாக்டர் ஸ்ரீதரின் உருவப்படத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்திய பாஜகவினர்.

திருச்சி, பிப். 2: திருச்சி மாநகர், மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் முன்னாள் மாவட்டத் தலைவர் டாக்டர் ஸ்ரீதரின் நினைவு அஞ்சலி கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

உறையூர் காவேரி நகரில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு பாஜக மாவட்டத் தலைவர் தங்க. ராஜய்யன் தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலர்கள் கே. பாலன், டி. மோகன், எஸ்.பி. சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், டாக்டர் ஸ்ரீதரின் உருவப்படத்தை மாநிலப் பொதுச் செயலர் கருப்பு முருகானந்தம் திறந்து வைத்து பேசினார்.

இக்கூட்டத்தில், பாஜக கோட்டப் பொறுப்பாளர் சிவசுப்பிரமணியன், இணை பொறுப்பாளர் இல. கண்ணன், மண்டல் தலைவர் தர்மராஜ், பொதுச்செயலர் ஹரிசுந்தர் மற்றும் மாநில, மாவட்ட, மண்டல் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஆட்சி முடிவுக்கு வந்தால்தான் தமிழகத்துக்கு விடிவு

தஞ்சாவூர், பிப். 2: இந்த ஆட்சி முடிவுக்கு வந்தால்தான் தமிழகத்தில் விடிவு பிறக்கும் என ஆர்.கே. நகர் சட்டப்பேரவை உறுப்பினர் டிடிவி. தினகரன் தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தை அடுத்த சோழபுரத்தில் வெள்ளிக்கிழமை மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை தொடங்கிய அவர் மேலும் பேசியது:

விவசாயிகளின் துயரங்களை உணர்ந்த ஜெயலலிதா, உச்சநீதி மன்றம் சென்று காவிரி நீரைப் பெற்றுத் தர சட்டப் போராட்டம் நடத்தினார். ஆனால், தற்போது காவிரி டெல்டாவில் சம்பா நெற்பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்து கருகி வரும் நிலையில், நமக்குரிய தண்ணீரைப் கேட்டுப் பெறாமல், கர்நாடக முதல்வரை சந்திக்க நேரம் கேட்டுக் கொண்டு இருக்கிறார் தமிழக முதல்வர்.

தமிழக மக்களின் உரிமைகளை காப்பதற்காக பாடுபட்டு ஆட்சி நடத்தியவர் ஜெயலலிதா; ஆனால் மத்திய அரசிடம் தமிழக மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்து விட்டு, மத்திய அரசின் நிழலாக தற்போதைய தமிழக அரசு செயல்படுகிறது.

டெல்டா மாவட்டப் பகுதிகளில் மீத்தேன், ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட திட்டங்களை எதிர்த்து விவசாயிகள் போராடி வருகின்றனர். ஜெயலலிதா ஆட்சி நடந்தபோது, இத்திட்டங்களை எல்லாம் எதிர்த்தார். அவர் எதிர்த்த திட்டங்களை எல்லாம் மத்திய அரசுக்கு பயந்து கொண்டு, தமிழகத்தை தற்போது ஆள்பவர்கள் அனுமதித்துள்ளனர். இதனால் மக்கள் மிகவும் வேதனைக்குள்ளாகியுள்ளனர்.

ஜெயலலிதாவின் பெயரைச் சொல்லி நடக்கும் இந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு பாதுகாப்பு இல்லை. விரைவில் இந்த ஆட்சி அகற்றப்பட்டு, ஜெயலலிதா ஆட்சி கொண்டு வரப்படும். இந்த ஆட்சியின் அவலங்களை மக்களிடம் எடுத்துக் கூறத்தான் 'மக்கள் சந்திப்பு' நிகழ்ச்சியை தொடங்கியுள்ளேன். நிகழும் ஆட்சி அகற்றப்பட்ட பின் ஜெயலலிதாவின் ஆட்சி அமையும், அப்போது இதே ஊரில் நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க வருவேன் என்றார் டிடிவி. தினகரன்.

தொடர்ந்து, திருவிடைமருதூர் தொகுதியில் திருப்பனந்தாள், மணலூர், ஆடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், திருபுவனம், நாச்சியார்கோவில், திருச்சேறை ஆகிய பகுதிகளில் மக்களை சந்தித்து தினகரன் பேசினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, முன்னாள் எம்எல்ஏக்கள் தங்க. தமிழ்செல்வன், எம். ரெங்கசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

நகையை பாலீஸ் செய்வதாக கூறி, பெண்ணிடம் நூதன முறையில் மோசடி

பிகார் இளைஞர்கள் 2 பேர் கைது

லால்குடி, பிப். 2: திருச்சி மாவட்டம், லால்குடி அருகே நகையை பாலீஸ் செய்து தருவதாக கூறி, பெண்ணிடம் நூதன முறையில் மோசடியில் ஈடுபட்ட பிகார் மாநில இளைஞர்கள் 2 பேரை பொதுமக்கள் பிடித்து லால்குடி போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

லால்குடி அருகே உள்ள திண்ணியம் கிராமத்தைச் சேர்ந்தவர் பிரகாஷ். விவசாயியான இவரது மனைவி பூங்கொடி (30). இந்நிலையில், வியாழக்கிழமை மாலை அப்பகுதிக்கு வந்த வடமாநில இளைஞர்கள் 2 பேர், பூங்கொடியின் வீட்டுக்கு வந்து அவரது நகையினை பாலீஷ் செய்து தருவதாக கூறினராம். இதையடுத்து பூங்கொடி, தனது மெட்டி, கொழுசு, 3 பவுன் தங்க செயின் ஆகியவற்றை கொடுத்துள்ளார். அந்த இளைஞர்கள் ஒரு பவுடர் கலந்த தண்ணீரில் பாலீஸ் செய்து கொடுத்து விட்டு அங்கிருந்து நழுவிச் சென்றனர்.

பாலீஷ் செய்த வெள்ளிப் பொருள்கள் நல்ல நிலையில் இருந்தது. ஆனால் தங்கசெயின் மட்டும் ஒட்டை ஒட்டையாக இருந்தது. இதையடுத்து, நூதன முறையில் மோசடி நடந்ததை உணர்ந்த பூங்கொடி, அப்பகுதியினருடன் சேர்ந்து, இரு இளைஞர்களையும் தேடினார். இந்நிலையில், அன்பில் கிராமத்தில் இருந்த வட மாநில இளைஞர்கள் இருவரையும் பிடித்து லால்குடி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். விசாரணையில், அவர்கள் பிகார் மாநிலத்தைச் சேர்ந்த அமீர் கான் (20), அஷரப் (21) என்பது தெரிய வந்தது. பின்னர், போலீஸார் அவர்கள் இருவர் மீதும் வழக்குப்பதிந்து கைது செய்தனர்.

3 பேர் கொலை வழக்கு

ஒருவருக்கு 37 ஆண்டு; இருவருக்கு 30 ஆண்டுகள் சிறை

தஞ்சாவூர், பிப். 2: திருவாரூர் மாவட்டம், கோட்டூர் அருகே ஒரு மாத குழந்தை, கணவன் – மனைவி ஆகிய மூவரையும் கொன்ற வழக்கில் ஒருவருக்கு 37 ஆண்டும், இருவருக்கு 30 ஆண்டும், மற்றொருவருக்கு 3 ஆண்டும் சிறை தண்டனை விதித்து தஞ்சாவூர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

கோட்டூர் அருகே உள்ள கீழமருதூரைச் சேர்ந்த ராமசாமி மகன் பழனியப்பன் (40). கொத்தனார். இவருக்கு ஏற்கெனவே திருமணமாகி, 3 குழந்தைகள் உள்ள நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த தலித் பிரிவைச் சேர்ந்த கணேசன் மகளும், மாற்றுத் திறனாளியுமான அமிர்தவள்ளியை (30) கடந்த 2014-ஆம் ஆண்டு அழைத்துக் கொண்டு, திருப்பூருக்குச் சென்றுள்ளார். அங்கு குடும்பம் நடத்தியபோது, இருவருக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பின்னர், மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளனர்.

மூவரை கொலை செய்த வழக்கில் தீர்ப்பை ஒட்டி தஞ்சாவூர் முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்துக்கு போலீஸாரால் அழைத்து வரப்பட்ட சிவசுப்ரமணியன், ராமகிருஷ்ணன், துரைராஜ், மகேந்திரன் ஆகியோர்.

இந்நிலையில், பழனியப்பனின் சகோதரர்களான சிவசுப்ரமணியன் (46), ராமகிருஷ்ணன் (44), இவர்களது உறவினர் வேதையன் மகன் மகேந்திரன் (26), இவர்களது நண்பரான மேலபனையூர் மேலத்தெருவைச் சேர்ந்த துரைராஜ் (52) ஆகிய 4 பேரும் சேர்ந்து பழனியப்பன், அமிர்தவள்ளி, ஒரு மாத ஆண் குழந்தை ஆகிய மூவரையும் 2014, டிசம்பர் 10-ஆம் தேதி தாக்கி, கழுத்தை நெரித்து கொலை செய்தனர்.

இதைத் தொடர்ந்து ஆதிச்சபுரம் விஏஓ கண்ணையன் முன்னிலையில் மேற்கண்ட 4 பேரும் சரணடைந்தனர். இதுகுறித்து கோட்டூர் போலீஸார் வழக்குப் பதிந்து, சிவசுப்ரமணியன் உள்ளிட்ட 4 பேரையும் கைது செய்தனர்.

இந்த வழக்கு தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்ற (குடியுரிமை பாதுகாப்பு நீதிமன்றம்) நீதிபதி எஸ். கார்த்திகேயன் முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அரசு தரப்பு வழக்குரைஞராக ஆர். சதீஷ்குமார் ஆஜராகி வாதிட்டார். விசாரணையின் முடிவில் நீதிபதி, 'ஒரு மாத குழந்தை, கணவன் – மனைவி ஆகிய மூவரையும் கொலை செய்ததற்காகவும், தடயங்களை மறைத்ததற்காகவும், சிவசுப்ரமணியனுக்கு மூன்று ஆயுள் தண்டனையும், 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ.25,000 அபராதமும், கட்டத் தவறினால் மேலும் 3 ஆண்டு சிறை தண்டனையும் விதித்தார்.

ராமகிருஷ்ணன், துரைராஜ் ஆகிய இருவருக்கும் மூன்று ஆயுள் தண்டனையும், ரூ.20,000 அபராதமும், கட்டத் தவறினால் மேலும் 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் மூவரும் 30 ஆண்டுகளுக்கு குறையாமல் சிறையில் இருக்க வேண்டும் என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். தடயங்களை மறைத்த குற்றத்துக்காக மகேந்திரனுக்கு 3 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ.5,000 அபராதமும், கட்டத் தவறினால் மேலும் 6 மாத சிறை தண்டனையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னதாக, தீர்ப்பையொட்டி அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக நீதிமன்றத்தைச் சுற்றி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

துப்பாக்கி தொழிற்சாலை பணியாளர் தேர்வு மோசடி வழக்கை சிபிஐ-க்கு மாற்றி உத்தரவு

மதுரை, பிப். 2: துப்பாக்கி தொழிற்சாலை பணியாளர் தேர்வில் மோசடியில் ஈடுபட்டவர்களை கண்டுபிடிப்பது தொடர்பான வழக்கை சிபிஐ-க்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

திருச்சியில் மத்திய பாதுகாப்பு துறையின் துப்பாக்கி தொழிற்சாலை உள்ளது. இதில் பல்வேறு பணியிடங்களுக்கு கடந்த 2015-இல் தேர்வு நடைபெற்றது. இதில் ஆள்மாறாட்டம் நடைபெற்றதாக தொழிற்சாலையின் பொது மேலாளர் சி.ஆரியசக்தி திருச்சி கே.கே.நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீஸார், நாக்பூரைச் சேர்ந்த ரூபேஷ் ஷிபு தேய், கான்பூரைச் சேர்ந்த பரத் சிங் ஆகியோரை 2016-இல் கைது செய்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கை சிபிஐ-க்கு மாற்றக்கோரி துப்பாக்கி தொழிற்சாலையின் பொதுமேலாளர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு செய்தார். அதில், திருச்சி கே.கே.நகர் போலீஸார் விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. எனவே இந்த வழக்கை சிபிஐ-க்கு மாற்றி உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு நீதிபதி பி.என்.பிரகாஷ் முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது கே.கே.நகர் போலீஸார் ஆஜராகி, இந்த வழக்கு தொடர்பாக இருவரைக் கைது செய்துள்ளோம். மீதமுள்ளவர்கள் வடநாட்டில் இருப்பதால் தேடி வருகிறோம் என்றார்.

இதைப் பதிவு செய்த நீதிபதி, வழக்கு தொடர்பான ஆவணங்களைப் பார்க்கையில் மோசடியில் தொடர்புடைய மேலும் 6 பேர் வட இந்தியாவில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இதனால் இந்த வழக்கை கே.கே.நகர் போலீஸார் கையாளுவதில் சிரமம் ஏற்படும். எனவே இந்த வழக்கு சிபிஐ-க்கு மாற்றப்படுகிறது. வழக்கு தொடர்பான ஆவணங்களை திருச்சி கே.கே.நகர் போலீஸார் சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் தீ விபத்து: கிழக்கு கோபுரப் பகுதி கடைகள் எரிந்து நாசம்

மதுரை, பிப். 2: மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கிழக்கு கோபுரம் அருகே ஆயிரங்கால் மண்டபம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு மின்கசிவு காரணமாக தீ விபத்து நேரிட்டது. இதில் ஆயிரங்கால் மண்டபம் பகுதியில் உள்ள ஏராளமான கடைகள் தீயில் எரிந்து சேதமடைந்தன.

அம்மன் மற்றும் சுவாமி சன்னதிகளில் வெள்ளிக்கிழமை இரவு பூஜைகள் முடிந்து வழக்கம்போல நடை சாத்தப்பட்டு வெளிப்பிரகார கதவுகள் அடைக்கப்பட்டன. இந்நிலையில், கிழக்கு ராஜகோபுரம் அருகே உள்ள ஆயிரங்கால் மண்டபம் பகுதியில் உள்ள கடைகளில் இருந்து இரவு கரும்புகை வெளியேறியது. இதைக்கண்ட பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் அளித்த தகவலின் பேரில் போலீஸார் மற்றும் கோயில் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். கோயிலின் பிரதான கதவைத் திறப்பதற்குள் தீ மளமளவென பற்றி எரியத் தொடங்கியது. கிழக்கு ராஜ கோபுரம் வழியாக அம்மன் சன்னதி செல்லும் பகுதியில் கோயிலுக்குச் சொந்தமான ஏராளமான கடைகள் உள்ளன. பூஜை பொருள்கள், விளையாட்டுச் சாமான்கள், சுவாமி படங்கள் விற்பனை செய்யும் கடைகள் இருந்தன. இவற்றியில் ஆயிரங்கால் மண்டபம் அருகே உள்ள ஒரு கடையில் மின்கசிவு ஏற்பட்டு தீப் பற்றியுள்ளது. பிளாஸ்டிக் விளையாட்டு பொருள்கள் இருந்த அக்கடையில் தீ மளமளவெனப் பற்றி எரியத் தொடங்கியதால் தீயணைப்பு வாகனங்கள் வருவதற்குள் அருகில் இருந்த 3 கடைகளுக்கும் தீ பரவியது. கோயில் ஊழியர்கள், போலீஸார், தீயணைப்பு வீரர்கள் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்டோர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மண்டபத்தின் ஒரு பகுதியில் பரவிய தீயை அணைக்க முயற்சித்த போது, மற்றொரு பகுதியில் தீ வேகமாக பரவியது. இதையடுத்து கோயிலின் வடக்கு பிரகாரம் வழியாகவும் தீயணைப்பு வண்டிகள் வரவழைக்கப்பட்டன. ஆனால், அதற்குள் அங்கிருந்து தீ அடுத்த பகுதிக்கும் பரவியதால் கோயிலுக்குள் தீயணைப்பு வாகனங்கள் கொண்டு வரப்பட்டன. பழைய திருக்கல்யாண மண்டபம் வழியாகவும் தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு நீண்ட குழாய்கள் மூலம் ரசாயனம் கலந்து தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டது. இதற்கிடையே தீயின் வெப்பம் காரணமாக ஆயிரம் கால் மண்டபத்தின் மேற்கூரைகளில் ஆங்காங்கே வெடிப்பு ஏற்பட்டது. இரவு 11 மணிக்கு தீயணைக்கும் பணிகள் தொடங்கிய நிலையில் சுமார் ஒன்றரை மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

துபையில் இருந்து கப்பலில் கடத்தி வந்த ரூ. 9 கோடி இந்தோனேஷிய சிகரெட் பறிமுதல்

சுங்கத் துறை அதிரடி

சென்னை, பிப்.2: துபையில் இருந்து கப்பல் மூலம் சென்னைக்கு கடத்தி வரப்பட்ட ரூ.9 கோடி மதிப்புள்ள இந்தோனேஷிய சிகரெட் பாக்கெட்டுகளை சுங்கத் துறை அதிகாரிகள் வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்தனர்.

துபை நாட்டின் ஜெபெல் அலி துறைமுகத்தில் இருந்து சென்னை துறைமுகத்துக்கு வந்த கப்பலில் சரக்கு பெட்டகங்களில் இந்தோனேஷிய நாட்டின் சிகரெட்டுகள் கடத்தி வந்துள்ளதாக சுங்கத் துறையின் சிறப்பு புலனாய்வு பிரிவினருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அந்த தகவலின் அடிப்படையில் சுங்கத் துறை அதிகாரிகள், ஜெபெல் அலி துறைமுகத்தில் இருந்து சென்னை துறைமுகத்துக்கு வந்த கப்பலில் கொண்டு வரப்பட்ட 9 சரக்கு பெட்டகங்களை வெள்ளிக்கிழமை திறந்து சோதனையிட்டனர்.

இச்சோதனையில், அப்பெட்டகங்களில் ஜிப்சம் மூட்டைகளுக்கு இடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த 490 அட்டை பெட்டிகளில் இந்தோனேஷிய நாட்டில் தயாரிக்கப்பட்ட குடாங் கிராம் என்ற சிகரெட் இருப்பது தெரியவந்தது. அவற்றை சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதில் மொத்தம் ரூ.9 கோடி மதிப்புள்ள 70.56 லட்சம் சிகரெட்டுகள் இருந்தன.

சென்னைக்கு வந்த கப்பலில் சரக்குப் பெட்டகத்தில் மறைத்து கடத்தி வந்த இந்தோனேஷிய சிகரெட்டுகள்.

இந்த சிகரெட்டுகள், இறக்குமதி வரி ஏய்ப்பு செய்தும், இந்திய சுகாதாரத் துறை விதிமுறைகளை மீறியும், சிகரெட் பாக்கெட்டில் இருக்க வேண்டிய எச்சரிக்கை விளம்பரம் இல்லாமலும், தயாரிப்பு விவரங்கள், விற்பனை விவரங்கள் இல்லாமலும் கடத்தப்பட்டிருப்பதாக சுங்கத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அந்த சரக்கு பெட்டகத்தில் ஜிப்சம் இறக்குமதி செய்வதாக பதிவு செய்திருந்த திண்டுக்கல்லைச் சேர்ந்த நிறுவன நிர்வாகிகளிடம் சுங்கத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருக்கோவிலூர் அருகே

ஊருக்குள் புகுந்து தாக்குதல்: 28 வீடுகள் சேதம்; 6 பேர் கைது

திருக்கோவிலூர், பிப். 2: விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரை அடுத்த வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்த ஏழுமலை மகன் மணிகண்டன்(28). இவர், அதே பகுதியைச் சேர்ந்த செல்வராஜிக்கு சொந்தமான டிராக்டரை கடந்த மாதம் 16-ஆம் தேதி ஓட்டிச் சென்றார். அப்போது, தேவனூரில் எதிரே வந்த ஆட்டோ மீது டிராக்டர் மோதியது. இதில், ஆட்டோவில் வந்த வீரபாண்டி ஊராட்சி, புலிக்கல் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தாய்(32) காயமடைந்தார். அப்போது, அங்கு கூடிய அப்பகுதி மக்கள், ஆனந்தாய் சிகிச்சைப் பெற மணிகண்டனிடம் இருந்து ரூ.5 ஆயிரம் வாங்கிக் கொடுத்தனராம்.

இதனையறிந்த ஆனந்தாயின் உறவினர்கள், டிராக்டர் உரிமையாளர் செல்வராஜைச் சந்தித்து, சிகிச்சைக்காக மேலும் ரூ.25 ஆயிரம் தேவைப்படுவதாக கேட்டனர். அதற்கு, அவர் ரூ.5 ஆயிரம் கொடுத்து, மீதி பணத்தையும் தருவதாக தெரிவித்தாராம்.

பின்னர், டிராக்டர் உரிமையாளர் செல்வராஜ், ஓட்டுநர் மணிகண்டனை அழைத்து கண்டித்துள்ளார். இதையடுத்து வியாழக்கிழமை மாலை மணிகண்டன் தனது நண்பர் விஜயகுமார் உள்ளிட்டோருடன் புலிக்கல் கிராமத்துக்குச் சென்று, ஆனந்தாயின் உறவினர்களிடம் தகராறில் ஈடுபட்டார்.

இதையடுத்து ஆனந்தாயின் உறவினர்கள் விஜயகுமார் தந்தை ராமலிங்கத்தைத் தொடர்புகொண்டு விஷயத்தை கூறினர். இதையடுத்து மனமுடைந்த விஜயகுமார் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இதையடுத்து ஆத்திரமடைந்த விஜயகுமாரின் நண்பர்களான சீனுவாசன் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்டோர், புலிக்கல் கிராமத்துக்கு ஆயுதங்களோடு வியாழக்கிழமை இரவு சென்றனர்.

அப்போது, 28 வீடுகளை அடித்து நொறுக்கியும் சேதப்படுத்தினர். இந்த சம்பவத்தால் காயமடைந்த மூர்த்தி மனைவி ஞானாம்பாள் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதனால் அச்சத்துக்கு ஆளான அப்பகுதி மக்கள் உடனடியாக சாலையில் ஒன்று திரண்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த திருக்கோவிலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அசோக்குமார் தலைமையில் போலீஸார் வந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். வெள்ளிக்கிழமை காலையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் நேரில் வந்து சம்பவ பகுதியை பார்வையிட்டார். அவரது உத்தரவின் பேரில்,

இச்சம்பவம் தொடர்பாக 30-க்கும் மேற்பட்டோர் மீது அரகண்டநல்லூர் போலீஸார் வழக்குப் பதிந்து வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் சீனுவாசன்(24), அரிகிருஷ்ணன் மகன் பாண்டித்துரை(23), சுப்பிரமணி மகன் சுரேஷ்(28), அயோத்தி மகன் குமரேசன்(22), சின்னப்பையன் மகன் சதீஷ்(23), பழனி மகன் பாலாஜி(23) ஆகிய 6 பேரை கைது செய்தனர். தலைமறைவான மற்றவர்களை தேடி வருகின்றனர்.

நீட் தேர்வு : மாணவர்களை மீண்டும் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டாம்

சென்னை, பிப்2: நீட் தேர்வு தொடர்பாக மாணவர்களை குழப்பத்தில் ஆழ்த்த வேண்டாம் என்று பாஜக மாநிலத் தலைவர் தமிழிசை செளந்தரராஜன் கேட்டுக் கொண்டார்.

சென்னை, தியாகராய நகரில் உள்ள தமிழக பாஜக தலைமை அலுவலகமான கமலாலயத்தில் பட்ஜெட் விளக்க ஆலோசனை கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கட்சியின் மாநில தலைவர் தமிழிசை செளந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொருளாதார நிபுணர் பாலசுப்பிரமணியன், மாநில செய்தி தொடர்பாளர் மற்றும் அறிவுசார் பிரிவு மாநில பொறுப்பாளர் கனகசபாபதி, மாநில ஊடக பிரிவு தலைவர் ஏ.என். எஸ்.பிரசாத் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்கு முன் தமிழிசை செளந்தரராஜன் நிருபர்களிடம் கூறியது: தமிழக அரசியல் கட்சிகளுக்கு ஒரு கோரிக்கை. நீட் தேர்வு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கடந்த முறை நடத்தப்பட்டது. இதன் மூலம் தெருக்கோடியில் உள்ள மாணவர்களுக்குக் கூட நீட் மூலம் இடம் கிடைத்து மருத்துவம் பயிலும் வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, மறுபடியும் நிச்சயமற்ற தன்மையை வைத்துக் கொண்டு மாணவர்களை யாரும் குழப்பக் கூடாது.

மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர் மாநில பாடத் திட்டமும் நீட் தேர்வில் சேர்த்துக் கொள்ளப்படும் என மிகத் தெளிவாக கூறி உள்ளார். மாணவர்கள் இதில் தேர்ச்சி பெற நன்றாக படிக்கச் சொல்வதே சரி. இதில் அரசியல் கூடாது.

தமிழகத்தில் ராணுவ தொழில் பூங்கா: மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மு.க.ஸ்டாலின் கூறி உள்ளார். திமுக காங்கிரசுடன் மத்தியில் 10 ஆண்டுகள் கூட்டணியில் இருந்தபோது புறக்கணிப்பட்ட நாங்குநேரியில், மத்திய அமைச்சர்கள் பொன்.ராதாகிருஷ்ணன், நிர்மலா சீதாராமன் ஆகியோரின் பெரும் முயற்சி காரணமாக ராணுவ தொழில்பூங்கா கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் உலகத் தரமான ரெயில் பெட்டிகளை தயாரிப்பதற்கு பெரம்பூர் ரெயில் பெட்டி தொழிற்சாலைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. 5-ஜி பற்றிய ஆராய்ச்சி, பரிசோதனைகளுக்கு சென்னை ஐஐடி-க்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் ரூ. 2,400 கோடி ரூபாய் 8 லட்சம் தமிழக விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல திட்டங்களை தமிழகத்துக்கு கொண்டு வர தமிழக பாஜக தலைவர்கள் தொடர்ந்து முயற்சி செய்வர் என்றார் தமிழிசை செளந்தரராஜன்.

'கரு' தலைப்பை திரைப்படத்தில் பயன்படுத்த உயர் நீதிமன்றம் தடை

சென்னை, பிப். 2: 'கரு' என்ற தலைப்பை திரைப்படத்தில் பயன்படுத்த லைகா நிறுவனத்துக்கு தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜெ.எஸ்.ஸ்கிரீன்ஸ் திரைப்பட நிறுவனத்தின் அதிபர் மணிமாறன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், 'கரு' என்ற படத் தலைப்பை பதிவு செய்து வைத்துள்ளேன். இந்தத் தலைப்பை பயன்படுத்தி லைகா நிறுவனம் திரைப்படத்தை தயாரித்துவருகிறது. எனவே, இந்தத் தலைப்பை எந்த விதத்திலும் பயன்படுத்த லைகா நிறுவனத்துக்குத் தடை விதிக்க வேண்டும் எனக் கோரியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி எம்.சுந்தர், மனுவுக்கு லைகா நிறுவனம் பதிலளிக்க உத்தரவிட்டு, 'கரு' என்ற தலைப்பை பயன்படுத்த 2 வார காலத்துக்கு தடை விதித்து உத்தரவிட்டார்.

காலமானார்

ஆ.சரஸ்வதி

பவானி, பிப். 2: ஈரோடு மாவட்டம், பவானி, ஊராட்சிக் கோட்டையைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி சரஸ்வதி (60) உடல்நலக் குறைவால் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் உயிரிழந்தார். இவருக்கு தினமணி செய்தியாளர் ராஜு சாஸ்திரி என்ற மகனும் கோமதி, குணவதி என்ற இரு மகள்களும் உள்ளனர். தொடர்பு எண்: 98659 73880.



ASHOK LEYLAND

உங்கள் வெற்றி, எங்கள் வெற்றி

அசோக் லேலண்ட் லிமிடெட்,

பதிவு பெற்ற அலுவலகம் : நெ.1, சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை - 600 032., போன் : +91 44 2220 6000,
பேக்ஸ் : +91 44 2220 6001; CIN : L34101TN1948PLC000105;
வலைதளம் : www.ashokleyland.com; மின்னஞ்சல் : secretarial@ashokleyland.com

டிசம்பர் 31, 2017 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சத்தில்)

வ. எண்	விபரங்கள்	தனிப்பட்ட				
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஒன்பது மாதங்கள்		முடிவடைந்த ஆண்டு
		31.12.2017	31.12.2016	31.12.2017	31.12.2016	31.03.2017
		தணிக்கை செய்யப்படாதது		தணிக்கை செய்யப்படாதது		தணிக்கை செய்யப்பட்டது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	7,11,316.20	4,82,825.49	17,67,444.04	14,27,444.82	21,33,166.91
2	இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன் மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	65,763.64	23,952.11	1,31,333.65	1,06,958.03	1,68,093.21
3	இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன் மற்றும் அசாதாரண இனங்களுக்குப் பின்)	65,763.64	23,952.11	1,30,076.73	1,06,958.03	1,33,008.62
4	இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின் மற்றும் அசாதாரண இனங்களுக்குப் பின்)	44,970.98	16,171.60	89,520.49	74,691.03	1,22,307.72
5	இக்காலத்திற்கான ஒட்டு மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்குப்பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப்பின்) உள்ளடக்கியது]	46,244.64	15,713.56	88,702.99	73,635.02	1,23,159.48
6	செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	29,271.08	28,458.80	29,271.08	28,458.80	28,458.80
7	இதர பங்கு					5,84,147.96
8	பங்கு விகித ஈட்டுத்தொகை (EPS) (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.1 வீதம்) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை)					
	அ) அடிப்படை	1.54	0.55	3.06	2.60	4.24
	ஆ) குறைமதிப்பு	1.53	0.55	3.05	2.60	4.24

(1) மேற்குறிப்பிடப்பட்டவைகள், 2015 ஆம் வருடாந்திய SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) விதிமுறைகள் 33வது மாற்றியமைத்த சுற்றறிக்கை ஜூலை 5, 2016 மற்றும் ஆகஸ்ட் 10, 2016 தேதியிட்ட விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிசம்பர் 31, 2017 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட விவரங்கள் ஆகும். டிசம்பர் 31, 2017 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான முடிவுகளின் முழுவடிவம் பங்கு வர்த்தக நிறுவனத்தின் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் (www.ashokleyland.com) இணையதளங்களிலும் காணலாம்

(2) முந்தைய காலங்களின் இலக்கங்கள் தேவைக்கேற்ப மறுவகை செய்யப்பட்டு / ஒன்று சேர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இயக்குநர் குழுவின் சார்பாக
வினோத் K தாசரி
தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர்

இடம் : லண்டன்
தேதி : பிப்ரவரி 01, 2018

Visit us at : www.ashokleyland.com

HINDUJA GROUP

தமிழ்நாடு அரசு

7.65 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2027

மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூ.800.00 கோடி** மதிப்பிற்கு **7.65 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2027** ஏலத்தின் மூலம் மறுவெளியீடு செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/–க்கும் அதன் பின்னர் ரூ.10,000/–ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **பிப்ரவரி 06, 2018** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் (இணைப்பு–II)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.
3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **பிப்ரவரி 06, 2018** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:
   அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து பிற்பகல் **12.00** மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.
   ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.
4. ஏலம் கேட்பவர் எதிர்பார்க்கக் கூடிய விலையினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.
5. ஏலத்தின் முடிவுகள் **பிப்ரவரி 06, 2018** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **பிப்ரவரி 07, 2018** அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
6. இந்த அரசு பிணையப் பத்திரங்களுக்கு ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வீதத்தில் வட்டி வழங்கப்படும். இந்த வட்டி 6 மாதத்திற்கு ஒரு முறை **ஜூன் 06** மற்றும் **டிசம்பர் 06** ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.
7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.
8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **பிப்ரவரி 02, 2018 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண்.354(L)/W&M-II/2018**-ஐக் காண்க.

க. சண்முகம்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை - 9.

செ.ம.தொ.இ/134/வரைகலை/2018

வாக்கி-டாக்கி விவகாரம்: மனுவை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்

சென்னை, பிப்.2: தமிழகக் காவல் துறைக்கு வாக்கி டாக்கி வாங்கியதில் நடந்துள்ள முறைகேடுகள் தொடர்பாக டிஜிபி மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடக்கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

மதுரையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் செந்தில்முருகன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழக போலீஸாருக்கான வாக்கி டாக்கி வாங்குவது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மோட்டோரோலா சொல்யூசன்ஸ் என்ற ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோரியது. அதன்படி அந்நிறுவனத்துடன் வாக்கி டாக்கி வாங்க ரூ.83.45 கோடிக்கு ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த நிலையில் தமிழக அரசு காவல்துறையை நவீனமயமாக்க கடந்த 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.47.56 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையை வைத்து 10 ஆயிரம் வாக்கி டாக்கிகள் வாங்கியிருக்கலாம். ஆனால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையை விட அதிகமாகச் செலவு செய்து அதேசமயம் வெறும் 4 ஆயிரம் வாக்கி டாக்கிகள் மட்டுமே வாங்கப்பட்டன. இதற்கு ரூ.83.45 கோடிக்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளது. இந்த முறைகேடு குறித்து காவல்துறை டிஜிபி மற்றும் உள்துறைச் செயலாளருக்கு கொடுத்த புகார் மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, முறைகேடு தொடர்பாக தமிழகக் காவல்துறை டிஜிபி மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இம்மனு தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி மற்றும் நீதிபதி அப்துல்குத்தூஸ் அடங்கிய அமர்வு முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், 'சமூக ஆர்வலரான மனுதாரருக்கு வாக்கி டாக்கி குறித்த தொழில்நுட்ப அறிவோ, நிபுணத்துவமோ இல்லை.

மேலும் வாக்கி டாக்கிகளின் விலை நிர்ணயம் குறித்த எந்த ஆதாரங்களையும் தாக்கல் செய்யவில்லை.

மக்களின் வரிப்பணத்தை அரசு வீணாக செலவழிக்கக் கூடாது என்ற எண்ணம் குடிமக்களுக்கு இருப்பது நல்லதுதான் என்றாலும், செவிவழிச் செய்தியாகவும், நாளிதழ்களில் வந்த செய்திகளின் அடிப்படையிலும் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதனை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வழக்கை விசாரிக்க முடியாது. இதுதொடர்பாக அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்றுகூறி மனுவை தள்ளுபடி செய்தனர்.

கோவை அரசு அச்சகத்தை மூட இடைக்காலத் தடை

சென்னை,பிப்.2: கோவையில் உள்ள மத்திய அரசு அச்சகத்தை மூடவும், அங்கு பணிபுரியும் ஊழியர்களை இடமாற்றம் செய்யவும் இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோவை மேட்டுப்பாளையம் அருகில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய அரசு அச்சகம் செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில் 65 பேர் பணிபுரிந்து வருகின்றனர். இந்தியாவில் உள்ள 17 மத்திய அரசு அச்சகங்களை ஒன்றாக இணைத்து அவற்றை 5 அச்சகங்களாக மாற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்த ஆண்டு முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையில் கோவையில் உள்ள அச்சகத்தை நாசிக்கில் உள்ள அச்சகத்துடன் இணைக்க முடிவு செய்யப்பட்டது. அச்சகத்தில் நிலுவையில் உள்ள அனைத்து பணிகளையும் 2017 டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் முடிக்கவும், அங்குள்ள

பணியாளர்களை பிற அச்சகங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனவும் மத்திய அரசின் வீடு மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் அச்சகத்துறை இயக்குநரகம் அறிவிப்பாணை வெளியிட்டது.

இந்த நிலையில் ஊழியர்கள் பணியிட மாற்றத்தை எதிர்த்து சென்னையில் உள்ள மத்திய நிர்வாக தீர்ப்பாயத்திலும், கோவை இந்திய அரசு அச்சகப் பணியாளர்கள் சங்கத்தின் சார்பிலும் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த தீர்ப்பாயம், பணியளார்களை இடமாற்றம் செய்யத் தடை விதிக்க மறுத்து கடந்த ஜனவரி 12-ஆம் தேதி உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

மேல்முறையீட்டு மனு நீதிபதிகள் ஹுலுவாடி ஜி.ரமேஷ் மற்றும் ஆர்.எம்.டி. டீக்காராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், மத்திய அரசின் அச்சகங்களை மூடவும், ஊழியர்களை இடமாற்றம் செய்யவும் கர்நாடகம் மற்றும் கேரள உயர்நீதிமன்றங்கள் ஏற்கனவே தடை விதித்துள்ளன. அதன் அடிப்படையில்

கோவையில் உள்ள அச்சகத்தை மூடவும், ஊழியர்களை இடமாற்றம் செய்யவும் இடைக்காலத் தடை விதித்த நீதிபதிகள், வழக்கின் விசாரணையை 4 வார காலத்துக்கு ஒத்திவைத்தனர்.

தமிழ் இருக்கைக்காக...

ஹார்வர்டு பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கு நன்கொடையாக ரூ.5 லட்சத்துக்கான காசோலையை தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜனிடம் வெள்ளிக்கிழமை வழங்கினார் வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்க தலைவர் வி.ஜி.சந்தோஷம். உடன் (இடமிருந்து) உலகத் தமிழ்ச் சங்க உறுப்பினர் ரோமா குருப்ஸ் ராஜன், ஹார்வர்டு பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ஆறுமுகம் முருகையா, உலகத் தமிழ்ச் சங்க இணைச் செயலர் ராஜாதாஸ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ.விசயராகவன்.

உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப்போட்டி

ராஜபாளையம், பிப். 2: வரும் உள்ளாட்சித் தேர்தலில் சமத்துவ மக்கள் கட்சி தனித்துப் போட்டியிடும் என அக்கட்சியின் தலைவர் சரத்குமார் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்துக்கு வெள்ளிக்கிழமை கட்சி ஊழியர் கூட்டம் மற்றும் பள்ளி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

மத்திய பட்ஜெட் சாமானிய மக்களுக்காக அல்லாமல் 2019 நாடாளுமன்ற தேர்தலை நோக்கிய பட்ஜெட்டாக உள்ளது. மக்களுக்கான மருத்துவ காப்பீடு போன்ற அறிவிப்புகளை செயல்படுத்தும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரியவில்லை. விவசாயிகளுக்கான அறிவிப்புகள் வரவேற்கத்தக்கன. ஆனால் அது அறிவிப்போடு இல்லாமல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நியாயத்திற்காகபோராடுபவர்கள் மீது, காவல் துறையினரின் அத்துமீறலை தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் நாகரீகம் கருதி சீமானுடன் ஒன்றாக பேட்டி அளித்தேன். தமிழ் உணர்வுக்கு குரல் கொடுப்பதில் இருவரின் கொள்கையும் ஒன்று. உள்ளாட்சி தேர்தலில் சமத்துவ மக்கள் கட்சி தனித்து நிற்கும். எங்களின் தனித்துவத்தை காட்டுவதற்காக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் இணைந்து பயணித்து வந்த அதிமுகவில் இருந்து தற்போது தனித்து நிற்கிறோம் என்றார்.

உள்ளாட்சித் தேர்தலுக்குத் தயாராக வேண்டும்

அதிமுகவினருக்கு முதல்வர்-துணை முதல்வர் உத்தரவு

சென்னை அதிமுக தலைமை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்டச் செயலர்கள் கூட்டத்தில் (இடமிருந்து) கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி, இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமி, அவைத் தலைவர் இ.மதுசூதனன், ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், துணை ஒருங்கிணைப்பாளர் மீ.அ.வைத்திலிங்கம்.

சென்னை, பிப்.2: உள்ளாட்சித் தேர்தல் வெற்றிக்கு அனைவரும் தீவிரமாகப் பாடுபட வேண்டும் என்று அதிமுக நிர்வாகிகளுக்கு முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் அறிவுரைத்தனர்.

அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் ராயப்பேட்டையில் உள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

துணை முதல்வரும், ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம், முதல்வரும், கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி கே. பழனிசாமி ஆகியோர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், முக்கிய நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்றனர். முன்னாள் முதல்வர் மறைந்த ஜெயலலிதாவின் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அதிமுகவில் தற்போது மாவட்டச் செயலாளர்களின் எண்ணிக்கை 50-ஆக உள்ளது. இதில் டிடிவி தினகரனின் ஆதரவு மாவட்டச் செயலாளர்கள் 6 பேர் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பதில் புதிய மாவட்டச் செயலாளர்களை நியமிப்பது குறித்தும், நிர்வாக வசதிக்காக அதிமுகவில் 65 மாவட்டங்களை உருவாக்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. எனினும், இது தொடர்பாக கூட்டத்தில் இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை.

உறுப்பினர் எண்ணிக்கை: கூட்டத்தில் நிர்வாகிகள் மத்தியில் முதல்வரும், துணை முதல்வரும், அதிமுகவின் உறுப்பினர் சேர்க்கையில் அனைவரும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என வலியுறுத்தினர். தற்போது அதிமுக உறுப்பினர் எண்ணிக்கை ஒன்றரை கோடியாக உள்ளது. இதைவிட அதிக அளவில் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் என நிர்வாகிகளை கேட்டுக் கொண்டனர். மேலும், உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற அனைவரும் தீவிரமாகப் பாடுபட வேண்டும் எனவும் அறிவுரைத்தனர்.

அண்ணா தொழிற்சங்கம்: போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம் தீவிரம் அடைந்ததற்கு அண்ணா தொழிற்சங்கப் பேரவையினரும் காரணம் என அதிமுக தலைமைக்குப் புகார் வந்தது. அதுதொடர்பாகவும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அதிமுக தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர் பொறுப்பில் இருந்து ஆர்.சின்னசாமி நீக்கப்பட்டு, மூன்று பேர் கொண்ட குழுவையும் முதல்வர், துணைமுதல்வரும் நியமித்துள்ளனர்.

அண்ணா தொழிற்சங்கம்: நிர்வகிக்க 3 பேர் கொண்ட குழு

அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கத்தை நிர்வகிக்க மூன்று பேர் கொண்ட குழுவை முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் நியமித்து அறிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர் பொறுப்பில் இருந்து ஆர்.சின்னசாமி விடுவிக்கப்படுகிறார். பேரவைக்குப் புதிய செயலாளர் நியமிக்கும் வரை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் யு.ஆர்.கிருஷ்ணன், அண்ணா தொழிற்சங்கப் பேரவைத் தலைவர் தாடி ம.இராசு, பேரவை முன்னாள் செயலாளர் சங்கரதாஸ் ஆகியோரைக் கொண்ட குழு அமைப்படுவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

பார் கவுன்சில் தேர்தல் வழக்கு: பிப்.5 இல் தீர்ப்பு

சென்னை, பிப். 2: தமிழ்நாடு பார் கவுன்சில் தேர்தல் மார்ச் 28-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான அறிவிப்பாணையை கடந்த மாதம் 25-ஆம் தேதி தேர்தலை நடத்தும் சிறப்புக்குழு வெளியிட்டது.

தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் குறைந்தது 10 ஆண்டுகள் வழக்குரைஞராகப் பணியாற்றி இருக்க வேண்டும். எந்த அரசியல் கட்சிகளிலும் தலைவர் உள்ளிட்ட முக்கியப் பொறுப்புகளில் இருக்கக் கூடாது என்பன உள்ளிட்ட சிறப்புக் குழுவால் இயற்றப்பட்ட 9 தீர்மானங்களையும் விதிகளாக

வெளியிட்டது. இந்த நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் வழக்குரைஞர்களாக பணிபுரிந்தவர்கள்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற விதியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் முருகேந்திரன் மற்றும் செல்வக்குமார் ஆகியோர் தொடர்ந்த வழக்கு தீர்ப்புக்காக வெள்ளிக்கிழமைக்கு (பிப்.2) ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சிறப்புக்குழு கொண்டு வந்துள்ள புதிய விதிகள் தொடர்பாக அகில இந்திய பார் கவுன்சில் வரும் பிப்.4-ஆம் தேதி தனது முடிவை அறிவிக்க உள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி இந்திராபானர்ஜி மற்றும் நீதிபதி அப்துல் குத்தூஸ் அடங்கிய அமர்வு முன் வெள்ளிக்கிழமை வந்தது. அப்போது அனைத்துத் தரப்பு வாதங்களும் நிறைவடைந்தன. இதையடுத்து நீதிபதிகள், 'நிலுவையில் உள்ள இந்த வழக்கு அகில இந்திய பார் கவுன்சிலின் முடிவுக்குத் தடையாக இருக்காது' எனக் கூறி, வழக்கின் தீர்ப்பை வரும் திங்கள்கிழமைக்கு (பிப்.5) ஒத்திவைத்தனர்.

வரி விளம்பரம் வாசகர் சேவை

மருத்துவம்
SIEMENS
அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கண்களுக்குப் புலப்படாத மிகச் சிறிய டிஜிட்டல் காது கருவிகள்
ராதிகா
காது கருவி நிலையம்
12, பிஷப் ரோடு, (4 ரோடு சிக்னல்), புத்தூர், திருச்சி - 17.
கிளைகள்
வயலூர் மெயின் ரோடு, குமரன் நகர், KVB எதிரில், திருச்சி - 620 017.
தம்பு காம்ப்ளக்ஸ், முதல் தளம், பட்டுக்கோட்டை.
Cell : 97860 72962
76390 19349

மருத்துவம்
மாரடைப்பு பைபாஸ் சர்ஜரி, ஆஞ்சியோ கிராம், ஆஞ்சியோ பிளாஸ்டி இவற்றை தவிர்க்க அணுகவும், இருதய மற்றும் நீரழிவு நோய் நிபுணர்
இருதயம்ஸ்
மருத்துவமனை (பி) லிட்
இந்து கல்லூரி அருகில், நாகர்கோவில்-2.
போன். 04652-241561
செல் 9842141561

அறுவை சிகிச்சை இல்லா இதய சிகிச்சை
மாரடைப்பில் இருந்து விடுபட
ECP
HEART CENTRE
இருதய நோயை அறிந்துகொள்ளும் அதிசய கருவி
3D கார்ட்டோகிராபி
கார்டியோஸ்கேன்
அணுகவும் :
ஸ்ரீ அகிலா மருத்துவமனை
அருணாநகர் 3ம் தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி-6. போன் : 0431-2434004

பொது
ADVAITHA STEEL
& STRUCTURAL
செட் அமைக்க
- உங்கள் வீடு மாடியில் கூரை (Roofing) அமைக்க
- குடோன் (Godown) மற்றும் கார் பார்கிங் அமைக்க
- தொழிற்சாலைகள் அமைக்க
- சேன்ட்விச் ரூபிங் (Puff Panel) அமைக்க
- அலுமினியம் பபுள் ஷீட் கூரை அமைக்க அழைக்கவும்
96555 00065
www.advaithasteel.com

SRI JANAKIRAM HOTELS
TIRUNELVELI
Maruthi A/c Restaurant
Roof Top Restaurant
Mithila Hall & Ayodhya Hall
Traditional and Tasty Food now at Your Door Step!
FREE DOOR DELIVERY
9994900036 | 7639900036
[within city limit. - T&C apply]
☎ 0462-2331941

MUSIC SHOP
In TRICHY
Chitham Musical
No.19, First Floor, Devar Hall Complex, W.B. Road, Trichy- 8.
Ph : 0431 - 2703882
Mob : 76678 36671

WOOD FLOORING
Timbspreads
The Wood Floor Concept
- SOLID WOOD FLOORINGS
- TEAKWOOD FLOORINGS
- LAMINATE FLOORINGS
- PRE-FINISHED FLOORINGS
- INDOOR SPORTS FLOORINGS
- EXTERIOR DECK FLOORINGS
Showroom at:
JD Arcade, IInd Floor
5 L, Vinayaga nagar
K.K.Nagar, Madurai - 20
Telefax : 0452 2534868
94430 53486 / 7708801825
timbspreads@gmail.com

FOR SALE
1 HOUSE
&
2 PLOTS
M.C. Road, Eswari Nagar, Pakkirisamy Street, THANJAVUR.
Contact :
9442613419
No Brokers

பாரம்பரிய ஜோதிடம்
ஜாதகப் பலாபலன்கள் / புதிய ஜாதகம் கணித்தல் வேதகால ஜோதிட நூல்களின் அடிப்படையில் கணித்து கூரியர் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் தங்கள் முகவரியை S.M.S. அல்லது Whatsapp செய்து தகுந்த ஆலோசனைகளைப் பெறலாம்.
செல் : 99943 - 88077

Logo & Brand
Design specialist in
TRICHY
CoDeS
We design your business
10/9,Vijay Park, Melur Road, Srirangam, Trichy-620006.
Mob : 9894401889

தொழில்
ரூ.4000 முதலீட்டில் EXPORT மெழுகுவர்த்தி சுலபமான முறையில் தயாரித்து எங்களிடமே கொடுத்து தினம் 1Kg Rs.1000 சம்பாதிக்கலாம்.
தொடர்புக்கு :
Sri Ragavendra Candles
Ramalinga Nagar, Trichy -3
Cell : 90035 72749

முத்தழகு பைனான்ஸ்
தங்க நகைகளை
கிராமிற்கு ரூ. 2410 90* மிக குறைந்த பைசா வரை வட்டியில்
அடகு, மறு அடகு வைத்து உடன் பணம் பெற
இலவச அழைப்பு
1800 419 6464

மரம் ! தரம் !! நிரந்தரம் !!!
MT மலேசியன் டிம்பர்ஸ்
விற்பனையாளர்கள் :
- பர்மா தேக்கு
- கொலம்பியா தேக்கு
- மலேசியன் - கோங்கு (சால்)
- படாக்
- வேங்கை
- அயல்நாட்டு மரங்கள்
அனைத்தும் கிடைக்கும்
தொடர்புக்கு :
75, மெயின்ரோடு, சங்கிலியாண்டபுரம், திருச்சி - 1.
போன் : 0431 - 2303419, 2300796,
செல் : 94426 - 44228
ஷாமில் : 2200773

தங்க, அடகு, ஏல நகைகளை மீட்டு அதிக விலைக்கு விற்க
BMG™
BEST MONEY GOLD
திருச்சி மண்டல கிளைகளுக்கு
96 98 41 91 91
96 98 51 91 91
இலவச அழைப்பு
1800 258 9000
மிஸ்டு கால் அழைப்பு
760 100 9000

SREE VIJAYA
COATERS & DISTRIBUTORS
Quality Powder Coating
Authorised Distributors
Sleek THE KITCHEN SPECIALIST
DORMA XL - C™ New Contract Range
261, Tajmahal Ricemill Compound, Tanjore Main Road, Ariyamangalam, Trichy-10. (Behind Reliance Petrol Bunk)
E-mail : svdtry@gmail.com
Web : www.shreevijayagroup.in
81227 01659
90430 78001
0431-2445275

ADVANCED SPEECH & HEARING CENTRE
காது கருவி மையம்
கண்களுக்குப் புலப்படாத மிகச் சிறிய டிஜிட்டல் காது கருவிகள்
WIDEX HIGH DEFINITION HEARING மற்றும் அனைத்து முன்னணி நிறுவனங்களின் காது கருவிகள் கிடைக்கும்.
Exchange Offer Upto 50%* on all old Hearing Aid
+91 9042044024
0431 4024000,
எண்.21, சுப்பராஜா ஆர்கேட், மக்கள் மன்றம் எதிரில், 6-வது குறுக்குத் தெரு, திருச்சி-620 018.

2018
விமானச் சுற்றுலா
2 நாள் ஸ்ரீரடி வாரந்தோறும் செவ். வியா சனி, ஞாயிறு
3 நாள் கோவா வாரந்தோறும் வெள்ளிக்கிழமை
4 நாள் காஷ்மீர் குல்மார்க் ஏப்.12,13,21,27 மே. 4,10,11,12,17,18,25
5 நாள் காசி-கயா புத்தகயா பிப். 7,12,14,21,28 மா.9,14,21,28 ஏப்.4,5,6,11,12,13,18,19,20,25,26 மே. 2,9,16,23,30
5 நாள் அந்தமான் பிப்ரவரி, மார்ச் வாரந்தோறும் செவ்வாய், புதன், வெள்ளி ஏப்ரல் மே தினந்தோறும்
6 நாள் டார்ஜலிங் கேங்டாங் கொல்கத்தா ஏப் 10,12,17,19,22,24,25,26 மே. 3,8,10,15,17,22,24,29
8 நாள் சிம்லா-குளு-மணாலி டெல்லி-ஆக்ரா ஏப். 8,15,22,26,29 மே. 2,6,13,20,21,23,27
ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி
98421 62246
98424 47305

காது கேட்கும் கருவி
NOVAX காது கேட்கும் கருவிகள் வாங்கிட பழுது நீக்கிட ஹீரோ எலக்ட்ரானிக், மதுரை - 1. Ph:98430 62988, நெல்லை : 97867 86006, திருப்பூர் : 84899 78678.

CAUTION
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. The New Indian Express Group of Publications does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of The New Indian Express Group of Publications shall not be held responsible / liable for any consequences, in case such claims are found to be false.
THE NEW INDIAN EXPRESS GROUP

KPL KAMARAJAR PORT LIMITED SAGARMALA
(A Mini Ratna Govt. of India Undertaking)
Vallur Post, Chennai - 600 120
CIN : U45203TN1999GO1043322
TENDER No.
KPL/OP/95.17/A/2017
Estimate Cost : Rs. 4.90 Lakhs + GST
E-Tenders are invited for "Providing MS Grills to the window openings to the KPL office at Chennai"
The last date of submission 12.02.2018 up to 15.00 Hrs.
For details visit
www.kamarajarport.gov.in
www.eprocure.gov.in
Dy. General Manager(Civil)
044-27950030

KPL KAMARAJAR PORT LIMITED SAGARMALA
(A Mini Ratna Govt. of India Undertaking)
Vallur Post, Chennai - 600 120
CIN : U45203TN1999GO1043322
NOTICE INVITING e-TENDER
Tenders are invited in two cover system from the experienced EPC contractors through e-procurement mode for the work "Design, Supply and erection of Green Mesh Fence around car parking yards inside the Port premises"
Estimate value - Rs. 3,00,09,960/-
Due date for submission of tender is 16.02.2018.
For details, amendments if any visit our website:
www.ennoreport.gov.in
www.eprocure.gov.in
Dy. General Manager(Civil)
044-27950030

எஸ்டிசி STC
தி ஸ்டேட் டிரேடிங் கார்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
A -29, திரு-வி-க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032
போன்-044 22500342
தமிழ்நாடு காவல் சிறைச்சாலை துறையின் சார்பாக இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கான ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு. (NIT) E-Tender No: TENDER NO. STC/GI/PDTN/2017-18/03 DATED 02.02.2018
எஸ் டி சி, தமிழ்நாடு காவல் சிறைச்சாலை துறையின் சார்பாக இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கான ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கின்றது. மேலும் விவரங்களுக்கு இணையத்தளங்கள் www.stclimited.co.in & www.eprocure.gov.in பார்க்கவும். ஆன்லைனில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்பிக்கப்படவேண்டிய கடைசி நாள்:05.03.2018 நேரம் 11:00 HRS IST. ஒப்பந்தப்புள்ளிகள் ஆன்லைன் மூலமாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

பேருந்துக் கட்டண உயர்வு: போராட்டம் நடத்த மாற்றுத் திறனாளிகள் முடிவு

சென்னை, பிப்.2: பேருந்து கட்டண உயர்வை முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடுவதென அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் தீர்மானம் முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் பா.ஜான்ஸி ராணி தலைமை வகித்தார். இக்கூட்டத்தை அடுத்து மாற்றுத் திறனாளிகள் சங்கத்தினர் கூறியது:

தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு பேருந்து கட்டணங்கள் மிகக் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயணத்துக்கும் ஏற்கெனவே இருந்ததைவிட ஏறத்தாழ இரு மடங்கு கட்டணங்களை தற்போது செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக, மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் துன்பத்தை அனுபவிக்க நேர்ந்துள்ளது. பெயரளவுக்கு மட்டுமே கட்டணக் குறைப்பை அரசு செய்துள்ளது.

பெரும்பாலான மாற்றுத் திறனாளிகள், தாங்கள் வசிக்கும் இருப்பிடத்திலிருந்து தங்கள் தேவைக்கு அருகாமையில் உள்ள அலுவலகங்கள் உள்ளிட்டவைகளுக்கு பயணம் செய்யும் நிலையில் உள்ளனர். ஆனால், தற்போது அரசு நகரப் பேருந்துகளில் கட்டணச் சலுகை இல்லாததால், இந்தக் கட்டண உயர்வு, மாற்றுத் திறனாளிகளை மிகக் கடுமையாக பாதித்துள்ளது.

எனவே, தமிழக அரசு உயர்த்தியுள்ள பேருந்து கட்டண உயர்வை முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தியும், நகரப் பேருந்துகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகைக் கட்டணத்தை அமல்படுத்த வலியுறுத்தியும் மாற்றுத் திறனாளிகளை திரட்டி ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடத்த தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்தனர்.

ஜெயலலிதா நினைவிடம்: பொதுப்பணித்துறை ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய கோரி மனு

சென்னை, பிப். 2: மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் கட்ட பொதுப் பணித்துறை சார்பில் அறிவிக்கப்பட்ட ரூ.43.63 கோடி மதிப்பிலான ஒப்பந்தப் புள்ளியை ரத்து செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு அரசு செலவில் நினைவிடம் அமைக்க எடுக்கப்பட்டுள்ள முடிவை எதிர்த்து வழக்குரைஞர் எஸ்.துரைசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில் கூடுதல் மனுவை அவர் தாக்கல் செய்தார். அந்த கூடுதல் மனுவில், 'கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டடம் கட்டக் கூடாது. இந்தப் பகுதிகளில் 500 மீட்டர் தொலைவுக்குள் எந்தவிதமான கட்டுமானங்களையும் மேற்கொள்ளக்கூடாது. ஆனால் விதிகளுக்குப் புறம்பாக ஜெயலலிதா அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் கட்டடம் கட்ட அரசு தீவிரமாக முனைப்பு காட்டி வருகிறது.

நினைவிடம் அமைப்பதை எதிர்த்து நான் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இதனை கருத்தில் கொள்ளாமல் பொதுப் பணித்துறை ரூ.43.63 கோடி செலவில் நினைவிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரி உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த ஜனவரி 11-ஆம் தேதி வெளியிடப்பட்டது. வரும் பிப்ரவரி 7-ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரிய படிவங்கள் திறக்கப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுப்பணித்துறை சார்பில் விடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய வேண்டும். நான் ஏற்கெனவே தொடர்ந்துள்ள வழக்கில் பொதுப்பணித் துறையின் கண்காணிப்பு பொறியாளரை எதிர் மனுதாரராக சேர்க்க வேண்டும் எனக் கோரியிருந்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீட் தேர்வு கட்டாயம்: அரசுக்கு அன்புமணி கண்டனம்



சென்னை, பிப்.2: நீட் தேர்வு குறித்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் செங்கோட்டையனின் கருத்துக்கு பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக,வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் நீட் தேர்வு நடத்தப்படுவதை தடுக்க முடியாது என்றும், மருத்துவக் கல்லூரிகளில் சேர விரும்பும் அனைவரும் நீட் தேர்வு எழுதியே தீர வேண்டும் என்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் செங்கோட்டையன் கூறியுள்ளார். இந்த அறிவிப்பு அதிர்ச்சியளிக்கிறது. இதன் மூலம் நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் விஷயத்தில் தோல்வி அடைந்து விட்டதை தமிழக அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

நீட் தேர்வு தமிழகத்துக்கு வருவதைத் தடுக்கவே முடியாது என்று தமிழக அரசு கூறுவதை ஏற்க முடியாது. மத்திய அரசுக்கு அரசியல் அழுத்தம் கொடுத்து, தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற முடியும். ஆனால், மத்திய அரசிடம் பணிந்து கிடக்கும் தமிழக ஆட்சியாளர்கள், இந்த விஷயத்தில் சிறிய அளவிலான அழுத்தம் கூட தருவதற்குத் தயாராக இல்லை.

தமிழகத்தில் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கு நடத்தப்பட்டு வந்த நுழைவுத்தேர்வுகளை ரத்து செய்து 2006-ஆம் ஆண்டில் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்துள்ளது.

இதனால் நீட் தேர்வு குறித்த முதன்மை வழக்கில் நுழைவுத் தேர்வு குறித்த தமிழகத்தின் வரலாறு மற்றும் சட்டத்தை எடுத்துக்கூறி எளிதாக விலக்கு பெறலாம். ஆனால், அதற்கான முயற்சிகளை செய்யாமல் நீட்டை தடுக்க முடியாது என அரசு கூறுவது கண்டிக்கத்தக்கது. தமிழக அரசு இனியும் அலட்சியம் காட்டாமல் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி மத்திய அரசிடமிருந்தோ, உச்ச நீதிமன்றத்திடமிருந்தோ நீட் தேர்வுக்கு விலக்கு பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

அண்ணா நினைவு நாள்: மதிமுக இன்று அமைதி ஊர்வலம்

சென்னை, பிப்.2: அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு, மதிமுக சார்பில் சென்னையில் சனிக்கிழமை (பிப்.3) அமைதி ஊர்வலம் நடத்தப்பட உள்ளது. இதுகுறித்து மதிமுக வெளியிட்ட அறிவிப்பு:-

அண்ணாவின் 49-ஆவது நினைவுநாளை முன்னிட்டு சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற உள்ளது. சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா சாலையில் உள்ள, காவல் நிலையம் அருகிலிருந்து பேரணி புறப்பட்டு, சென்னை கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறைக்கு புதிய ஜீப்புகள்

பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்களின் கள ஆய்வுப் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட 32 புதிய ஜீப்புகளை கொடியசைத்து தொடங்கி வைத்த முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி. (இடமிருந்து) அமைச்சர்கள் செல்லூர் ராஜூ, டி.ஜெயக்குமார், துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள் செங்கோட்டையன், திண்டுக்கல் சீனிவாசன் தலைமைச்செயலர் கிரிஜா வைத்தியநாதன், பள்ளிக் கல்வித் துறை செயலர் பிரதீப் யாதவ்.

வழங்கினார் முதல்வர்

சென்னை, பிப். 2: பள்ளிக்கல்வித் துறையில் கள ஆய்வுக்காக 32 புதிய ஜீப்புகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெள்ளிக்கிழமை வழங்கினார்.

2017 -18-ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில், 'பள்ளிகளை அடிக்கடி ஆய்வு செய்வதற்கு பள்ளிக் கல்வித் துறையின் மாவட்ட அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வாங்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இந்தத் துறையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்களின் கள ஆய்வுப் பணிகளுக்காக ரூ.1 .92 கோடி செலவில் வாங்கப்பட்ட 32 புதிய ஜீப்புகளை தலைமை செயலகத்தில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

வாரிசுதாரர்களுக்குப் பணி: பொது நூலகத் துறையில் பணியாற்றி பணிக்காலத்தில் காலமான அரசுப் பணியாளர்களின் 20 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப மூன்றாம் நிலை நூலகர், கீழ்நிலை உதவியாளர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளையும் முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெள்ளிக்கிழமை வழங்கினார்.

நிகழ்ச்சியில் துணைமுதல்வர் ஓ.பன்னீர்செல்வம், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் பிரதீப் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டி

சென்னை, பிப்.2: உள்ளாட்சித் தேர்தலில் தமாகா தனித்துப் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் கூறினார். சென்னையில் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை அவர் கூறியது:

முஸ்லிம்களுக்கான ஹஜ் பயண மானியத்தை மத்திய அரசு ரத்து செய்தது கண்டிக்கத்தக்கது. மீண்டும் மானியம் வழங்க வேண்டும். மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் மத்திய அரசு நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளது.

நிதிப் பற்றாக்குறை கடந்த ஆண்டைவிட குறைந்துள்ளது. மத்திய நிதிநிலை அறிக்கையை தமிழக முதல்வர் பாராட்டியதில் உள்நோக்கம் இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் தமிழக அரசு காலதாமதம் செய்கிறது. உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றால் தமாகா தனித்துப் போட்டியிடும் என்றார்.

மருத்துவக் கல்வி இயக்குநராக மீண்டும் எட்வின் ஜோ-வை நியமிக்க முடிவு

உயர்நீதிமன்றத்தில் மாநில அரசு தகவல்

மதுரை, பிப். 2: தமிழக மருத்துவக் கல்வி இயக்குநராக மீண்டும் எட்வின் ஜோவை நியமிக்க முடிவு செய்துள்ளதாக தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வெள்ளிக்கிழமை தெரிவித்தது. இதையடுத்து இந்த வழக்கு விசாரணை பிப். 7 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்த டாக்டர் எட்வின் ஜோ 2017 ஏப்ரலில் தமிழக மருத்துவக் கல்வி இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவரது நியமனத்தை எதிர்த்து கரூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி கயிலை ராஜன் தாக்கல் செய்த மனு அடிப்படையில் டாக்டர் எட்வின் ஜோ நியமனத்தை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

இதை எதிர்த்து அரசுத் தரப்பில் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதை விசாரித்த நீதிபதிகள் அமர்வு, மருத்துவக் கல்வி இயக்குநர் நியமனம் தொடர்பான அரசாணை மற்றும் தனி நீதிபதி உத்தரவையும் ரத்து செய்தது. மேலும், மருத்துவக் கல்வி இயக்குநர் பதவிக்குத் தகுதியான நபரை 6 வாரங்களில் நியமிக்கவும் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் இந்த உத்தரவை நிறைவேற்றவில்லை எனக்கூறி சுகாதாரத்துறைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என டாக்டர் ரேவதி கயிலை ராஜன் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மீண்டும் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் என்.கிருபாகரன், ஆர்.தாரணி அடங்கிய அமர்வு முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு வழக்குரைஞர் ஆஜராகி, மருத்துவக் கல்வி இயக்குநராக எட்வின் ஜோவை மீண்டும் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பணி அனுபவம் மற்றும் பணி மூப்பின் அடிப்படையில் அவரை நியமனம் செய்ய முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

மேலும், மருத்துவக் கல்வி இயக்குநருக்கான பட்டியலில் இடம் பெற்றவர்களின் ஒப்பீட்டு அறிக்கையைத் தாக்கல் செய்தார். அதில், எட்வின் ஜோவிற்கு சாதகமாக 9 அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இதைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், எட்வின் ஜோவுக்கு ஆதரவாக ஒன்பது அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், ரேவதி கயிலை ராஜனுக்கு சாதகமாக ஒரு அம்சம் கூட ஏன் குறிப்பிடப் படவில்லை? இதன்மூலம் அவர்கள் மருத்துவத் துறையில் செய்த சேவை களங்கப்படுத்தப்படுகிறது என்றனர்.

அப்போது, இந்த வழக்கில் தன்னையும் இணைக்கக்கோரி டாக்டர் மீனாட்சி சுந்தரம் தரப்பு வழக்குரைஞர் கோரிக்கை விடுத்து வாதிடுகையில், 2015 ஆம் ஆண்டு மருத்துவக் கல்வி இயக்குநர் பணிக்கான தேர்வு பட்டியலில் டாக்டர் மீனாட்சி சுந்தரம் இடம்பெற்றிருந்தார். ஆனால், அவர் மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்த காலத்தில் அவருக்கு தொடர்பில்லாத ஒரு குற்றச்சாட்டின் அடிப்படையில் குறிப்பாணை வழங்கப்பட்டது. இதனால் அவருக்கு மருத்துவக் கல்வி இயக்குநர் பதவி மறுக்கப்பட்டது.

இதைப் பதிவு செய்த நீதிபதிகள், நீண்ட ஆண்டுகள் சேவை புரிந்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்கவில்லை என்றாலும் குறைகள் கூறி அவர்களது சேவையை களங்கப்படுத்தாதீர்கள் என்றனர்.

மேலும், ரேவதி கயிலைராஜனின் வழக்கில் தனி நீதிபதி மற்றும் நீதிபதிகள் அடங்கிய அமர்வு பிறப்பித்த வழிகாட்டல்கள் மற்றும் உத்தரவுகளைத் தாக்கல் செய்ய டாக்டர் ரேவதி கயிலைராஜன் தரப்பு வழக்குரைஞருக்கு உத்தரவிட்டு விசாரணையை பிப்ரவரி 7 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

ஊரக வேலை வாய்ப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்

சென்னை, பிப். 2: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை ரூ.1 லட்சம் கோடியாக அதிகரிக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: ஊரகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்துக்கு மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் ரூ.55 ஆயிரம் கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைவிட இது அதிகம் என்றாலும், ஊரக மக்களுக்கு ஓரளவுக்கு வேலை வழங்குவதற்குக் கூட இந்த நிதி போதுமானது இல்லை.

கிராமப்புறங்களில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 100 நாள்கள் வேலை வழங்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றாலும், சராசரியாக 50 நாள்களுக்குக் கூட வேலை வழங்கப்படுவதில்லை.

அதற்குக் காரணம் நிதி பற்றாக்குறை தான். போதிய அளவில் நிதி ஒதுக்கப்படாததால் 2012-13-ஆம் ஆண்டில் பயனாளிகளுக்கு ரூ.2,034 கோடி ஊதிய நிலுவை ஏற்பட்டது. இது படிப்படியாக அதிகரித்து 2016-17-ஆம் ஆண்டு முடிவில் ரூ.13,220 கோடி ஆனது. 2017-18-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ரூ.48 ஆயிரம் கோடியில் நிலுவைத் தொகையை வழங்கியது போக மீதமுள்ள நிதியைக் கொண்டுதான் புதிய பணிகளுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

கடந்த காலங்களில் இத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 23 முதல் 25 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டு வந்தது. ஆனால், வரும் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு வெறும் 15 சதவீதம் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்துக்காக ரூ.48 ஆயிரம் கோடி வழங்கப்பட்ட நிலையில், அந்தத் தொகை முதல் 6 மாதங்களிலேயே செலவழிக்கப்பட்டு விட்டது.

அதனால் செப்டம்பர் மாதத்துக்குப் பிறகு பயனாளிகள் யாருக்கும் ஊதியம் வழங்கப்படாமல் திட்டம் முடங்கிக் கிடக்கிறது. எனவே, இந்தத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை ரூ. 1 லட்சம் கோடியாக அதிகரிக்க வேண்டும் என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

12 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள்

அமைச்சர் செங்கோட்டையன் தகவல்

சென்னை,பிப்.2: தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துவதற்காக 12 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் அமைக்கப்படும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.

நூலகங்கள், தகவல் மையங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்ற தலைப்பிலான இரண்டு நாள் தேசிய மாநாட்டை சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் அமைச்சர் செங்கோட்டையன் வெள்ளிக்கிழமை தொடக்கி வைத்தார். இதைத்தொடர்ந்து நிகழ்ச்சியில் அவர் பேசியது:-

மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்காக நூலகங்களை சிறந்த முறையில் தமிழக அரசு மேம்படுத்தி வருகிறது. தமிழகத்தில் 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட மைய நூலகங்களில் ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளுக்கு இலவச பயிற்சிகள் விரைவில் வழங்கப்படும்.

119 **நூலகங்கள் டிஜிட்டல் மயம்:** அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 312 முழு நேர நூலகங்களில் 119 நூலகங்களை டிஜிட்டல் மயமாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழகத்தின் முக்கிய ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த நூலகத்தின் மேம்பாட்டுக்கு தற்போது ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை போரில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் நூலகத்துக்கு தமிழகத்தின் சார்பில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஒரு லட்சம் அரிய நூல்கள் வழங்கவுள்ளார்.

பள்ளி மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துவதற்காக 12 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் திட்டம் செயல்படுத்தப்படும். காலை, மாலை இருவேளைகளிலும் நடமாடும் நூலகங்கள் (வாகனங்கள்) பள்ளிகளுக்குச் சென்று பயனுள்ள நூல்களை மாணவர்கள் படிப்பதற்காக வழங்கும் . அதேபோன்று மாணவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை உருவாக்குவதற்காக வாரத்துக்கு ஒரு மணி நேரம் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் புத்தக வாசிப்பை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒரு லட்சம் உறுப்பினர்களைச் சேர்க்க இலக்கு: கல்விக்கான மேல்வரி 4 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பெறப்படும் நிதி நூலகத்தை வலுப்படுத்த பயன்படுத்தப்படும். உள்ளாட்சியிலிருந்து நூலகத் துறைக்கு கிடைக்க வேண்டிய நிதி விரைவில் பெறப்படும். தமிழகத்தில் உள்ள நூலகங்களில் இந்த ஆண்டுக்குள் ஒரு லட்சம் உறுப்பினர்களைச் சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

இதில்பள்ளிக்கல்வித்துறைமுதன்மைச் செயலர் பிரதீப் யாதவ், இயக்குநர் ரெ.இளங்கோவன், பொது நூலகத்துறை இயக்குநர் வி.சி.ராமேஸ்வரமுருகன், இணை இயக்குநர் எஸ்.நாகராஜ முருகன், சென்னை மாவட்ட நூலக அலுவலர் இளங்கோ சந்திரகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நீட் தேர்வு: அமைச்சர் விளக்கம்

நீட் விவகாரம் தொடர்பாக, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் விளக்கம் அளித்தார். இது தொடர்பாக அமைச்சர் செங்கோட்டையன் கூறியது:

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற கருத்தில் தமிழக அரசு உறுதியோடும், தெளிவாகவும் இருக்கிறது. இதுகுறித்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோரை நேரடியாக சந்தித்தபோது மூன்று முறையும், குடியரசுத் தலைவரைச் சந்தித்தபோது ஒரு முறையும் வலியுறுத்தியுள்ளார்.

நீட் தேர்விலிருந்து மாணவர்களை முழுமையாக காப்பாற்ற வேண்டும் என்பதே அரசின் முதன்மையான நோக்கமாகும். நீட் பயிற்சிக்காக முதல் கட்டமாக 100 பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஓரிரு நாள்களில் தமிழகத்தின் அனைத்து ஒன்றியங்களிலும் 412 பயிற்சி மையங்களும் செயல்படும். மேலும் பயிற்சி பெறும் 72 ஆயிரம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

இந்தப் பயிற்சியின் போது பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வாரந்தோறும் மதிப்பெண் வழங்கப்படும்.

அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு சென்னையில் உள்ள நான்கு கல்லூரிகளில் தங்கும் வசதியுடன் சிறப்பு பயிற்சி வழங்கப்படும் என்றார்.

பிப்.12 க்குள் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை அமல்படுத்த வேண்டும்: மின்சார வாரிய தொழிற்சங்கங்கள் கெடு

சென்னை, பிப்.2: மின்சார வாரிய தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை பிப்.12-ஆம் தேதிக்குள் செயல்படுத்தவேண்டும் என்று மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் எஸ்.எஸ்.சுப்பிரமணியன் வெள்ளிக்கிழமை சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழ்நாடு மின்சார வாரியம், அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு 2.57 காரணி ஊதிய உயர்வு வழங்குவது தொடர்பான முத்தரப்பு பேச்சுவார்த்தை கடந்த ஜனவரி 22-ஆம் தேதி, தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மின்வாரிய அதிகாரிகள், தொழிலாளர் நலத் துறை ஆணையர் பங்கேற்புடன் நடைபெற்றது. இதில் பிப்ரவரி மாதம் 12-ஆம் தேதிக்குள் தொழிற்சங்கங்கள் வலியுறுத்திய தின் அடிப்படையில் ஊதிய உயர்வுப் பிரச்னையை சுமுகமாக முடிப்பதாக நிர்வாகத் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. இதையடுத்து ஜன.23-ஆம் தேதி நடைபெறவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தாற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

ஏற்கெனவே பேச்சுவார்த்தையில் இறுதி செய்யப்பட்ட ஒப்பந்தத்தை போடாமல் அதை மாற்றி அமைக்க மீண்டும் அரசு முயற்சி செய்கிறது. அதை ஏற்க நாங்கள் தயாராக இல்லை.

எனவே இறுதி செய்த ஊதிய உயர்வை வரும் பிப்.12-ஆம் தேதிக்குள் அமல்படுத்த வேண்டும். அப்படி ஒப்பந்தம் அமல்படுத்தாவிடில், 16-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் உள்ள 50 ஆயிரம் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் 10 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

அதற்கு முன்னதாக பிப். 6, 8 ஆகிய தேதிகளில் மாநிலம் முழுவதும் உள்ள 9 மண்டலங்களில் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம். மேலும் மின்சார வாரியம் லாபகரமாக இயங்குவதாக வாரியத்தின் தலைவர் அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். வரவு-செலவுக் கணக்கிலும் வாரியம் லாபத்தில் இயங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க முன்கூட்டியே, இறுதி செய்த 2.57 காரணி ஊதிய உயர்வை வழங்க வேண்டும். 1.12.2015 முதல் 26 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள ஊதிய உயர்வை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடர்ந்து பல்வேறு வகைகளில் போராட்டங்கள் நடத்தி வருகிறோம்.

இந்நிலையில், இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது எனத் தெரியவில்லை. மின்வாரியத்தில் காலியாக உள்ள 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்ப வேண்டும். ஒப்பந்த ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு கடந்த 3 ஆண்டுகளாக பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகிறது. இது குறித்து அரசு ஒரு சிறு நடவடிக்கையைக் கூட இதுவரை எடுக்கவில்லை என்றார் சுப்பிரமணியன்.

தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

சனிக்கிழமை 3-2-2018
ஹேவிளம்பி தை 21 ஹிஜ்ரி 1439 ஜமாத்துல் அவ்வல் 16

2018–19 நிதிநிலை அறிக்கை – II

மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தாக்கல் செய்திருக்கும் 2018–19க்கான நிதிநிலை அறிக்கை நான்கு அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை குறித்து மிக அதிகமாகப் பேசப்படுவது, தேசிய அளவில் 10 கோடி ஏழை இந்திய குடும்பங்களுக்கு மருத்துவ காப்பீடு அளிக்கும் பிரம்மாண்டமான திட்டம்.

இரண்டாவதாக, 'உஜ்வலா யோஜனா' என்று பரவலாக அறியப்படும் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்திற்கு, நிதியமைச்சர் அருண் ஜேட்லியின் நிதிநிலை அறிக்கை முன்னுரிமை அளித்திருக்கிறது. இந்தியாவில் ஏறத்தாழ 25 கோடி குடும்பங்கள் இருக்கின்றன. உஜ்வலா யோஜனா திட்டத்தின்படி எட்டு கோடி குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு தர முனைந்திருக்கிறது நரேந்திர மோடி அரசு. இந்தியாவில் வாழும் ஏறத்தாழ 33 விழுக்காடு குடும்பங்கள் - அநேகமாக அனைத்து குறைந்த வருவாய் பிரிவினருக்கும் இலவச சமையல் எரிவாயு இணைப்பை வழங்க அரசு முனைந்திருக்கிறது.

நிதிநிலை அறிக்கையில் மூன்றாவதாக காணப்படும் முனைப்பு விவசாயிகளும் விவசாயமும் தொடர்பானது. விளை பொருள்களுக்குத் தரப்படும் குறைந்தபட்ச ஆதார விலையை, உற்பத்திச் செலவைவிட ஒன்றரை மடங்கு அதிகமாக நிர்ணயிக்கப் போவதாக அரசு அறிவித்திருக்கிறது. அடுத்து வர இருக்கும் காரீப் சாகுபடியிலிருந்து அமலுக்கு வர இருக்கும் இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு உறுதியான வருவாய்க்கு உத்தரவாதம் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமப்புறங்களில் நிலவும் அதிருப்தியை இதன் மூலம் கணிசமாகக் குறைக்க முடியும் என்று கருதுகிறார் நிதியமைச்சர். இந்தத் திட்டத்தில் அரிசி, சிறுதானியங்கள் உள்ளிட்டவை பயன்பெறுமா என்பது குறித்த தெளிவான விளக்கம் இல்லை. அப்படியில்லாமல் போனால், அரசு எதிர்பார்க்கும் பயன் கிடைக்காமல் போய்விடக் கூடும். நிதியமைச்சர் வேளாண் விளைபொருள்களை வாங்குவதற்கு ஏறத்தாழ 22,000 உள்ளூர் சந்தைகளைத் தரம் உயர்த்தப்போவதாகத் தெரிவித்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், வேளாண் பொருள்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்குகள் உள்ளிட்ட வசதிகளை மேம்படுத்த ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விவசாயம் தொடர்பான நடவடிக்கைகளுக்குக் கடனுதவி அளிப்பதற்காக ரூ.11 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான அம்சம், குத்தகைதாரர்களுக்கும் விவசாயக் கடன் தரலாம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் கொள்கை முடிவு. இதுவரை நிலத்தின் பேரில் நில உடைமையாளர்கள் மட்டும்தான் விவசாயக் கடன் பெற முடியும். இனிமேல் குத்தகைதாரர்களுக்கும் கடன் தரலாம் என அறிவித்திருப்பது கார்ப்பரேட் நிறுவனங்கள் சிறு விவசாயிகளின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பெரிய அளவில் பண்ணை விவசாயம் செய்வதை ஊக்குவிப்பதற்காகக் கூட இருக்கக் கூடும்.

விவசாயத்துடன் மீன்பிடித் துறையும், கால்நடைத் துறையும் நிதியமைச்சரின் கருணைப் பார்வை பெற்றிருக்கின்றன. கிராமப்புற அதிருப்தியை அகற்றுவதில் இவையும்கூடப் பங்களிப்பு நல்கும் என்று கருதுவதாகத் தெரிகிறது. மீன்பிடித் துறையையும், கால்நடைத் துறையையும் மேம்படுத்த ரூ.10,000 கோடி முதலீட்டில் நிதியம் ஒன்றை ஏற்படுத்த அரசு முற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்தத் துறைகளையும் வேளாண் கடன் அட்டை திட்டத்தில் இணைக்க முடிவெடுத்திருக்கிறது. அதேபோல, தேசிய மூங்கில் திட்டத்தின் மூலம் மூங்கில் உற்பத்திக்கும் அரசு ஊக்கமளிக்க முற்பட்டிருக்கிறது.

நிதியமைச்சரின் நான்காவது முன்னுரிமை தலித்துகள் மற்றும் ஆதிவாசிகள் நலம் தொடர்பானது. பாஜக தலைமையிலான தேசிய முற்போக்குக் கூட்டணி அரசு தலித்துகளுக்கு எதிரானது என்கிற தோற்றம் கடந்த மூன்றரை ஆண்டுகளாகவே நிலவுகிறது. அந்தத் தோற்றத்தை இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் மாற்ற முனைந்திருக்கிறார் நிதியமைச்சர் அருண் ஜேட்லி.

பட்டியலினத்தவர்களின் நலனுக்காக ரூ.56,619 கோடி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆதிவாசிகளின் நலனுக்காக ரூ.39,135 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு பட்டியலினத்தவர்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் எந்த நிதிநிலை அறிக்கையிலும் இதற்கு முன்னால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக நினைவில்லை.

ஆதிவாசிகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக ஏற்கெனவே ஏகலவ்யா வித்யாலயா உறைவிடப் பள்ளிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. 2022–க்குள் 50%–க்கும் அதிகமாக ஆதிவாசிகள் வாழுகின்ற அல்லது 20,000 பேருக்கும் மேலாக இருக்கும் பகுதிகளில் எல்லாம் ஏகலவ்யா வித்யாலயா உறைவிடப் பள்ளி நிறுவ இருப்பதாக நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார். இந்த ஏகலவ்யா வித்யாலயா உறைவிடப் பள்ளிகள், நவோதயா பள்ளிகளுக்கு நிகரான எல்லாக் கட்டமைப்பு வசதிகளையும் பெற்றிருப்பதுடன், ஆதிவாசிக் குழந்தைகளை விளையாட்டிலும் திறன் மேம்பாட்டிலும் தயார்படுத்தும் விதத்தில் தரம் உயர்த்தப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார் நிதியமைச்சர்.

மேலே குறிப்பிட்ட நான்கு முக்கியமான அம்சங்கள் தவிர, ஐந்தாவதாக சொல்ல வேண்டுமானால், ரூ.250 கோடிக்கு கீழே விற்றுமுதல் உள்ள நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் 5% அதிகரித்த வரிச் சலுகை. இந்தச் சலுகை மட்டுமல்லாமல், நடுத்தர சிறு, குறு வியாபார நிறுவனங்களுக்கு கடனுதவி அளிப்பதற்காக ரூ.3,794 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. முத்ரா திட்டத்தின் கீழ் ரூ.3,50,000 கோடி கடனுதவி வழங்க அரசு திட்டமிட்டிருக்கிறது. இவையெல்லாம் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான ஊக்குவிக்கும் முயற்சிகள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் அருண் ஜேட்லி நிர்ணயித்துக் கொண்டிருக்கும் இலக்குகளை தனது முதல் நிதிநிலை அறிக்கையிலேயே நிர்ணயித்து நடைமுறைப்படுத்தியிருந்தால்...

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியஆம்
சொல்லிய வண்ணம் செயல்.

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம்; சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.

திருக்குறள் (எண்: 664) *அதிகாரம்: வினைத்திட்பம்*

குறை காண ஏதுமில்லை!

எஸ். குருமூர்த்தி

முந்தைய அரசின் ஊழல்கள், தள்ளாடும் நிலையில் கைவிடப்பட்டிருந்த பொருளாதாரம், வெளி வர்த்தகப் பற்றாக்குறை, கொள்கைக் குழப்பங்களால் இந்தியப் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் இருந்தது. எனவே, தற்போதைய மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லியின் முதல் மூன்று நிதிநிலை அறிக்கைகளும் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த இந்தியப் பொருளாதாரத்தை மீட்கும் நோக்கம் கொண்டவையாக மட்டுமே இருந்தன. முந்தைய நிதிநிலை அறிக்கை பண மதிப்பிழப்பு நடவடிக்கையின் தாக்கத்தால் ஏற்பட்டிருந்த பாதிப்புகளின் பின்னணியில் அமைந்திருந்தது.

முந்தைய நிதிநிலை அறிக்கைகளை போலல்லாமல் முற்றிலும் தடைகளற்ற நிலையில் தற்போதைய 2018-19க்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார் அருண் ஜேட்லி. ஜிஎஸ்டி அறிமுகத்தால் சில பாதிப்புகள் இருந்தாலும்கூட அரசுக்கு கணிசமான அளவில் தற்போது வருவாயும் ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக அடைந்திருக்கும் வலுவான பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் இந்த 2018-19 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பண மதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி. ஆகியவற்றால் சரிவு கண்டு மீண்டெழுந்த உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறைகளும், இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்ட ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியும் (ஜி.டி.பி.) இந்த நிதிநிலை அறிக்கைக்கு வலு சேர்த்திருக்கின்றன.

இதற்கு முன்னர், வங்கிகளின் மீட்க இயலாத வாராக் கடன், அயல்நாட்டு வர்த்தகத்தில் சுமையான நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஆகிய இரு அம்சங்களும் இந்தியப் பொருளாதாரத்தை மிரட்டுபவையாக விளங்கின. அரசு மேற்கொண்ட துணிச்சலான இரு நடவடிக்கைகளால் பொருளாதாரத்தில் நேர்மறையான சூழல் உருவாகியுள்ளது என்று பொருளாதார ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. இதுவே தற்போதைய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு ஆதாரமாக உள்ளது என்று நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பண மதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி. ஆகியவற்றின் மூலம் ஆக்கபூர்வமான நான்கு பலன்களை அரசு அடைந்திருக்கிறது.

1. நேரடியாக வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; 18 லட்சம் பேர் புதிதாக வரி செலுத்த உள்ளனர். அதேபோல, மறைமுக வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 50 சதவீதம் உயர்ந்துள்ளது.

2. ஜி.எஸ்.டி. வரித்தாக்கல் பதிவுகள், தொழிலாளர் ஈட்டுறுதி நிறுவனத்தில் செய்யப்பட்ட பதிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் செய்த ஆய்வில், முறைசார்ந்த தொழில்துறையில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 12.5 கோடி என்பது தெரியவந்துள்ளது. இது முன்னர் 2.95 கோடி என்று கருதப்பட்டுவந்தது.

3. ஜி.டி.பி.யுடன் தனிநபர் வரி வசூல் ஒப்பீட்டு விகிதம் 2009-2010 முதல் 2014-15 வரை 1.1 ஆக இருந்தது. இதுவே 2016-17-இல் 1.91 ஆகவும், 2018- 19இல் (2018 ஜனவரி 15 வரை) 2.11 ஆகவும் அதிகரித்துள்ளது. இவை வரி வசூலில் காணப்படும் இணக்கமான சூழலை வெளிப்படுத்துகின்றன. இதனால் கடந்த இரு ஆண்டுகளில் மட்டும் ரூ.90,000 கோடி கூடுதலாக வரி வருவாய் கிடைத்துள்ளது.

4. நமது பொருளாதாரம் மாபெரும் அளவில் முறைப்படுத்தப்பட இந்த இரு நடவடிக்கைகளுமே காரணம்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொருத்த வரை, நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் பயனளிப்பதாக அமைந்திருப்பது அதன் சிறப்பாகும். அதைத் தவிர குறிப்பிடத் தகுந்த மற்றொன்று, விவசாயம், ஊரக வளர்ச்சிக்கு மிகப் பெரும் முதலீடுகளுடன் தொலைநோக்குத் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கை அறிவித்திருக்கிறது. விவசாயிகள் சாகுபடிக்குச் செய்யும் செலவைவிட 50 சதவீதம் அதிகமாக, விளைபொருளுக்கு லாபகரமான விலை கிடைக்கச் செய்வதாக நிதிநிலை அறிக்கை உறுதி அளிக்கிறது.

விவசாய விளைபொருள்கள் உற்பத்தியாகும் கிராம, ஊரகப் பகுதிகளிலேயே டிஜிட்டல் சந்தையை அறிமுகப்படுத்துவதன் மூலமாக, விளைபொருள் கொள்முதலை முறைப்படுத்துவதன் வாயிலாக, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்ய அரசு திட்டமிடுகிறது. ஏனெனில் கிராமப் பகுதிகளில்தான் விவசாய விளைபொருள்கள் பெரும்பாலும் விற்பனையாகின்றன. டிஜிட்டல் மயமாக்கல் மூலமாக விவசாயிகளின் விளைபொருள் கிராம எல்லையைத் தாண்டும்போது அவர்களுக்கு உரிய லாபம் கிடைக்கும். இதை சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை யாரும் கற்பனை கூட செய்திருக்க இயலாது.

இந்த நிதிநிலை அறிக்கை, மகளிர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், இதுவரை கவனம் பெறாதவர் உள்ளிட்டோருக்கு பல நன்மைகளை அறிவித்துள்ளது. உலகிலேயே மிகப் பெரிய அரசு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை - 10 கோடி குடும்பங்களிலுள்ள 50 கோடி மக்கள் பயன்பெறும் வகையிலான திட்டத்தை - இந்த நிதிநிலை அறிக்கை அறிவித்துள்ளது.

முறைசார் தொழில்துறையில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் தற்போதைய மத்திய நிதிநிலை அறிக்கைட் உறுதி அளித்துள்ளது. அமைப்பு சாரா சிறு, குறு தொழில்களை மேம்படுத்த உதவும் முத்ரா கடனுதவித் திட்டத்தில் ரூ. 3 லட்சம் கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டங்களின் கால எல்லையை 2022-லிருந்து 2019-ஆக குறைக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பங்குஏற்கெனவேநிறைவேறிவிட்டது. அது மட்டுமல்ல, தேசிய நெடுஞ்சாலை அமைப்புத் திறனாக நடப்பு ஆண்டு அறிவிக்கப்பட்ட 9,000 கி.மீ. என்பதை உயர்த்தி, எதிர்கால இலக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் இதற்கு முன் அறிவித்த இலக்குகளில் நிறைவேறியவை குறித்த பெருமிதத்துடன் எதிர்கால இலக்குகளை உறுதிப்பாட்டுடன் முன்வைத்திருக்கிறார். இது அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலை மனதில் கொண்டு, மிக ஆழ்ந்து திட்டமிடப்பட்ட நிதிநிலை அறிக்கை என்பதில் சந்தேகமில்லை. அதே சமயத்தில், வெறும் கவர்ச்சித் திட்டங்கள் என்று குறை சொல்லும் விதத்தில் இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில் குறை கூற வாய்ப்புள்ள பிரிவினர் மாதாந்திர ஊதியம் பெறும் நடுத்தர வர்க்கத்தினர்தான். அவர்கள் எதிர்பார்த்தபடி வருமான வரி விலக்கில் எந்த மாற்றமும் இல்லை. அவர்களையும் நிதிநிலை அறிக்கை கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். எனினும், தனி நபர் பொருளாதாரம் சார்ந்தும், தேசப் பொருளாதாரம் சார்ந்தும், இந்த நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எதிர்பார்க்கப்படும் வரி வருவாய் அதிகரிப்பால் வரும் நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 3.3 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறார் நிதியமைச்சர் அருண் ஜேட்லி. மேலும், அரசின் கடன் சுமை ஜி.டி.பி.யில் 40 சதவீதமாகக் கட்டுப்படுத்தப்படும் என்றும் நிதி அமைச்சர் உறுதி அளித்திருக்கிறார். பங்குச் சந்தையை விரைவுபடுத்தக் கூடிய மூலதன ஆதாய வரியை மீண்டும் கொண்டுவருவதாக அறிவித்திருப்பது நிதிநிலை அறிக்கையின் துணிவான முடிவு.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இந்த நிதிநிலை அறிக்கையில் பொருளாதாரத்தின் அடிப்படைகள் தொடர்பாக குறை காண ஏதுமில்லை. அரசியல் ரீதியாகவும், சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பயனடையும் மாபெரும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கை அளித்துள்ளது. இதுவரை பல பத்தாண்டுகளாக கணக்கில் கொள்ளப்படாதிருந்த மூலதன ஆதாய வரி விதிப்பை அமல்படுத்துவதன் மூலம் அதற்கான நிதித் தேவை சரி செய்யப்படுகிறது.

இந்த நிதிநிலை அறிக்கையை இடதுசாரிகள் குறை கூற முடியாது. வலதுசாரிகள் மனக்குறைபடவும் இதில் ஏதுமில்லை. எனவே நிதிநிலை அறிக்கை தேர்வில் நிதியமைச்சர் அருண் ஜேட்லிக்கு முழுமையான மதிப்பெண்ணை வழங்கியாக வேண்டியுள்ளது.

எனினும் இந்தப் பாராட்டு மதிப்பீடு, நாடாளுமன்றத்தில் அருண் ஜேட்லி நிகழ்த்திய உரையின் அடிப்படையில் அமைந்தது மட்டுமே. நிதிநிலை அறிக்கை ஆவணங்களிலுள்ள புள்ளிவிரங்களின் அடிப்படையில் இந்த மதிப்பீடு அளிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். நிதியமைச்சர் கூறிய விவரங்களின் நம்பகத்தன்மை அடிப்படையில் அமைந்த, நிதிநிலை அறிக்கை மீதான உடனடிக் கருத்து வெளிப்பாடாக மட்டும்தான் இந்தக் கட்டுரையைக் கருத வேண்டும்.

கட்டுரையாளர்:
ஆசிரியர், துக்ளக் வார இதழ்.

இந்த நிதிநிலை அறிக்கையை இடதுசாரிகள் குறை கூற முடியாது. வலதுசாரிகள் மனக்குறைபடவும் இதில் ஏதுமில்லை. எனவே நிதிநிலை அறிக்கை தேர்வில் நிதியமைச்சர் அருண் ஜேட்லிக்கு முழுமையான மதிப்பெண்ணை வழங்கியாக வேண்டியுள்ளது.

முன்கூட்டியே வருமா மக்களவைத் தேர்தல்?

சி. விஜயசேகர்

மக்களவைத் தேர்தல் அடுத்த ஆண்டு தான் (2019) நடத்தப்பட வேண்டும். ஆனால், அண்மைக் காலமாக நடந்துவரும் சில விஷயங்களைப் பார்த்தால் முன்கூட்டியே இத்தேர்தல் வந்து விடுமோ என்ற எண்ணம் எழுகிறது. அதாவது, நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் துவக்க நாளன்று குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையில் மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்ற யோசனையை வலியுறுத்தியிருந்தார். அதேபோல், பிரதமர் மோடியும் அக்கருத்தை மீண்டும் ஒரு முறை கூறியிருந்தார்.

இதை ஏற்கெனவே சில முறை மோடியும், பாஜகவினரும் கூறியிருந்தாலும், தற்போது மீண்டும் இக்கருத்து கூறப்பட்டிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது. காரணம், மத்தியில் பாஜக கூட்டணி அரசு அமைந்து தற்போது நான்காண்டுகள் ஆகிவிட்டன.

இந்த ஆண்டில் அக்கட்சியின் ஆட்சி நடைபெறும் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. அதேபோல், காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் கர்நாடகத்திலும் விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் வருகிறது. இந்த மாநிலங்களில் சத்தீஸ்கரைத் தவிர, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகியவற்றில் பாஜக ஆட்சிக்கு எதிரான மனப்போக்கு காணப்படுகிறது என்பதே யதார்த்த நிலை. கர்நாடகத்தில் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி மிகச்சிறப்பானது என்று கூற முடியாவிட்டாலும் பெரிய அளவில் ஆட்சி மீது அதிருப்தி காணப்படவில்லை. எனவே, மேற்கண்ட நான்கு மாநிலத் தேர்தல்களில் 3 மாநிலங்களில் காங்கிரஸ் வெற்றி பெற நல்ல வாய்ப்பு தெரிகிறது.

இவ்வாறு முக்கியமான மூன்று மாநிலங்களில் பாஜக தோல்வியடைந்தால் அது தேசிய அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அக்கட்சித் தலைவர்கள் கருதுகின்றனர். மேலும், இந்த மாநிலங்களில் கிடைக்கும் வெற்றியானது காங்கிரஸுக்கு புதிய உத்வேகத்தை அளிப்பதோடு பல்வேறு மாநிலங்களில் வலுவான மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கவும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திவிடும்.

எனவே, மேற்கண்ட 4 மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களுடன் மக்களவைத் தேர்தலையும் நடத்துவது பற்றி பாஜக மேலிடம் பரிசீலிக்கக் கூடும். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் செலவு குறையும் போன்ற காரணங்கள் இதற்குக் கூறப்பட்டாலும், காங்கிரஸ் வலுப்பெறுவதைத் தடுப்பதே பாஜகவின் உண்மையான நோக்கமாக இருக்கும்.

பாஜக கடந்த மக்களவைத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளைப் பொருத்தவரை, வேலைவாய்ப்பு உருவாக்கமும் முக்கியமான ஒன்றாகும். ஆனால், அக்கட்சியின் நான்காண்டு ஆட்சியில் இதுவரை பெரிய அளவில் வேலைவாய்ப்புகள் ஏதும் உருவாக்கப்படவில்லை. ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையால் சாமானிய மக்களுக்கு பெரிய அளவில் சிரமங்கள் ஏற்பட்டன. எனினும், அது கருப்புப் பணத்தை ஒழிக்க உதவும் என்ற நம்பிக்கையில் மக்கள் அந்தச் சிரமங்களை பொறுத்துக் கொண்டார்கள்.

மற்றபடி, பாஜகவின் நான்காண்டு ஆட்சியில் மிகப்பெரிய அளவில் ஊழல் குற்றச்சாட்டு எதுவும் எழாதது அக்கட்சிக்கு சாதகமான அம்சமே. முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 2ஜி, காமன்வெல்த், ஆதர்ஷ் என்று அடுக்கடுக்காக ஊழல்கள் வரிசைகட்டி நின்றன. தற்போது அந்த நிலை மாறியிருந்தாலும், பொருளாதார ரீதியில் இன்னும் சாதிக்க வேண்டியது ஏராளமாக உள்ளது.

நாடு முழுவதும் விவசாயிகள் பிரச்னை பெரிய அளவில் நீடிக்கிறது. ஆங்காங்கே நடைபெறும் மதவாதச் சம்பவங்களும், பாஜக, ஹிந்து அமைப்புகள் ஆகியவற்றின் சில தலைவர்கள் வெளியிடும் உணர்ச்சிகரமான கருத்துகளும் ஒரு சாராரிடையே வெறுப்பையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் மத்திய அரசு ஆட்சி மீது மக்களுக்கு மிகப் பெரிய அளவில் வெறுப்பும் காணப்படவில்லை என்றாலும், அடுத்த ஆண்டு வரை காத்திராமல் முன்கூட்டியே தேர்தலை நடத்தினால் அது ஆட்சியைத் தக்க வைக்க உதவும் என்று பாஜக தலைவர்கள் கருதலாம். கடந்த 2004-இல் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது சில மாதங்களுக்கு முன்பே மக்களவைத் தேர்தலை பாஜக எதிர்கொண்டது.

அப்போது அந்த முயற்சி அக்கட்சிக்கு கைகொடுக்கவில்லை. தமிழ்நாடு, பிகார், உத்தரப் பிரதேசம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் பாஜகவுக்கு சரியான கூட்டணி அமையாமல் போனதும், அந்த மாநிலங்களில் காங்கிரஸ் வலுவான கூட்டணிகளை அமைத்ததும் தான் பாஜகவின் தோல்விக்கு வழிவகுத்தது. இவற்றையும் பாஜக தலைவர்கள் கருத்தில் கொள்வார்கள்.

பாஜகவின் கூட்டணிக் கட்சிகளில் மூன்று கட்சிகள்தான் முக்கியமானவை. சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனை, நிதீஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் ஆகியவையே அவை. இந்தக் கட்சிகளில் சிவசேனைக்கும் பாஜகவுக்கும் நல்லுறவு இல்லை. ஆந்திர பாஜகவினரின் தொடர்ச்சியான விமர்சனம் காரணமாக கூட்டணியை மறுபரிசீலனை செய்யலாமா என்ற யோசனையில் சந்திரபாபு நாயுடு இருக்கிறார்.

ஐக்கிய ஜனதா தளத்துக்கும் பாஜகவுக்கும் இடையே பெரிய நெருடல் ஏதுமில்லை. ஆனால், 'கடந்த மக்களவைத் தேர்தலில் வென்ற அடிப்படையிலேயே அடுத்த மக்களவைத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு செய்யப்பட வேண்டும் ' என்று பிகார் பாஜக தலைவர்கள் கூறி வருகின்றனர். அதன்படி, பார்த்தால் பிகாரில் வரும் மக்களவைத் தேர்தலில் நிதீஷ் கட்சி 2 இடங்களில் மட்டுமே போட்டியிட முடியும். அப்படி ஒரு நிபந்தனையை பாஜக மேலிடம் முன்வைத்தால் நிதீஷ்குமார் கூட்டணியில் இருந்து வெளியேறத் தயங்க மாட்டார்.

இவ்வாறு கூட்டணிக் கட்சிகளின் அதிருப்தி அதிகரித்து உறவில் விரிசல் ஏற்படும் முன்பு மக்களவைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவது என்று பாஜக முடிவெடுத்தால் அதில் வியப்படைய ஏதுமிருக்காது.

அன்புள்ள ஆசிரியருக்கு...

கவனம் தேவை

'இதுவல்ல வளர்ச்சி' தலையங்கம் (26.1.2018) படித்தேன். வளர்ச்சி என்பது பரவலாக இன்றி, ஓரிடத்தில் வளம் குவியும் என்றால் நாட்டின் வளர்ச்சியில் தேக்கம் ஏற்படும். சமச்சீர் வளர்ச்சியில் பிரதமர் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

பி.கே.ஜீவன்,
கும்பகோணம்.

எச்சரிக்கை!

தி.இராசகோபாலனின் 'இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும்' கட்டுரை படித்தேன். நாட்டு மக்கள் இனியும் சொப்பன உலகத்தை நம்பாமல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதை வாக்காளர்களுக்கு உணர்த்துகிறார் கட்டுரை ஆசிரியர்.

எம். சம்பத்குமார்,
திண்டல்.

வழிகாட்டியாக...

'தெளிவு பிறக்கட்டும்' கட்டுரை படித்தேன். தற்கால இளம் தலைமுறையினரிடையே மனிநேயம் இல்லை. பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு நல்ல அறிவுரை கூறுவதோடு, வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

கே.அனந்தநாராயணன்,
கன்னியாகுமரி.

பொருத்திப் பார்க்கலாம்

'திருவாசகம்–திருஅருட்பா ஒப்புமைப் பகுதிகளை' தவத்திரு ஊரன் அடிகள் தெளிவுற விளக்கியுள்ளமை சிறப்பு. இறைவனை தாய் – தந்தையாக இணைத்துப் பாடியுள்ளதையும் குறிப்பாகவும், சிறப்பாகவும், தந்தை உறவாகச் சிறப்பித்துப் பாடியுள்ளதையும் 'வள்ளலாரின் ஏக்கம்' கட்டுரை எழுலுறத் தொடுத்து இயம்பியுள்ளது.

ஆன்மா அங்கலிங்கமாக மாறி, பிறப்பு–இறப்பு இல்லாப் பெருவாழ்வை அடைந்ததோடு, அப்பரடிகள் திருப்புகலூர் கோயில் சிவலிங்கத்தில் ஐக்கியமானதைச் [illegible]

ஆனால், மரணமில்லாப் பெருவாழ்வு பெற முத்தேக சித்தி பெற்று வள்ளலார் அருட்பெருஞ் ஜோதியில் கலந்தார் என்பதே சன்மார்க்கச் [illegible] பொருந்துவதாகும். இதனை 'அங்கலிங்கம்' கட்டுரையில் பொருத்திப் பார்ப்பது நன்று.

அ.சிவராமசேது,
திருமுருகன்பூண்டி.

மூன்றும் சிறப்பாக இருந்தன

தமிழ்மணி(28.1.18) படித்தேன். வள்ளலார் தொடர்பான கட்டுரைகள் மூன்றும் சிறப்பாக இருந்தன. தவத்திரு ஊரன் அடிகள் எழுதிய 'மாணிக்க வாசகரும் வள்ளலாரும்' என்ற நூலில் மேலும் பல ஒப்புமைகள் உள்ளன. அவற்றுள் பதிவு செய்யப்பட வேண்டிய ஓர் ஒப்புமையைக் கட்டுரையுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

மனிதர் ஒரு நாளைக்கு 21600 முறை மூச்சை இழுத்துவிடும் உயிர்ப்பை போல், திருப்பெருந்துறையில் கருவறை விமானத்தின் செப்பு ஓடுகள் 21600 என்பதோடு, அவற்றின் ஒவ்வொன்றிலும் 'நமச்சிவாய' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

அதுபோல் வடலூரில் சத்தியஞான சபையைச் சுற்றியுள்ள சங்கிலியானது 21600 வளையமாகக் கோக்கப்பட்டுள்ளது. மேலும், 'வள்ளலாரின் ஏக்கம்' கட்டுரையில் கூறப்பட்டிருந்த ஏக்கம் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

தெ.முருகசாமி,
புதுச்சேரி.

அகச்சான்றுகள்

'வள்ளலாரின் ஏக்கம்' கட்டுரை படித்தேன். இறைவன் தாயும் தந்தையும் இணைந்த அன்புருவம். பெரியருட்பாவின் 'திரு'வாகிய இறைவனையும் 'அருளா'கிய இறைவனையும் குறிக்கும் என்ற விளக்கம் பேருவகை தந்தது. இறைமைத் தன்மையில் முதன்மை யாருக்குரியது என்ற வினா எழும். இதற்குத் தந்தையின் ஏக்கமும் தாக்கமும்தான் மிகுதி என்பதை, வள்ளலார் பாடல்களில் உள்ள அகச்சான்றுகள் கொண்டு கட்டுரையாளர் நிறுவியிருந்தது சிறப்பு.

செ.சத்தியசீலன், கிழவன்ஏரி.

வர்க்கக் கவிஞர்

தொழிலாளர் வர்க்கத்தினரை நினைவுபடுத்திய செழுமைமிக்க கவிஞர் கந்தர்வன். அவரைத் தமிழ் கூறும் நல்லுலகம் மறந்துவிட்ட நிலையில், கலாரசிகன் அவரை நினைவுபடுத்தியது தினமணியின் இலக்கியத் தேடலில் ஒரு மைல்கல்.

மா.கார்த்திகேயன்,
ஆர்.எஸ்.மங்கலம்.

தனித் திறன்

'ஆசியான் உறவு!' தலையங்கம் (27.1.2018) படித்தேன். வழக்கத்துக்கு மாறாக, குடியரசு தின விழாவில் பத்து தென் கிழக்காசிய நாடுகளின் தலைவர்களைப் பங்கேற்கச் செய்தது பிரதமர் நரேந்திர மோடியின் தனித் திறன். முன்பு எந்த இந்தியத் தலைவரும் செய்யாததைச் செய்தது அவருடைய ராஜ்ஜீய சாதுர்யம். ஆசியான் நாடுகளின் கூட்டமைப்பு முக்கியமான பொருளாதாரக் கூட்டமைப்பாக மாறியுள்ளது பாராட்டத்தக்கது. ஆசிய நாடுகளுடனான உறவு வலுவடைய வேண்டும். ஏற்கெனவே அந்த நாடுகளுக்கு கொடுத்த பொருளாதார உறவுக்கான வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என தலையங்கம் குறிப்பிடுவது மிகச்சரியே.

உ. மாரிமுத்து, தஞ்சை.

ஹரியாணா முன்னாள் முதல்வருக்கு எதிராக சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல்

புதுதில்லி,பிப்.2: குறைந்த விலைக்கு நிலம் விற்பனை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில், ஹரியாணா முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான பூபிந்தர் சிங் ஹூடாவுக்கு எதிராக சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இதுகுறித்து சிபிஐ அதிகாரிகள் கூறியதாவது:

குறைந்த விலைக்கு நிலம் விற்பனை செய்யப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில், ஏமாற்றுதல், குற்றச்சதி, ஊழல் தடுப்புச் சட்டம் ஆகிய இந்திய தண்டனையியல் சட்டப் பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) முன்னாள் உறுப்பினரும், ஹரியாணா அரசின் முன்னாள் உயரதிகாரியுமான சாட்டர் சிங், முன்னாள் முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடா ஆகியோரின் பெயர்கள் குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளன என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹரியாணாவில் கடந்த 2004-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27-ஆம் தேதி முதல், 2007-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24-ஆம் தேதி வரையிலான பூபிந்தர் சிங் ஹூடா ஆட்சிக் காலத்தில், 400 ஏக்கர் நிலம் அளவீடு செய்யப்பட்டன. அப்போதைய மதிப்பில் ஒரு ஏக்கர் நிலம் ரூ.4 கோடி. ஆனால், தனியார் நிறுவனம் ஒன்று சில அரசு அதிகாரிகளுடன் சேர்ந்து அந்த நிலத்தை சுமார் ரூ.100 கோடிக்கு வாங்கியுள்ளது.

இதன்மூலம், அரசுக்கு ரூ.1,500 கோடி வரை இழப்பு ஏற்பட்டது.

இதுதொடர்பாக எழுந்த புகாரின் அடிப்படையில் சிபிஐ கடந்த 2015-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

ரூ.156 கோடியில் 1,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள்

முதல்வர் திறந்து வைத்தார்

சென்னையில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளை தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கிறார் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி.

சென்னை,பிப்.2: தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ரூ.156.39 கோடியில் கட்டப்பட்ட 1,500 அடுக்குமாடிக் குடியிருப்புகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெள்ளிக்கிழமை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். ரூ.20.16 கோடி மதிப்புள்ள நான்கு ஆற்றுப் பாலங்களையும் அவர் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் சென்னை வியாசர்பாடியில் உள்ள மூர்த்திங்கர் தெரு திட்டப் பகுதியில், தரை மற்றும் ஏழு தளங்களுடன், 10 கட்டட தொகுப்பு வீடு ஒவ்வொரு குடியிருப்பும் தலா 416 சதுர அடி பரப்பளவில், 960 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இதன் மதிப்பு ரூ.112.80 கோடியாகும்.

தண்டையார்பேட்டையில் உள்ள சேனியம்மன் கோயில் திட்டப் பகுதியில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், 9 கட்டடத் தொகுப்புகளுடன், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 397 சதுர அடி பரப்பளவில் 464 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இதன் மதிப்பு ரூ.38.39 கோடியாகும்.

மதுரை, பூங்கா நகர் திட்டப் பகுதியில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 374 சதுர அடி பரப்பளவில், 76 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இதன் மதிப்பு ரூ.5. 2 கோடியாகும். மொத்தம் ரூ.156.39 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 1500 அடுக்குமாடிக் குடியிருப்புகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி காணொலிக் காட்சி மூலம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

ஆற்றுப் பாலம் திறப்பு: நெடுஞ்சாலை துறை மற்றும் சிறுதுறைமுகத் துறை சார்பில், விருதுநகர் கட்டனூரில் ரூ.6.65 கோடி மதிப்பீட்டில் கிருதுமால் ஆற்றின் குறுக்கே ஆற்றுப்பாலம் கட்டப்பட்டது.

நாமக்கல் ஆவத்திப்பாளையத்தில் ரூ.1.65 கோடி மதிப்பிலும் கத்தேரியில் ரூ.1.35 கோடியிலும் கடலூர் திருமாணிக்குழியில் ரூ. 10 .51 கோடி மதிப்பில் கெடிலம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட்டது.

மொத்தம் ரூ.20.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட இந்தப் பாலங்களை மக்கள் பயன்பாட்டுக்காக காணொலிக் காட்சி மூலம் முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மீன்வளத் துறை அமைச்சர் ஜெயக்குமார் பால்வளத் துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் உள்பட முக்கிய அதிகாரிகள் பங்கேற்றனர்.

அடுத்த ஆண்டு முதல் இலவச மருத்துவக் காப்பீடு

அருண் ஜேட்லி தகவல்

புது தில்லி, பிப். 2: 10 கோடி குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சத்துக்கு மருத்துவக் காப்பீடு அளிக்கும் திட்டம் அடுத்த நிதியாண்டு முதல் அமல்படுத்தப்படும் என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் தனி நபர் வருமான வரி உச்ச வரம்பு உயர்த்தப்படும் என்று மாதச் சம்பளதாரர்களும், நடுத்தர வருவாய்ப் பிரிவினரும் பெரிதும் எதிர்பார்த்தனர்.

ஆனால், இது தொடர்பான அறிவிப்பு எதுவும் வெளியாகாதது பெரும் ஏமாற்றத்தை அளித்தது. இது தவிர 10 கோடி குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சத்துக்கான மருத்துவக் காப்பீடு அளிக்கும் உலகின் மிகப்பெரிய மருத்துவக் காப்பீடு திட்டத்தை பட்ஜெட்டில் மோடி அறிவித்தார்.

இதன் மூலம் நாட்டில் ஏழை, எளிய மக்கள் 50 கோடிக்கு இலவச மருத்துவக் காப்பீடு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தில்லியில் வெள்ளிக்கிழமை பத்திரிகையாளர்களைச் சந்தித்த அருண் ஜேட்லி இது தொடர்பாக கூறியதாவது:

ஏழைக் குடும்பங்களுக்கு இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அடுத்த நிதியாண்டில் இருந்து நடைமுறைக்கு வரும்.

முதலில் மருத்துவச் செலவை செய்து விட்டு, பின்னர் அத்தொகையைத் திரும்பப் பெறும் வகையில் இத்திட்டம் இருக்காது.

முதலிலேயே இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஏனெனில், இதுதான் ஏழை, எளிய மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். மேலும், பணத்தை முதலில் செலவிட்டு விட்டு, பின்னர் அதனைத் திரும்பப் பெறும் நடைமுறையில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றன.

இந்த காப்பீட்டுத் திட்டம் மூலம் அனைத்து அரசு மருத்துவமனைகளும், தேர்வு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனைகளிலும் இலவசமாக சிகிச்சை பெற முடியும். காப்பீடு செய்வோர்களின் எண்ணிக்கை அதிகமானால் காப்பீட்டுக்கான ஆண்டு பிரீமியம் தொகை குறையும். இந்த காப்பீட்டுத் திட்டம் முழுமையாக அரசு நிதியில் அமல்படுத்தப்படும். இதற்காக முதல்கட்டமாக ரூ.2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே சலுகை அளித்துவிட்டோம்: நான் தாக்கல் செய்துள்ள கடந்த 4 பட்ஜெட்களில் நடுத்தர வருவாய்ப் பிரிவினர், மாதச் சம்பளதாரர்களுக்காக பல்வேறு சலுகைகள் அறிவித்துள்ளேன். பாஜக அரசு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிக்கு வந்த பிறகு தாக்கல் செய்யப்பட்ட முதல் பட்ஜெட்டில் வருமான வரி செலுத்துவதற்கான உச்ச வரம்பு ரூ.2 லட்சத்தில் இருந்து ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டது. இது தவிர ரூ.50 ஆயிரம் வரை கூடுதலாக வருமான வரி விலக்குப் பெற சலுகை அளிக்கப்பட்டது. இதன் மூலம் அப்போது ரூ.1 லட்சத்துக்கு சலுகை அளிக்கப்பட்டது. இது தவிர வீட்டுக் கடன் திருப்பிச் செலுத்துவதன் மூலம் பெறும் வருமான வரிச் சலுகை ஆண்டுக்கு ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டது.

டாக்டர், வழக்குரைஞர் போன்றவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.50 லட்சம் வரை வருமானம் இருந்தால் அவர்களுக்கான வருமான வரி எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

ரூ.5 லட்சம் வரை ஆண்டு வருமானம் பெறுபவர்களுக்கான வருமான வரி விகிதத்தை 10 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக கடந்த பட்ஜெட்டிலேயே குறைத்து விட்டோம்.

இது உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத குறைவான வருமான வரியாகும். வருமான வரிக்கான உச்ச வரம்பை இதற்கு மேலும் அதிகரித்தால் வருமான வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும். அதனால், நாட்டு நலன் சார்ந்த திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்க முடியாத நிலை ஏற்படும். மேலும், இப்போது சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு கவலையளிப்பதாக உள்ளது. எனினும், இப்போதைய சூழ்நிலையில் அதனை சமாளித்துவிடலாம் என்றார் அவர்.

நேபாளத்தில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட ஆதரவளிப்போம்

காத்மாண்டு, பிப். 2: நேபாளத்தில் அரசியல் நிலைத்தன்மை ஏற்பட இந்தியா ஆதரவளிக்கும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக நேபாளத்துக்கு அவர் வியாழக்கிழமை சென்றார். அண்மையில் நடந்துமுடிந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஎன்) மூத்த தலைவர் பிரசண்டாவை வெள்ளிக்கிழமை சுஷ்மா சந்தித்துப் பேசினார். இரு தலைவர்களும் காத்மாண்டில் உள்ள ஒரு ஹோட்டலில் காலை உணவு உட்கொண்டனர். பின்னர், இருவரும் பல்வேறு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடினர்.

அதைத் தொடர்ந்து பிரசண்டா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தேர்தலுக்குப் பிறகு நிலவிவரும் அரசியல் சூழல் குறித்தும், புதிய அரசு பொறுப்பேற்பதற்காக எடுக்கப்பட்டுவரும் முன்னேற்பாடுகள் குறித்தும் விவாதித்தோம். இங்கு அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட அண்டை நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்று சுஷ்மாவிடம் கோரினோம். நேபாளத்தின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், வளர்ச்சிக்கும் இந்தியா முழு ஆதரவளிக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

தேர்தலில் இடதுசாரிக் கூட்டணி கட்சி வெற்றி பெற்றதற்கும் அவர் வாழ்த்து தெரிவித்தார் என்றார் பிரசண்டா.

முன்னதாக, நேபாளத்தின் பிரதமராக தேர்வு செய்யப்படுவார் என்று கருதப்படும் சிபிஎன்-யுஎம்எல் கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான கே.பி.சர்மா ஒலியை சுஷ்மா வியாழக்கிழமை சந்தித்தார். நேபாள அதிபர் வித்யா தேவி பண்டாரி, பிரதமர் ஷேர் பகதூர் தேபா ஆகியோரையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

இருதரப்பு உறவை மேம்படுத்துவது தொடர்பாக அந்நாட்டு தலைவர்களுடன் சுஷ்மா ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக, நேபாளத்தின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிட்டு ஆட்சியைக் கவிழ்த்ததாக சர்மா ஒலி வெளிப்படையாகவே குற்றம்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதார் தகவல்கள் பாதுகாப்பானவை: ரவிசங்கர் பிரசாத்

புது தில்லி, பிப். 2: 'ஆதார் விவரங்கள் அனைத்தும் பாதுகாப்பாக உள்ளன; தகவல் கசிவு எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை' என்று மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் சமாஜவாதி கட்சியின் எம்.பி.யான நீரஜ் சேகர் வெள்ளிக்கிழமை கேள்வி எழுப்பினார். அதற்கு, அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் அளித்த பதில்:

ஆதார் விவரங்கள் பாதுகாப்பானவை. ரூ.500 கொடுத்தால் ஆதார் விவரங்கள் கிடைக்கும் என்று ஊடகங்களில் வெளியான செய்தி முற்றிலும் தவறானது. ஆதார் சம்பந்தமான குறைகளை மாநில அதிகாரிகளைக் கொண்டு தீர்க்க இணையதளத்தில் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இந்த வசதி சிலரால் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இதுதொடர்பாக இந்திய பிரத்யேக அடையாள ஆணையம் அளித்த புகாரின் அடிப்படையில் தில்லி காவல் துறையின் சைபர் பிரிவு வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது என்று ரவிசங்கர் பிரசாத் பதிலளித்தார்.

சோபியான் துப்பாக்கிச் சூடு சம்பவம்: எஸ்ஐடி அமைக்க ஒமர் அப்துல்லா வலியுறுத்தல்

ஜம்மு, பிப். 2: ஜம்மு-காஷ்மீர் மாநிலம், சோபியான் மாவட்டத்தில் தங்கள் மீது கல்வீசி போராட்டம் நடத்தியவர்களைக் கலைப்பதற்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தது தொடர்பாக விசாரிப்பதற்கு சிறப்பு விசாரணைக் குழு (எஸ்ஐடி) அமைக்க வேண்டும் என்று ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஒமர் அப்துல்லா வலியுறுத்தினார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் வெள்ளிக்கிழமை அவர் பேசியதாவது:

சோபியான் துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து எஸ்ஐடி அமைக்க மாநில அரசு உத்தரவிட வேண்டும். இதுதொடர்பாக ராணுவம் மற்றும் காவல்துறை தனித்தனியாக இரண்டு முதல் தகவல் அறிக்கைகளைப் பதிவு செய்துள்ளன.

இந்த வழக்கை சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகள் கையாள்வது சிரமமாக இருக்கும். மாநில அரசு உத்தரவின்பேரில் நீதி விசாரணையும் தனியாக தொடரும்.

பாதுகாப்புப் படையினருக்கு எதிராக கடந்த காலங்களில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள் மீது இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஏன்?

பாதுகாப்புப் படையினருக்கு எதிராக சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க கடந்த 2000-ஆவது ஆண்டு முதல் மாநில அரசு இதுவரை 50 முறை மாநில அரசின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 47 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 3 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

ராணுவ ஜீப்பில் கட்டிவைக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஃபரூக் அகமது தாருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். அவரை கட்டிவைத்த ராணுவ அதிகாரிக்கு விருது வழங்கி ராணுவம் கௌரவித்துள்ளது. தேர்தலில் வாக்களித்த ஃபரூக் அகமது தாருக்கு மாநில அரசு எந்தவொரு இழப்பீட்டையும் இதுவரை வழங்கவில்லை என்றார் ஒமர் அப்துல்லா.

காஸ்கஞ்ச் கலவரம்: எதிர்க்கட்சிகள் அமளியால் மாநிலங்களவை ஒத்திவைப்பு

உத்தரப் பிரதேச மாநிலம், காஸ்கஞ்ச் நகரில் நடைபெற்ற கலவர விவகாரத்தை முன்வைத்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.

புது தில்லி, பிப். 2: உத்தரப் பிரதேச மாநிலம், காஸ்கஞ்ச் பகுதியில் நிகழ்ந்த கலவரத்தை முன்னிறுத்தி சமாஜவாதி உறுப்பினர்கள் மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனிடையே, தில்லியில் சாலையோரக் கடைகளை அப்புறப்படுத்தியதற்கு எதிராக ஆம் ஆத்மி எம்.பி.க்கள் குரல் எழுப்பினர்.

சம்பந்தப்பட்ட எம்.பி.க்கள் மாநிலங்களவைத் துணைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டதுடன் மத்திய அரசுக்கு எதிராக முழக்கங்களையும் எழுப்பினர். இதன் காரணமாக அவை அலுவல்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

குடியரசு தினத்தின் (ஜன.26) போது காஸ்கஞ்ச் பகுதியில் இரு வேறு பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் அதுபெரும் கலவரமாக வெடித்தது.

இதில் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர். இந்நிலையில் மாநிலங்களவை வெள்ளிக்கிழமை கூடியவுடன் கேள்வி நேரம் தொடங்கியது.

அப்போது அவையின் துணைத் தலைவர் பி.ஜே.குரியனின் இருக்கையை முற்றுகையிட்ட சமாஜவாதி எம்.பி.க்கள், இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அப்போது அவையின் மையப் பகுதிக்கு வந்த ஆம் ஆத்மி எம்.பி.க்கள், தில்லியில் சாலையோர கடைகளுக்கு சீல் வைக்கப்பட்ட விவகாரத்தைக் கண்டித்து குரல் எழுப்பினர். இந்த விவகாரத்துக்கு அரசு விளக்கமளிக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதன் தொடர்ச்சியாக இரு கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்களும் மத்திய அரசுக்கு எதிராக பல்வேறு முழக்கங்களை எழுப்பினர். இதுதொடர்பாக மத்திய அரசிடம் விளக்கம் கேட்க வேண்டுமானால், சம்பந்தப்பட்ட எம்.பி.க்கள் முறையாக நோட்டீஸ் அளிக்க வேண்டும் என்று அவர்களிடம் குரியன் வலியுறுத்தினார்.

இதற்கு நடுவே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. கே,வி.பி. ராமச்சந்திர ராவ் மாநிலங்களை துணைத் தலைவர் இருக்கைக்கு முன்பு வந்தார். 'ஆந்திரத்துக்கு உதவுங்கள்' என்ற வாசகம் அடங்கியிருந்த பதாகையை அவர் கைகளில் உயர்த்திப் பிடித்துக் கொண்டே இருந்தார்.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்த பி.ஜே.குரியன், அவரை இருக்கையில் சென்று அமருமாறு அறிவுறுத்தினார்.

ஆனால், அதற்கு ராமச்சந்திர ராவ் செவிமடுக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த குரியன், அவரது நடவடிக்கையை கடுமையாக விமர்சித்தார். காங்கிரஸ் எம்.பி.க்கள் அவரை இருக்கையில் அமரச் செய்ய வேண்டும் என்று கோரினார்.

இத்தகைய தொடர் அமளிகள் மற்றும் கூச்சல், குழப்பங்களால் மாநிலங்களவை அலுவல்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக அவையின் நடவடிக்கைகளை பிற்பகல் வரை குரியன் ஒத்திவைத்தார்

போக்குவரத்துத் தொழிலாளர் ஊதிய பிரச்னை: மத்தியஸ்தரை நியமித்தது தமிழக அரசு

சென்னை, பிப். 2: போக்குவரத்துத் தொழிலாளர் ஊதியப் பிரச்னை தொடர்பாக அவர்களின் கருத்துகளை அறிந்து அறிக்கை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி இ. பத்மநாபனை மத்தியஸ்தராக அதிகாரப்பூர்வமாக தமிழக அரசு நியமித்து உத்தரவிட்டுள்ளது. ஒரு மாதத்துக்குள் அறிக்கையை அளிக்குமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

ஊக்க முன் வைப்புத் தொகை	ரூ.50,000/– (Senior Accounts Officer, Directorate of Collegiate Education, payable at Chennai) என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை வழியாக மட்டும்.
காப்புத் தொகை	ஒப்பந்த பணி மதிப்பீட்டின் 5% தொகை
ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் முகவரி	**www.tndce.in** and **www.tenders.tn.gov.in** (free of cost)
விண்ணப்பம் பெறும் கடைசி தேதி, நேரம் மற்றும் இடம்	**16.02.2018** – பிற்பகல் **3.00** மணி, இடம் : கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை–06
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் தேதி, நேரம் மற்றும் இடம்	**16.02.2018** – பிற்பகல் **3.30** மணி, இடம் : கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை–06, தொழில்நுட்ப தெரிவில் தகுதிபெற்ற ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் ஒப்பந்த பணி வழங்கப்படும்.
கூடுதல் விவரங்களுக்கு	மேற்காணும் இணையதள முகவரியினை அணுகவும்

செ.ம.தொ.இ/461/ஒப்பந்தப்புள்ளி/18 **கல்லூரிக் கல்வி இயக்குநர்**

சுந்தரம் BNP பரிபாஸ்
ஹோம் பைனான்ஸ்

பதிவு அலுவலகம் எண்: 21 பட்டுலோஸ் சாலை சென்னை 600002
கார்பரேட் அலுவலகம்: 46, ஒயிட்ஸ் சாலை சென்னை 600014
கிளை அலுவலகம் : எண் C-56, 2 வது தளம், PL A S டவர்ஸ், 4 வது குறுக்கு, தில்லை நகர், திருச்சி - 620 018 தொலைபேசி - 0431 - 276 9200 / 276 9300 / 276 9400.

சுவாதீன அறிவிப்பு

பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் (விதி - 8(2)

இப்பவும், சுந்தரம் பிஎன்பி பரிபாஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் - ன் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், 'பிணைக்காப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ன் பிரிவு 13(2) கீழாகவும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 3 உடன் படிக்க' ன் படியும் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தின் படியும், கடனாளி **திரு. எட்வர்டு ரூபன் ராஜ்** மற்றும் **திருமதி. தங்கலதா.I** ஆகியோரை **01.07.2017** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு **(கோப்பு எண்: TRY20160165)** மூலம் அழைத்து, அவ்வறிவிப்பில் உள்ள நிலுவைத்தொகை **ரூ.6,82,707/- (ரூபாய். ஆறு இலட்சத்து என்பத்து இரண்டாயிரத்து எழுனூற்று ஏழு மட்டும்)** + வருங்கால வட்டி + சட்டரீதியிலான செலவுகள் + சட்ட செலவுகள் + நிகழ் செலவுகள் ஆகியவற்றை மேற்சொன்ன கேட்பு அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த கோரினார்.

கடனாளி, இணைக் கடனாளி ஆகியோர் அத்தொகையை முழுமையாக திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடனாளி, இணை-கடனாளி, இணை-கடனாளி மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், இதில் குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு 13(4), மேற்சொன்ன விதிகளில் விதி 8 உடன் படிக்க' வின் படி தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் **31.01.2018** ம் தேதியில் சுவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக கடனாளி, இணை-கடனாளி மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், இச்சொத்தின் மீது ஏற்படுத்தப்படும் எவ்விதமான வில்லங்கமும், சுந்தரம் பிஎன்பி பரிபாஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் - க்கு செலுத்தப்பட வேண்டிய 30.01.2018 - ம் தேதியிலான நிலுவைத்தொகை **ரூ.6,84,067/- (ரூபாய். ஆறு இலட்சத்து என்பத்து நான்காயிரத்து அறுபத்து ஏழு மட்டும்)** மற்றும் மேற்கொண்டு வரும் 24% வருட வட்டி என்ற வீதத்திலான வட்டி + சட்டரீதியிலான செலவுகள் + சட்ட செலவுகள் + நிகழ் செலவுகள் ஆகியவற்றிக்கு கட்டுப்பட்டது.

சொத்து விபரம் :

திருச்சி, குண்டூர், திருவெறும்பூர் தாலுக்கா, குண்டூர் கிராமம் & பஞ்சாயத்து, சர்வே எண். 124/4 & 115/1A ல் அமையப்பெற்றுள்ள, பெத்லஹேம் நகரில் உள்ள 2400 சதுர அடி பரப்பளவுடன் கூடிய ப்ளாட் எண். 30 என்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் உட்பட அனைத்தும்.

எல்லைகள் - ப்ளாட் எண் 29 க்கு - வடக்கு, ப்ளாட் எண். 31 க்கு - தெற்கு, 30 அடி அகல சாலைக்கு - கிழக்கு, மற்றும் சர்வே எண். 114 பகுதிக்கு - மேற்கு.,

அளவீடுகள் - கிழமேல் வடபுறம் - 60 அடி, கிழமேல் தென்புறம் - 60 அடி, தென்வடல் கிழபுறம் - 40 அடி, தென்வடல் மேற்கு புறம் - 40 அடி.

இது, திருச்சி பதிவு மாவட்டம், கே.சாந்தனூர் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமையப்பெற்று, சொத்துரிமை ஆவண எண். 1098/2016 ல் முழுமையாகவும், குறிப்பாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
தேதி : **30.01.2018** **சுந்தரம் பிஎன்பி பரிபாஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்- க்காக**

போன் : 0435-2402322, 2401622 ஃபேக்ஸ் : 0435-2431746
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
நிர்வாக அலுவலகம் : எண். 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001.

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி
டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களாகிய **(1) திரு. J. அப்துல் ரகீம் த/பெ. ஜமால் மொகிதீன், எண்.1232, நடுத் தெரு, புத்தாநத்தம் போஸ்ட், மணப்பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம் – 621 310, (2) திருமதி A. மும்தாஜ் பேகம் க/பெ. J. அப்துல் ரகீம், எண்.1232, நடுத் தெரு, புத்தாநத்தம் போஸ்ட், மணப்பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம் – 621 310, (3) திரு. A. சதாம் உசேன் த/பெ. J. அப்துல் ரகீம், எண்.1232, நடுத் தெரு, புத்தாநத்தம் போஸ்ட், மணப்பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம் – 621 310** ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை **30-01-2018** அன்றுள்ளபடி **ரூ. 11,89,113/- (ரூபாய் பதினோரு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து நூற்றி பதின்மூன்று மட்டும்)** மற்றும் **31-01-2018** முதல் பின்வட்டி, இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்து 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், விதி 8(6)&9-ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்
(ஜமால் மொகிதீன் மகன் திரு. J. அப்துல் ரகீம் அவர்களுக்கு சொந்தமான சொத்து)

திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்கா, புத்தானத்தம் கிராமத்தில் பட்டா எண். 1374, பழைய S.F. எண்.304/1, புதிய S.F. எண். 581/30ல் நடுத்தெருவில் 525 சதுர அடி பரப்பளவுள்ள கதவு எண். 1231/1 கொண்ட வீடு. எல்லைகள்: (டாக்குமெண்ட் படி): மரியம் பீபி பில்டிங்குக்கு வடக்கு. மொகமது இப்ரகீம் பில்டிங்குக்கு தெற்கு. முபாரக் பில்டிங்குக்கு கிழக்கு. நடைபாதைக்கு மேற்கு. எல்லைகள் : (மனையில் உள்ளபடி) : வடக்கில் - தைக்கா யூசுப் வீடு. தெற்கில் - கிழக்கு- மேற்கிலான நடைபாதை. கிழக்கில் - M. குப்பிச்சா ராவுத்தர் வீடு & மொகமது இப்ரகீம் நிலம். மேற்கில் - அரசு பொது குழாய். கட்டிடத்தின் பிளின்த் ஏரியா : தரை தளம் - 403 சதுர அடி; முதல் தளம் - 403 சதுர அடி; 2வது தளம் - 403 சதுர அடி.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 12,00,000/- (ரூபாய் பன்னிரண்டு லட்சம் மட்டும்)

டெண்டருடன் கூடிய ஏல விற்பனை விவரம்

டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதி : 19-03-2018

இடம் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மணப்பாறை கிளை,
மீரான் காம்ப்ளக்ஸ் (இணைப்பு), தரை தளம், எண். 266-267,
திண்டுக்கல் ரோடு, மணப்பாறை – 621 306.
தொலைபேசி எண். 04332-260649, செல் எண்கள். 9344053444, 9380350730.

டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

(1) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காகவே ஏலம் கேட்பதாக எழுத்துபூர்வமான ஒரு உறுதிமொழியினையும் அளிக்க வேண்டும். (2) விருப்பமுடைய டெண்டர்தாரர்/ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை **மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மணப்பாறை கிளை, மீரான் காம்ப்ளக்ஸ் (இணைப்பு), தரை தளம், எண். 266-267, திண்டுக்கல் ரோடு, மணப்பாறை – 621 306ல்** பெற்றுக்கொள்ளலாம். (3) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலைப்புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீலிடப்பட்ட உறைகளில் வைத்து, அத்துடன், **"சிட்டி யூனியன் பேங்க்"** என்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட/குறைந்தபட்ச விலையின் 10% தொகைக்கான **Pay Order/கேட்பு வரைவோலையினை** பிணை வைப்புத் தொகையாக இணைத்து **"அதிகாரபூர்வ அதிகாரி, சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்"** என முகவரியிட்டு, இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று **நண்பகல் 12.00 மணி** அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். (4) விருப்பமுள்ள டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் சொத்தினை பார்வையிடவும் மற்றும் இதர விவரங்களுக்கும் **தொலைபேசி எண்.04332-260649, செல் எண். 9344053444, 9380350730ஐ தொடர்பு கொள்ளவும்.** (5) இந்த சொத்து(க்கள்) "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" என்ற நிலையில் விற்பனை செய்யப்படும். (6) சீலிடப்பட்ட டெண்டர்கள் விருப்பமுள்ள ஆஜராகியுள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று **பிற்பகல் 1.00 மணிக்கு** திறக்கப்படும். பொதுவாக, மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்த போதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப்புள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில், வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில், அதிகபட்ச ஏலம் கோருபவருக்கே, இந்த விற்பனை வழங்கப்படும். எனினும், இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும். (7) வெற்றிபெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை விலையில் **25%** தொகையை **(பிணைவைப்புத் தொகை செலுத்தியது உள்பட)** விற்பனை **உறுதி செய்யப்பட்ட உடனேயே** செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து **15** நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்தத் தவறினால் அவரால் செலுத்தப்பட்ட **25%** தொகை முழுவதையும் அவர் இழக்க நேரிடும். (8) குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் மொத்த விற்பனை தொகையையும் பெற்றுக்கொண்ட பின்னரே, வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sale Certificate) வழங்கப்படும். (9) பத்திர செலவு, பதிவுக் கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளை வெற்றிபெற்ற ஏலம்கேட்டவரே ஏற்க வேண்டும். (10) அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்டபூர்வ வீட்டு வரி, மின்சாரக் கட்டணம், TDS மற்றும் இதர பாக்கிகளை வெற்றிபெறும் ஏலம்கேட்டவரே செலுத்த வேண்டும். (11) எந்தவித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

இடம் : கும்பகோணம், தேதி : 02-02-2018 **அதிகாரபூர்வ அதிகாரி**

DALMIA BHARAT SUGAR AND INDUSTRIES LIMITED

Regd. Office : Dalmiapuram - 621 651, Distt. Tiruchirapalli (Tamil Nadu)
Phone : 011 23465100, Fax (011) 23313303
Email : invhelp@dalmiasugar.com . Website : www.dalmiasugar.com . CIN : L26942TN1951PLC000640

Extract of Standalone Unaudited Financial Results for the Quarter/Nine Months ended 31-12-2017 (₹ Lakhs)

S.No.	Particulars	Standalone			Standalone	
		For the Quarter ended			For the Nine months ended	
		31-12-17	30-09-17	31-12-16	31-12-17	31-12-16
1	Total Income from Operations	**61,148**	**52,969**	51,221	**1,81,594**	1,33,402
2	Net Profit/ (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items.)	**7,202**	**4,486**	8,149	**18,201**	18,066
3	Net Profit/ (Loss) for the period before Tax (After Exceptional and/or Extraordinary items.)	**7,202**	**4,486**	8,149	**18,201**	18,066
4	Net Profit/ (Loss) for the period after Tax (After Exceptional and/or Extraordinary items.)	**5,424**	**3,731**	4,850	**14,665**	14,767
5	Total Comprehensive Income for the period [comprising profit/(Loss) for the period (after tax) and other comprehensive income (after tax)]	**11,342**	**4,594**	-14	**26,098**	19,886
6	Equity Share Capital	**1,619**	**1,619**	1,619	**1,619**	1,619
7	Earning per Share (of ₹ 2 each)					
a)	Basic	**6.70**	**4.61**	5.99	**18.12**	18.24
b)	Diluted	**6.70**	**4.61**	5.99	**18.12**	18.24

Notes :-
1. The above results have been approved and taken on record by the Board of Directors in their meeting held on February 2, 2018.
2. Post the applicability of Goods and Service Tax (GST) with effect from 1 July 2017, revenue from operations are disclosed net of GST. Accordingly, the revenue from operations and excise duty expenses for the quarter and period ended 31st December 2017 are not comparable with the previous periods presented in the results.
3. The above is the extract of the detailed format of quarterly/nine months' financial results filed with the stock exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the quarterly/nine months' financial results are available on the Stock Exchange websites, www.nseindia.com and www.bseindia.com and on the Company website www.dalmiasugar.com.

For Dalmia Bharat Sugar and Industries Limited

Place: New Delhi
Date: February 2, 2018

J. S. Baijal
Chairman

TNMA **TAMIL NADU MARITIME ACADEMY**
(AN AUTONOMOUS BODY UNDER THE GOVT. OF TAMIL NADU)
TENDER NOTICE

Application are invited from qualified catering contractors for running a mess on contract basis for Tamil Nadu Maritime Academy, Thoothukudi, for residential course and STCW course trainees.

The details of terms and conditions, menu, etc., for running a mess are available on the Academy website: **www.tn.gov.in/tnma**

Duly filled in tender forms along with the required documents should be submitted to the **Dean, No. 333, South Beach Road, Thoothukudi - 628 001 on or before 01.03.2018.**

DIPR/**460**/Tender/2018 **Chairman, TNMA**

மின் ஆய்வுத் துறை
திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை– 32.

விளம்பர எண். 001/இ2/2018 நாள் : 22.01.2018

இத்துறையில் காலியாக உள்ள தொலைபேசி இயக்குபவர் பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் (பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன்) வரவேற்கப்படுகின்றன.

1.	கல்வித் தகுதி	1. குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2. இந்திய தொலைத் தொடர்பு துறையினால் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட இத்தகைய தனியார் பயிற்சி மையத்தினால் நடத்தப்படும் தொலைபேசி இயக்குதலுக்கான பயிற்சியில் கலந்து கொண்டதற்கான சான்று பெற்றிக்க வேண்டும்.
2	ஊதிய விகிதம்	நிலை 8 – ரூ.19500–62000/–
3	காலிப் பணியிடங்கள்	எண்ணிக்கை–1
4	காலி பணியிடம் அமைவிடம்	அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம், திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–32
5	இட ஒதுக்கீடு	அ.ஆ.142, ப.ம.நி.சீ. துறை, நாள்–14.10.2009–ன் படி
6	உச்ச வயது வரம்பு	மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் 32 வயது (1.11.2017 அன்று)
7	விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் பெறப்பட வேண்டிய கடைசி நாள்	விளம்பரம் வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள்

விண்ணப்ப படிவங்களை இத்துறைக்கான இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம் – **www.tnei.tn.gov.in**

செ.ம.தொ.இ./127/வரைகலை/2018 **அரசு தலைமை மின் ஆய்வாளர் (கூ.பொ)**

இந்திய அஞ்சல் துறை - சிவில் பிரிவு
செயற்பொறியாளர் அலுவலகம், அஞ்சல் சிவில் டிவிஷன்,
எண். 5, எத்திராஜ் சாலை, சென்னை–600008. போன்: 044-28203435

டெண்டர் அழைப்பு அறிவிப்பு (e-டெண்டர் முறைப்படி)
NIT எண். 154 – 157/PCDC/17-18

இந்தியக் குடியரசுத்தலைவர் சார்பாக, செயல் பொறியாளர், குடிமக்கள் அஞ்சல் பிரிவு, எண்: 5, எத்திராஜ் சாலை, சென்னை-600008 அவர்கள் தகுதியுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கான விழுக்காட்டு ஏலப்புள்ளிகளை இணைய வழியாக வரவேற்கிறார்.

NIT எண்	வேலையின் பெயர்	கணக்கிடப்பட்ட மதிப்பு ரூ.	டேவணித் தொகை (EMD) ரூ.	முடிப்பதற்கான கால அளவு	டெண்டர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் & நேரம்
154/ PCDC/ 2017-18	மயிலாடுதுறை HO மற்றும் உடையார்பாளையம் HO IPPB கிளைகளுக்குக் கட்டம் III-இன் கீழ் மரச்சாமான்கள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்	501545	10031	30 நாட்கள்	12.02.18 13.30
155/ PCDC/ 2017-18	சிதம்பரம் HO, காரைக்கால் HO, கும்பகோணம் HO, திருவாரூர் HO மற்றும் பெரம்பலூர் HO IPPB கிளைகளுக்குக் கட்டம் II-இன் கீழ் மரச்சாமான்கள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்	1251538	25031	30 நாட்கள்	12.02.18 13.30
156/ PCDC/ 2017-18	திருச்சி HO மற்றும் தஞ்சாவூர் HO IPPB கிளைகளுக்குக் கட்டம் I-இன் கீழ் மரச்சாமான்கள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்	901569	18031	30 நாட்கள்	12.02.18 13.30
157/ PCDC/ 2017-18	புதுக்கோட்டை HO, கடலூர் HO, கரூர் HO IPPB கிளைகளுக்குக் கட்டம் I-இன் கீழ் மரச்சாமான்கள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்	750923	15018	30 நாட்கள்	12.02.18 13.30

முழுமையான விவரங்களுக்கும் டெண்டர் ஆவணத்துக்கும் அணுகுக **www.eprocure.gov.in** மற்றும் அஞ்சல்துறையின் இணையத்தளம் **www.indiapost.gov.in** எந்தக் காரணமும் தெரிவிக்காமல் எந்த ஒரு டெண்டரையும் ஏற்க அல்லது எல்லா டெண்டர்களையும் நிராகரிக்க அஞ்சல்துறைக்கு உரிமை உண்டு. E-டெண்டர்கள் மட்டுமே ஏற்கப்படும்.

டெண்டர் I.D.: 2018_DOP_295499_2, 2018_DOP_295513_2, 2018_DOP_295535_2, 2018_DOP_295540_2.

செயல் பொறியாளர் (குடிமக்கள் பிரிவு),
குடிமக்கள் அஞ்சல் பிரிவு, சென்னை-600008.

இளநீர் பருகும் முதல்வர்...

ஹரியாணா மாநிலம் ஃபரீதாபாதில் வெள்ளிக்கிழமை தொடங்கிய சர்வதேச கைவினைப் பொருள்கள் கண்காட்சியில் இளநீர் பருகும் உத்தரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத். உடன், ஹரியாணா முதல்வர் மனோகர் லால் கட்டர், உத்தரப் பிரதேச சுற்றுலாத் துறை அமைச்சர் ரீட்டா பகுகுணா ஜோஷி.

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட உறுதிமொழி எடுத்த ஊர்க்காவல் படை டிஜி

லக்னௌ, பிப்.2: உத்தரப் பிரதேச மாநிலம், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு ஆதரவாக, அந்த மாநில ஊர்க்காவல் படை தலைமை இயக்குநர் (டிஜி) உறுதிமொழி எடுத்திருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பாக, லக்னௌ பல்கலைக்கழகத்தில் இரு தினங்களுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சியில், உத்தரப் பிரதேச ஊர்க்காவல் படை தலைமை இயக்குநர் சூர்ய குமார் சுக்லா பங்கேற்றார். அப்போது, அயோத்தியில் கூடிய விரைவில் ராமர் கோயில் கட்டுவோம் என்ற உறுதிமொழியை, இதர பங்கேற்பாளர்களுடன் சேர்ந்து சூர்ய குமார் சுக்லாவும் எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

உ.பி.யில் சர்ச்சை

இதுதொடர்பான காட்சிகள் அடங்கிய விடியோ, சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. அதில், 'ராம பக்தர்களாகிய நாம், அயோத்தியில் கூடிய விரைவில் ராமர் கோயில் கட்டுவதற்கு, இந்த நிகழ்ச்சியின் மூலம் உறுதிமொழி ஏற்போம். ஜெய் ஸ்ரீ ராம்' என்று அவர் கூறுவது போன்ற காட்சிகள் உள்ளன.

சர்ச்சை: டிஜிபி அந்தஸ்தில் உள்ள மூத்த ஐபிஎஸ் அதிகாரி ஒருவர், இதுபோன்று உறுதிமொழி எடுத்திருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சுக்லாவின் செயல், இந்திய காவல் பணி விதிகளுக்கு எதிரானது என்று சமாஜவாதி கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, காங்கிரஸ் மூத்த தலைவர் தீபக் சிங் கூறுகையில், 'அயோத்தி ராமர் கோயில் விவகாரத்தை முன்வைத்து, இதுவரை சில அரசியல்வாதிகள்தான் மக்களை முட்டாளாக்கிவந்தனர். இப்போது, அரசு அதிகாரிகளும் அதனை செய்யத் தொடங்கிவிட்டனர். இது தீவிரமான பிரச்னை. இந்த விவகாரத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

சுக்லா விளக்கம்: இதனிடையே, இந்த விவகாரம் குறித்து சூர்ய குமார் சுக்லா விளக்கமளித்துள்ளார். அவர் கூறியதாவது:

சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில், மத நல்லிணக்கம் தொடர்பான உறுதிமொழியை நான் எடுத்தேன். ராமர் கோயில் கட்டுவதற்கு உகந்த அமைதியான சூழலை உருவாக்க வேண்டும் என்பதே அதன் சாராம்சம். ஆனால், சமூக வலைதளங்களில் பரவி வரும் விடியோவில் குறிப்பிட்ட சில காட்சிகள் நீக்கப்பட்டுள்ளன. தவறான தகவலை பரப்ப வேண்டும் என்ற நோக்கில் யாரோ இதனை செய்துள்ளனர் என்றார் சுக்லா. இவர், கடந்த 1982-ஆம் ஆண்டு பிரிவு ஐபிஎஸ் அதிகாரி ஆவார்.

முன்னதாக, உத்தரப் பிரதேசத்தின் காஸ்கஞ்ச் நகரில் அண்மையில் நிகழ்ந்த கலவரத்தில், ஹிந்து அமைப்புகளை விமர்சித்து, ரேபரேலி மாவட்ட ஆட்சியர் ராகவேந்திர விக்ரம் சிங் முகநூலில் பதிவிட்டிருந்தார். அது சர்ச்சையை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, தனது பதிவை விக்ரம் சிங் நீக்கினார்.

காஷ்மீரில் ஊடுருவல் முறியடிப்பு

ஜம்மு, பிப்.2: ஜம்மு-காஷ்மீர் மாநிலம், சம்பா மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் முயற்சியை எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) அதிகாரிகள் முறியடித்தனர்.

இதுகுறித்து பிஎஸ்எஃப் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சம்பா பகுதியில் சர்வதேச எல்லைக் கோட்டருகே கடந்த வியாழக்கிழமை இரவு சந்தேகத்துக்குரிய வகையில் ஆள் நடமாட்டம் இருந்ததை வீரர்கள் சிலர் கண்டனர். இதையடுத்து, அவர்களை தொடர்ந்து முன்னேற வேண்டாம் என்று வீரர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

இருப்பினும், அவர்கள் தொடர்ந்து முன்னேறினர். இதையடுத்து, பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்களை ஊடுருவ விடாமல் தடுத்து நிறுத்தினர். அதன்பிறகு, அந்தப் பகுதியில் ஆள்நடமாட்டம் இல்லை என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேகாலய பேரவைத் தேர்தல்

முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டது பாஜக

ஷில்லாங், பிப். 2: மேகாலயத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் முதல்கட்ட பட்டியலை பாஜக வெளியிட்டது.

இதுகுறித்து அந்த மாநில தலைவர் ஷிபன் லிங்டோ கூறியதாவது:

வரும் 27-ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட தேர்வு செய்யப்பட்டுள்ள கட்சி வேட்பாளர்களின் முதல்கட்ட பட்டியலை கட்சியின் மத்திய தேர்வுக் குழு வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் 45 வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர். அந்தப் பட்டியலில் பாஜகவைச் சேர்ந்த 2 பெண்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த 2013-ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய முன்னாள் எம்எல்ஏக்கள் ஆர்.எல்.தரியாங், ஜே.ஏ.லிங்டோ உள்ளிட்டோரும் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

எஞ்சியுள்ள 15 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான கட்சி வேட்பாளர்களின் இரண்டாவது பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்றார் ஷிபன் லிங்டோ. மேகாலயத்தில் மொத்தம் 60 சட்டப் பேரவைத் தொகுதிகள் உள்ளன.

காஸ்கஞ்ச் கலவரத்தில் உயிரிழந்தவர் குடும்பத்துக்கு போலீஸ் பாதுகாப்பு

காஸ்கஞ்ச், பிப். 2: உத்தரப் பிரதேச மாநிலம் காஸ்கஞ்ச் பகுதியில் அண்மையில் நடைபெற்ற கலவரத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு அச்சுறுத்தல் வந்ததை அடுத்து, அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் காஸ்கஞ்ச் நகரில் கடந்த குடியரசு தினத்தன்று மோட்டார்சைக்கிள் பேரணி ஒன்று நடைபெற்றது. அப்போது அந்த வாகனங்கள் மீது ஒரு பிரிவினர் கற்களை வீசித் தாக்கினர். இதைத் தொடர்ந்து இரு மதத்தவருக்கு இடையே கலவரம் வெடித்தது. இதில் சந்தன் குப்தா (22) என்ற கல்லூரி மாணவர் உயிரிழந்தார். 2 பேர் காயமடைந்தனர். 3 கடைகள், 2 பேருந்துகள், ஒரு கார் ஆகியவை தீக்கிரையாக்கப்பட்டன. இந்தக் கலவரம் தொடர்பாக இதுவரை 118 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். இந்த கலவரத்துக்கு முக்கியக் காரணமான சலீம் என்பவரை போலீஸார் கைது செய்துள்ளனர். பிற குற்றவாளிகளான சலீமின் சகோதரர் கல் நவீம், வாசிம் ஆகியோர் தலை மறைவாகிவிட்டனர்.

இந்நிலையில், சந்தன் குப்தாவின் குடும்பத்தினருக்கு சிலர் அச்சுறுத்தல் விடுத்ததாக செய்தி வெளியானது. இது தொடர்பாக காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டதை அடுத்து சந்தன் குப்தாவின் பெற்றோர் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்ற நிதீஷ்குமாரால் மட்டுமே முடியும்

என்பிபி கட்சித் தலைவர் கருத்து

ஷில்லாங், பிப். 2: 'மத்தியில் பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்ற ராகுல் காந்தியால் முடியாது. ஐக்கிய ஜனதா தளத் தலைவர் நிதீஷ்குமார் மட்டுமே அதைச் செய்யக்கூடிய ஒரே தலைவராக இருக்க முடியும்' என்று தேசிய மக்கள் கட்சி (என்பிபி) தெரிவித்துள்ளது.

பாஜகவும் என்பிபி கட்சியும் மத்தியிலும், மணிப்பூர் மாலத்திலும் கூட்டணிக் கட்சிகளாக இருக்கின்றன. எனினும், இந்த இரு கட்சிகளும் மேகாலயத்தில் வரும் 27ஆம் தேதி நடைபெற உள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிடுகின்றன. மக்களவை முன்னாள் தலைவர் பி.ஏ. சங்மாவின் மகனான கான்ராட் பி.சங்மா தலைமையிலான என்பிபி கட்சி கடந்த 2016ஆம் ஆண்டில் பாஜக தலைமையில் உருவாக்கப்பட்ட வடகிழக்கு ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்து வருகிறது.

இந்நிலையில், என்பிபி கட்சியின் மேகாலய மாநிலத் தலைவரான டபிள்யூ.ஆர்.கார்லுகி, ஷில்லாங்கில் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியது:

நாட்டின் வடகிழக்குப் பகுதியில் இருந்து நான் பார்க்கும் கண்ணோட்டத்தில், நிதீஷ்குமாரால் மட்டுமே மத்தியில் பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்ற முடியும் என்று தோன்றுகிறது. அடுத்த ஆண்டில் (2019) நிதீஷ் குமார் பிரதமராக இருப்பார். இதை குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

எனது இந்தக் கணிப்பை காங்கிரஸாரின் பரிசீலனைக்கு விட்டுவிடுகிறேன். இந்தியாவின் அரசியல் சூழலை நான் மதிப்பிட்டு அவர்களுக்கு ஒரே தீர்வை (பிரதமர் வேட்பாளர் நிதீஷ்குமார்) அளிக்கிறேன். அது ராகுல் காந்தியாக இருக்க முடியாது.

எங்கள் கட்சியும் பாஜகவும் மேகாலயத்தில் தனித்துப் போட்டியிடுவதில் வழக்கத்துக்கு மாறான அம்சம் ஏதுமில்லை. எங்கள் கட்சி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித்தபோது எங்கள் எம்.பி. அகதா சங்மா அமைச்சராக்கப்பட்டார். ஆனால், நாங்கள் 2013-இல் மேகாலயத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிட்டோம்.

நாங்கள் சொந்தக் கொள்கைகளும் சித்தாந்தமும் கொண்ட தனிக் கட்சி என்பதில் தெளிவாக இருக்கிறோம். எங்கள் கட்சிக்கு பாஜக-தான் நிதி அளிக்கிறது என்று மேகாலய முதல்வர் முகுல் சங்மா குற்றம்சாட்டியுள்ளார். அவர் பாஜகவின் பொருளாளரைப் போல் கருத்து தெரிவித்துள்ளார். பாஜகவுக்கு எவ்வளவு பணம் வருகிறது, அக்கட்சியால் எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது என்பது அதன் பொருளாளருக்கு மட்டுமே தெரியும் என்றார் அவர்.

பசு பாதுகாப்பு மசோதாவை திரும்பப் பெற்றார் சுவாமி

புது தில்லி, பிப்.2: நாடு முழுவதும் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதை தடை செய்ய சட்டம் இயற்றக் கோரி, மாநிலங்களவையில் தாம் தாக்கல் செய்திருந்த தனி நபர் மசோதாவை பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி வெள்ளிக்கிழமை திரும்பப் பெற்றார். மத்திய அரசின் வலியுறுத்தலைத் தொடர்ந்து, மசோதாவை அவர் திரும்பப் பெற்றார்.

'பசு பாதுகாப்பு மசோதா - 2017' என்ற அந்த மசோதா மீது மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை சுமார் 2 மணி நேரம் காரசார விவாதம் நடைபெற்றது. அப்போது, பசு பாதுபாப்பு விவகாரத்தில் பாஜக இரட்டை வேடம் போடுவதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின.

இதுதொடர்பாக காங்கிரஸ் உறுப்பினர் ராஜீவ் சுக்லா கூறுகையில், 'பாஜக ஆட்சி நடைபெறும் கோவாவில், மாட்டிறைச்சி வர்த்தகர்களுக்கு ஆதரவாக முதல்வர் மனோகர் பாரிக்கர் அண்மையில் பேசினார்.

அவரிடம் பசு பாதுகாப்பு குறித்து சுப்பிரமணியன் சுவாமி விவாதிக்கவில்லையா?' என்று கேள்வியெழுப்பினார்.

இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் டி.ராஜா பேசுகையில், வெறுப்புணர்வை பரப்பும் ஆயுதமாக பசுவை சிலர் பயன்படுத்துவதாக குற்றம்சாட்டினார்.

இதையடுத்து, மத்திய வேளாண் துறை அமைச்சர் ராதா மோகன் சிங் பேசுகையில், 'பசு பாதுகாப்புக்காக, மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த விவகாரத்தில், மத்திய அரசு உறுதியான நோக்கத்தை கொண்டுள்ளது. எனவே, தனது மசோதாவை சுப்பிரமணியன் சுவாமி திரும்பப் பெற வேண்டும்' என்றார்.

அதையேற்றுக் கொண்ட சுவாமி, 'இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதை தடை செய்ய சட்டம் இயற்றப்பட வேண்டும்; பால் சுரப்பு நின்றுவிட்ட பசுக்களை பாதுகாப்பதற்கு, மக்கள் தாமாக முன்வந்து செலுத்தும் வகையிலான கூடுதல் வரியை மத்திய அரசு அறிமுகப்படுத்த வேண்டும். இதுதொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீண்டும் ஒரு மசோதாவை தாக்கல் செய்ய வேண்டிய தேவை ஏற்படாது என்ற நம்பிக்கையில் தற்போதைய மசோதாவை திரும்ப பெறுகிறேன்' என்றார்.

ஆந்திரத்துக்கு உதவுங்கள்...

ஆந்திர மாநிலத்துக்கு மத்திய அரசு உதவ வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற காங்கிரஸ் மூத்த தலைவரும், எம்.பி.யுமான ராமச்சந்திர ராவ். ஆந்திர மாநிலத்துக்கு பட்ஜெட்டில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று குற்றம்சாட்டி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

வேளாண் துறையில் மாற்றமே பட்ஜெட்டின் இலக்கு

விவசாயத் துறை செயலாளர் பேட்டி

புது தில்லி, பிப். 2: இந்தியாவில் வேளாண்மை துறையில் மிகச் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் மத்திய பட்ஜெட்டின் நோக்கம் என்று விவசாயத் துறை செயலாளர் எஸ்.கே.பட்நாயக் தெரிவித்துள்ளார்.

மத்திய பட்ஜெட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வேளாண் கடன் இலக்கு ரூ.11 லட்சம் கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தவிர வேளாண் பொருள்கள் ஏற்றுமதியை அதிகரிப்பது, காரீஃப் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு வெள்ளிக்கிழமை பேட்டியளித்த மத்திய விவசாயத் துறை செயலாளர் எஸ்.கே.பட்நாயக் கூறியதாவது:

இது முழுவதும் விவசாயிகளுக்கு ஆதரவான பட்ஜெட். வேளாண் துறையில் முழுமையான முன்னேற்றத்தை ஏற்படுத்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் வேளாண்மைத் துறை முன்னெப்போதும் இல்லாத வளர்ச்சியை எட்டும். நாட்டின் வேளாண் பொருள்களின் விளைச்சல் அமோகமாக இருக்கும்.

வேளாண் துறை சார்ந்த தொழில்களில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். இப்போது, நாட்டில் அதிக வேலைவாய்ப்பை அளிப்பது வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகள்தான் என்றார் அவர்.

இதனிடையே, வேளாண்மைத் துறை அமைச்சர் ராதா மோகன் சிங் சுட்டுரையில் (டுவிட்டர்) இது தொடர்பாகக் கூறியிருப்பதாவது:

வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவது உள்ளிட்ட தேர்தலின்போது பாஜக அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள், கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு ஆதரவாக மத்திய அரசு உள்ளது என்பதை பட்ஜெட் மூலம் உறுதிப்படுத்தியுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளின் புகலிடங்களுக்கு எதிராக பாக். நடவடிக்கை: அமெரிக்கா வலியுறுத்தல்

வாஷிங்டன், பிப். 2: தங்களது நாட்டிலுள்ள பயங்கரவாதிகளின் புகலிடங்களுக்கு எதிராக, பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அரசு கட்டடங்கள் அதிகமுள்ள பகுதியில், தலிபான் பயங்கரவாத இயக்கத்தின் தற்கொலைப் படையினர் கடந்த 27-ஆம் தேதி சக்திவாய்ந்த குண்டு வெடிப்பை நிகழ்த்தினர். இதில், 100-க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

முன்னதாக, காபூலில் உள்ள பிரபல ஹோட்டலில் தலிபான் பயங்கரவாதிகள் கடந்த 20-ஆம் தேதி நடத்திய தாக்குதலில் வெளிநாட்டுப் பயணிகள் உள்பட 25 பேர் பலியாகினர்.

தலிபான் பயங்கரவாதிகளின் அடுத்தடுத்த தாக்குதல்களைத் தொடர்ந்து, அமெரிக்க வெளியுறவுத் துறை இணையமைச்சர் ஜான் ஜே சல்லிவன், ஆப்கானிஸ்தானுக்கு நேரில் சென்றார். அந்நாட்டின் அதிபர் அஷ்ரஃப் கனி, வெளியுறவுத் துறை அமைச்சர் சலாஹுதீன் ரப்பானி உள்ளிட்டோரை சந்தித்த அவர், பயங்கரவாதிகளுக்கு எதிரான ஆப்கன் அரசின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் ஆதரவை தெரிவித்தார்.

இந்நிலையில், ஆப்கன் பயணத்தை முடித்துக் கொண்டு, அமெரிக்கா திரும்பிய ஜான் ஜே சல்லிவன், வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆப்கானிஸ்தானில் அமைதி, பாதுகாப்பை நிலைநாட்டவும், பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யவும் அந்நாட்டுக்கு தொடர்ந்து உதவ அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. தலிபான் பயங்கரவாதிகள் பேச்சுவார்த்தையில் இணைய வேண்டும் என்று ஆப்கன் அரசு விரும்புகிறது.

ஆனால், அப்பாவி மக்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதன் மூலம் தாங்கள் அமைதி பேச்சுவார்த்தைக்கு தயாராக இல்லை என்பதை தலிபான் பயங்கரவாதிகள் வெளிப்படுத்திவருகின்றனர்.

அல்காய்தா, ஐஎஸ்ஐஎஸ், தலிபான் உள்ளிட்ட பயங்கரவாத இயக்கங்களைத் தோற்கடிக்க ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவும்.

பாகிஸ்தானுக்கு வலியுறுத்தல்: பாகிஸ்தான், தனது நாட்டிலுள்ள பயங்கரவாதிகளின் புகலிடங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதன் மூலம், அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் குறையும் என்றார் ஜான் ஜே சல்லிவான்.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் சீர்திருத்தம்

நம்பகமான பேச்சுவார்த்தை நடத்த இந்தியா உள்ளிட்ட ஜி4 நாடுகள் கோரிக்கை

நியூயார்க், பிப். 2: ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்கு நம்பகமான பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டும் என்று இந்தியா உள்ளிட்ட ஜி4 நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில், சீனா, பிரான்ஸ், ரஷியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளன. அந்த அமைப்பில் ஜி4 நாடுகளான இந்தியா, ஜப்பான், ஜெர்மனி, பிரேசில் ஆகிய 4 நாடுகளும் தாற்காலிக உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக இடம்பெற வேண்டும் என்பதே இந்த நாடுகளின் நோக்கமாகும். அதற்காக, அந்த நாடுகள் ஒவ்வொன்றும் பிற நாடுகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன. இந்த 4 நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலை விரிவாக்கம் செய்து, அதில் இடம்பெற்றுள்ள நிரந்தர மற்றும் தாற்காலிக உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான கூட்டம், நியூயார்க் நகரில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், ஜி4 நாடுகள் சார்பில் ஜெர்மனியின் நிரந்தர தூதர் கிறிஸ்டோப் ஹியூஸ்கேன் கலந்து கொண்டு பேசியதாவது:

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலை விரிவுபடுத்துவதற்காக, விவாதத்திலேயே நாம் நேரத்தையும், ஆற்றலையும் வீணடித்துக் கொண்டிருக்கக் கூடாது. எனவே, முதலில் இதுதொடர்பாக, செயல் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். அந்த செயல் திட்டம், அனைத்தையும் உள்ளடக்கிய, வெளிப்படையான, நம்பகமான பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு வழிவகுக்கும். எனவே, ஒவ்வொரு உறுப்பு நாடும், ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி, அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அந்த செயல் திட்டங்களை ஒருங்கிணைத்து, அதனடிப்படையில், பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்றார்.

அவரைத் தொடர்ந்து பேசிய இந்தியாவின் நிரந்தரத் தூதர் சையது அக்பருதீனும் அதே கருத்தை வலியுறுத்தினார்.

சீர்திருத்தம் தேவை: அதைத் தொடர்ந்து பேசிய ஐ.நா. பொதுச் சபைத் தலைவர் மிராஸ்லாவ் லாஜ்காக், 'ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலை தற்கால நடைமுறைக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும்' என்றார். அவர் மேலும் பேசியதாவது:

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் 70 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு, இத்தனை ஆண்டுகளில் புவியியல், அரசியல், அறிவியல் - தொழில்நுட்பம், நாடுகளுக்கு இடையேயான உறவு ஆகியவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இந்த நிலையில், அந்த அமைப்பில் சீர்திருத்தம் கொண்டுவராவிட்டால், அதை உருவாக்கிய நோக்கத்துக்கு பலனளிக்காமல் போய்விடும். இது, வெறும் தொழில்நுட்ப ரீதியிலான பணி அல்ல. மக்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையது. எனவே, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலை விரிவுபடுத்துவது குறித்து புதிய கோணத்தில் அனைவரும் சிந்திக்க வேண்டும் என்று கூறினார்.

ஓபிசி இடஒதுக்கீடு: தனிநபர் மசோதா தாக்கல்

புது தில்லி, பிப். 2: இதர பிற்படுத்தப்பட்டோருக்கு (ஓபிசி) இட ஒதுக்கீடு அளிக்க வலியுறுத்தி ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. விஜயசாய் ரெட்டி இரண்டு தனிநபர் மசோதாக்களை மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தார்.

சட்டப் பேரவைகள், நாடாளுமன்றம், அரசுப் பணி, கல்வி உள்ளிட்டவற்றில் பிற சமூகத்தினருக்கு உள்ளதைப் போலவே ஓபிசி பிரிவினருக்கும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று அதில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சட்டப்பிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். மாநிலங்களவையில் தனிநபர் மசோதாவைத் தாக்கல் செய்த பிறகு விஜயசாய் ரெட்டி பேசியதாவது:

நாட்டின் மக்கள்தொகையில் 50–இல் இருந்து 55 சதவீதம் பேர் ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

ஆனால், வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், மக்களவையில் அப்பிரிவைச் சேர்ந்த எம்.பி.க்களின் எண்ணிக்கை வெறும் 20 சதவீதம் மட்டுமே உள்ளது. இதே நிலைதான் மாநில சட்டப் பேரவைகளிலும் நிலவுகிறது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரைப் போலவே கல்வி, அரசுப் பணிகள், சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத்தில் ஓபிசி வகுப்பினருக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும்.

அதை வலியுறுத்தும் வகையிலேயே தனி நபர் மசோதாக்களைத் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை நிறைவேற்றினால் மட்டுமே ஓபிசி வகுப்பினரின் உரிமைகள் காக்கப்படும் என்றார் அவர்.

நூதன போராட்டம்...

பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து, மகாராஷ்டிர மாநிலம் தாணேவில் கார் ஒன்றை கயிறு கட்டி இழுத்து நூதனப் போராட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் மகளிர் அணியினர். நாள்ஃ வெள்ளிக்கிழமை.

மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தினர்: பாஜக மீது சத்ருகன் சின்ஹா தாக்கு

புதுதில்லி, பிப். 2: 'பாஜகவில் என்னை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தினர்' என்று அக்கட்சியில் ஓரங்கட்டப்பட்டுள்ள எம்.பி. சத்ருகன் சின்ஹா குறை கூறினார்.

பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரான முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா அண்மையில் ராஷ்டிர மஞ்ச் என்ற அரசியல் அமைப்பைத் தொடங்கினார். அதில் சத்ருகன் சின்ஹாவும் இணைந்துள்ளார். அவர் தில்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பாஜகவில் எனக்கு எந்தப் பொறுப்பும் அளிக்கப்படவில்லை. பேசுவது தவிர வேறு எதையும் நான் செய்ய அவர்கள் (பாஜகவினர்) அனுமதித்ததில்லை. மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நான் நடத்தப்பட்டேன்.

அங்கு எனக்கு மூச்சுத் திணறல் போன்ற நெருக்கடி இருப்பதாகவே உணர்ந்தேன்.

ராஷ்டிர மஞ்ச் அமைப்பைப் பொறுத்தவரை அது தனிக்கட்சி அல்ல. நாங்கள் எங்கள் தாய்க்கட்சியை (பாஜக) எதிர்த்து நாங்கள் கிளர்ச்சி செய்யவில்லை. அதேபோல் நாங்கள் அணிமாறிச் செல்பவர்களும் அல்ல. இப்போது உருவாக்கப்பட்டுள்ள ராஷ்டிர மஞ்ச் அமைப்பானது, விவசாயிகளின் தற்கொலை, வேலையில்லாத் திண்டாட்டம், உள்நாட்டுப் பாதுகாப்பு போன்ற விஷயங்களைக் கவனிக்கும்.

பத்மாவத் திரைப்படம் தொடர்பான சர்ச்சை குறித்து கேட்கிறீர்கள். உண்மையான பிரச்னைகளில் இருந்து கவனத்தை திசைதிருப்பும் வகையில் பொருத்தமற்ற விஷயங்கள் மீது அதீத கவனம் செலுத்தப்படுவதாகவே நான் நினைக்கிறேன். பத்மாவத் விவகாரமும் அப்படிப்பட்டதுதான். இது முற்றிலும் தேவையற்ற சர்ச்சையாகும் என்றார் சத்ருகன் சின்ஹா.

அவர் அண்மையில் செய்தியாளர்களிடம் பேசியபோது, 'மத்திய அரசு மீது தொடர்ச்சியாக

விமர்சனங்களை முன்வைத்து வருவதால் உங்களுக்கு வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிட வாய்ப்பு தரப்படாது என்று கூறப்படுகிறதே?' என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு சத்ருகன் சின்ஹா பதிலளிக்கையில் 'கடந்த மக்களவைத் தேர்தலின்போதும் அப்படித்தான் கூறப்பட்டது. எனினும் கடைசி பட்டியலில் எனது பெயர் இடம்பெற்றது' என்று தெரிவித்தார்.

குஜராத் தேர்தல் முடிவுகளின் பாதிப்பை பட்ஜெட் காட்டுகிறது

சிவசேனை

மும்பை, பிப். 2: குஜராத் சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகளால் மத்திய பாஜக கூட்டணி அரசு உஷாராகியுள்ளதை பட்ஜெட்டில் கிராமப்புறங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் காட்டுகிறது என்று சிவசேனை விமர்சித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான 'சாம்னா'வில் வெள்ளிக்கிழமை வெளியான தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

கனவுகளை விற்பனை செய்வதன் மூலம் பாஜக ஆட்சிக்கு வந்தது. இந்நிலையில் அக்கட்சி தலைமையிலான அரசு மீண்டும் பல்வேறு கனவுகளையே பட்ஜெட் மூலம் மக்களுக்கு அளித்துள்ளது. நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ளபட்ஜெட்டில் பல்வேறு பழைய அறிவிப்புகளும் பழைய கனவுகளும்தான் இடம்பெற்றுள்ளன.

நிதியமைச்சரின் பட்ஜெட் உரை முழுவதும் மக்களை திருப்திப்படுத்த வேண்டும் என்ற நெருக்கடியே காணப்பட்டது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார நிலை சரிவடைந்து வந்தது. அரசின் கொள்கைகள் அதை மேலும் சரிவடையச் செய்தன. அந்த நெருக்கடி பட்ஜெட் உரையிலும் எதிரொலித்தது.

சாமானிய மனிதனால் நிதிப் பற்றாக்குறை, ஏற்றுமதி, இறக்குமதி போன்ற சொற்களைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் பட்ஜெட்டுக்குப் பிறகு விலைவாசி குறையுமா என்பதை அறிந்து கொள்ள சாமானிய மனிதன் விரும்புகிறார். ஆனால், பணவீக்கம் என்ற வார்த்தையே பட்ஜெட் உரையில் இல்லை. முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசு அதிக அளவிலான பணவீக்கத்தால்தான் தோல்வியடைந்தது. புதிய அரசாவது தங்கள் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் என்று மக்கள் நம்பினர்.

ஆனால், அதுபோன்ற எதுவும் நடக்கவில்லை. அனைத்துக்கும் மமேலாக ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கை மூலம் பொருளாதாரத்தை நாசமாக்கிய அரசிடம் மக்களுக்கு அளிப்பதற்கு ஏதுமில்லை.

இந்த பட்ஜெட்டை நடைமுறையில் அமல்படுத்துவதுதான் மத்திய அரசுக்கு உண்மையான சோதனையாக இருக்கும். குஜராத் தேர்தலுக்குப் பிறகு கிராமப்புற மக்கள் தங்களை விட்டு விலகத் தொடங்கியுள்ளதை ஆளுங்கட்சியான பாஜக உணர்ந்துள்ளது.

குஜராத் தேர்தல் முடிவுகள் மத்திய அரசை உஷார்படுத்தி எச்சரிக்கை மணியை அடித்தது. அதனால்தான் இந்த பட்ஜெட்டில் கிராமப்புற மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அறிவிப்புகள் வெளியாகியுள்ளன என்று அந்தத் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித் துறை உள்விவகாரங்களில் அரசின் தலையீடு இருக்காது

மத்திய அமைச்சர்

பி.பி.சௌதரி

புது தில்லி, பிப். 2: நீதித் துறை விவகாரங்களில் அரசின் தலையீடு இருக்காது என்று மத்திய சட்டத் துறை இணையமைச்சர் பி.பி. சௌதரி கூறினார்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவுக்கு எதிராக, அந்த நீதிமன்றத்தில் பணியாற்றும் மூத்த நீதிபதிகள் ஜே.செலமேஸ்வர், ரஞ்சன் கோகோய், மதன் பி லோக்குர், குரியன் ஜோசப் ஆகியோர் கடந்த மாதம் வெளிப்படையாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். வழக்குகளை ஒதுக்குவதில் தலைமை நீதிபதி பாரபட்சத்துடன் செயல்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டினர்.

இந்த நீதித் துறை பிரச்னை குறித்து, மாநிலங்களவையில் சில உறுப்பினர்கள் வெள்ளிக்கிழமை கேள்விகளை எழுப்பினர்.

அதற்கு மத்திய சட்டத் துறை இணையமைச்சர் பி.பி.சௌதரி எழுத்துப்பூர்வமாக அளித்த பதில்:

தலைமை நீதிபதிக்கும், நீதிபதிகளுக்கும் இடையேயான பிரச்னை குறித்து, உச்ச நீதிமன்றத்திடம் இருந்து மத்திய அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி, நீதித் துறை சுதந்திரமான அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. உள்விவகாரங்களுக்குத் தீர்வு காணும் ஆற்றல் நீதித் துறைக்கு உள்ளது. நீதித் துறை சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் உள்ளது. எனவே, நீதிபதிகளுக்கு இடையேயான பிரச்னையில் மத்திய அரசு விலகியே இருக்கும் என்று அமைச்சர் பி.பி.சௌதரி தனது பதிலில் கூறினார்.

தேர்தல் நிதிப் பத்திரங்களுக்கு எதிராக மார்க்சிஸ்ட் மனு: மத்திய அரசு பதிலளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

புது தில்லி, பிப். 2: தேர்தல் நிதிப் பத்திரத் திட்டத்துக்கு எதிராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் தாக்கல் செய்துள்ள மனு தொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவதற்கான 'தேர்தல் நிதிப் பத்திரங்கள்' தொடர்பான தகவல்களை மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி கடந்த மாதம் மக்களவையில் அறிவித்தார். அதில், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க விரும்பும் தொழில் நிறுவனங்களும், தனிநபர்களும் குறிப்பிட்ட சில பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகளில் கிடைக்கும் இந்த தேர்தல் நிதிப் பத்திரங்களை வாங்கி, அதன் மூலம் வங்கிகள் வழியாகவே நன்கொடை அளிக்க முடியும். பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை, அதில் குறிப்பிட்டுள்ள அரசியல் கட்சியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

அரசியல் கட்சிகளுக்கு ரொக்கமாக நன்கொடை அளிப்பதற்கு மாற்றாக இத்திட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறது. ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் ஆகிய மாதங்களில் தலா 10 நாள்களுக்கு மட்டுமே இந்தப் பத்திரங்கள் கிடைக்கும். பொதுத் தேர்தல் நடைபெறும் ஆண்டில் மாதத்தில் 30 நாள்களுக்கு இந்தப் பத்திரங்களை வாங்க முடியும். பத்திரத்தை வாங்கிய 15 நாள்கள் மட்டும் செல்லுபடியாகும். அதன் பிறகு காலாவதியாகிவிடும். ரூ.1,000, ரூ.10,000, ரூ.1 லட்சம், ரூ.10 லட்சம், ரூ.1 கோடி ஆகியவற்றின் மடங்குகளில் இந்தப் பத்திரங்களைப் பெறலாம்.

வங்கி விதிகளின்படி வாடிக்கையாளர் விவரங்களை அளித்த பிறகு இந்தப் பத்திரங்களை வாங்க முடியும். ஆனால், பத்திரத்தில் வாங்கியவரின் பெயர் இடம் பெறாது என்ற விவரங்கள் தெரிவிக்கப்பட்டது.



இத்திட்டத்துக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. முக்கியமாக 'நன்கொடை அளிப்பவர்களின் பெயர் இடம்பெறாமல் தேர்தல் நிதிப் பத்திரங்கள் வழங்கப்படுவது ஏன்?' என்ற கேள்வி எழுந்தது. மேலும், கருப்புப் பணத்தை நன்கொடையாக அளிக்கவே இது உதவும் என்றும் விமர்சிக்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் நிதிப் பத்திரத் திட்டத்துக்கு எதிராக சீதாராம் யெச்சூரி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'தேர்தல் நிதிப் பத்திரத் திட்டம் ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கை. இது அரசியலில் ஊழல் மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும். இப்போதைய மத்திய அரசு மக்களவையில் தங்களுக்கு உள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி மாநிலங்களவையின் பரிந்துரைகளை தொடர்ந்து நிராகரித்து வருகிறது. தேர்தல் நிதிப் பத்திரங்கள் தொடர்பாக மத்திய அரசு அறிவித்துள்ள விதிகள் ஜனநாயக நடைமுறைகளுக்கு விரோதமாக உள்ளன' என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம். கான்வில்கர், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த மனு தொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுடன் இந்த மனுவையும் இணைப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

அரசுப் பணி தேர்வுகளுக்கான மாதிரி வினா–விடைகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) நடத்தும்
அனைத்து தேர்வுகளுக்கும் பயனளிக்கும் வகையிலான மாதிரி வினா–விடைகள்

12th ENGLISH

81.The noun form of 'dedicate' is,
a) dedicate
b) dedicated
c) dedication
d) dedicately

82.The singular form of 'alumni' is,
a) alumna
b) alumnus
c) alumnae
d) alumnis

83.Choose the suitable verb.
How many pockets ________ you got?
a) has
b) have
c) are
d) is

84.Supply a suitable question tag.
You used to live in Leeds, __________.
a) used you?
b) usedn't you?
c) do you?
d) None

85.Identify the sentence pattern.
These shoes are just the right size.
a) S V O
b) S V A
c) S V C
d) S V C A

86.Fill in the blank with suitable article.
_______ more he read _______ less he understand.
a) A, the
b) A, a
c) The, a
d) The, the

87.Replace the underlined word with its American equivalent 'Crisps'.
a) cookies
b) snacks
c) potato chips
d) biscuits

88.Identify the sentence.
He didn't tell me where he had been, but I knew it,
a) Compound
b) Complex
c) Simple
d) Imperative

89.Identify the degree of the sentence.
His new novel is less interesting than his earlier ones.
a) Superlative
b) Positive
c) Comparative
d) None

90.Identify the compound word with the wrong plural form.
a) passers-by
b) runners-up
c) step-sisters
d) cups-fuls

91.The figure of speech used in the line.
'Dust thou art dust returnest' is,
a) allusion
b) alliteration
c) oxymoron
d) Onomatopoeia

92.The Nationality of Author of "Refugee" is,
a) Russian
b) Indian
c) Chinese
d) American

93.'On the day of Sicilian July, with Etna smoking' What is 'Etna'?
a) a volcano
b) a mountain
c) a factory
d) a industry

94.Who wrote the travelogue 'To the land of snow'?
a) Shakespeare
b) Khushwant Singh
c) Ahtushi Deshpande
d) Samuel Johnson

95.Which of the following is the correct prefix for the word 'indicate'?
a) pre
b) en
c) im
d) contra

96.Choose the correct tense.
The United State _______ a large country.
a) are
b) is
c) are having
d) None

97.Fill in the blank with Gerund
________ is a good exercise.
a) walk
b) walks
c) walking
d) to walk

98.The plural form of 'louse' is ________.
a) louse
b) lice
c) louses
d) lices

99.Supply a suitable article. I met _______ European.
a) a
b) an
c) the
d) No article

100.Choose the error part.
The on the of the
factory is outskirt city
a b c d

விடைகள்

81	82	83	84	85	86
C	B	A	B	C	D
87	88	89	90	91	92
C	A	C	D	A	C
93	94	95	96	97	98
A	C	D	B	C	B
99	100				
A	C				

-தொடரும்.....

தொகுப்பு: சத்யா ஐ.ஏ.எஸ். அகாதெமி, சென்னை.

‘விளையாடு இந்தியா’ போட்டி: சென்னை சிறுவனுக்கு வெள்ளி

புது தில்லி, பிப். 2: பள்ளிகளுக்கு இடையேயான தேசிய அளவிலான ‘விளையாடு இந்தியா’ போட்டியில் துப்பாக்கி சுடுதலில் சென்னையைச் சேர்ந்த ரித்திக் ரமேஷ் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

விளையாடு இந்தியா போட்டியின் 3-ஆவது நாளில், டாக்டர் கர்னி சிங் ஷூட்டிங் ரேஞ்சில் சிறுவர்களுக்கான 10மீ ஏர் ரைஃபிள் சுடும் போட்டி நடைபெற்றது. இதில், கோலாப்பூரின் சாஹு மானே தங்கமும், சென்னையின் ரித்திக் ரமேஷ் வெள்ளியும், தில்லியின் பர்த் மகிஜா வெண்கலமும் வென்றனர்.

சிறுமிகளுக்கான 10 மீ ஏர் ரைஃபிள் பிரிவில் சண்டீகரின் ஜீனா கிட்டா முலிடமும், புணேவின் நந்திதா சுல் 2-ஆம் இடமும், இந்தூரின் யானா ரத்தோர் 3-ஆம் இடமும் பிடித்தனர்.

ஹாக்கி: சிறுமிகளுக்கான ஹாக்கி பிரிவில் ஹரியாணா, பஞ்சாப் அணிகள் வெற்றி பெற்றன. தில்லியில் தயான்சந்த் மைதானத்தில் வெள்ளிக்கிழமை ‘ஏ’ பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் ஹரியாணா 3-0 என்ற கோல் கணக்கில் உத்தரப் பிரதேசத்தை வென்றது. பி பிரிவில் பஞ்சாப் 7-2 என்ற கணக்கில் ஒடிஸாவை வென்றது. ஆட்டங்களில் ஜார்க்கண்ட் 12-0 என சத்தீஸ்கரையும், சண்டீகர் 4-1 என தில்லியையும் வீழ்த்தின.

சிறுவர்களுக்கான ஹாக்கி பிரிவில் பஞ்சாப் 10-1 என ராஜஸ்தானை வென்றது. சண்டீகர் 2-1 என உத்தரப் பிரதேசத்தையும், ஹரியாணா 2-1 என ஒடிஸாவையும், கர்நாடகம் 3-2 என தில்லியையும் வென்றன.

இந்தியன் சூப்பர் லீக்...

மகாராஷ்டிர மாநிலம் புணேவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தியன் சூப்பர் லீக் கால்பந்தாட்டத்தில் மோதிய எஃப்சி புணே சிட்டி–கேரளா பிளாஸ்டர்ஸ் எஃப்சி அணியினர். இந்த ஆட்டத்தில் கேரளா 2–1 என்ற கோல் கணக்கில் வென்றது.

முதல் டெஸ்ட்: இலங்கை 504/3

சிட்டகாங், பிப். 2: வங்கதேசத்துக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 504 ரன்கள் எடுத்து ஆடி வருகிறது.

சிட்டகாங்கில் நடைபெறும் இந்தப் போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த வங்கதேசம் 129.5 ஓவர்களில் 513 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தது. அணியில் அதிகபட்சமாக மோமினுல் ஹக் 176 ரன்கள் விளாசினார். இலங்கை தரப்பில் சுரங்கா லக்மல் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகள் சாய்த்தார்.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணியில் தொடக்க வீரர் கருணாரத்னே டக் அவுட்டாக, பின்னர் வந்த குசல் மெண்டிஸ்–தனஞ்ஜெய டி சில்வா ஜோடி அருமையாக ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்தியது. 2-ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 308 ரன்கள் குவித்தது. இதில் தனஞ்ஜெயா 173, மெண்டிஸ் 196 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர்.

3-ஆம் நாளான வெள்ளிக்கிழமை முடிவில் ரோஷன் சில்வா 87, கேப்டன் சண்டிமல் 37 ரன்களுடன் ஆடி வருகின்றனர். வங்கதேச தரப்பில் முஸ்டாஃபிஸுர் ரஹ்மான், மெஹதி ஹசன், தைஜுல் இஸ்லாம் தலா ஒரு விக்கெட் எடுத்துள்ளனர். வங்கதேசத்தின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோரை எட்ட இலங்கை இன்னும் 9 ரன்களே எடுக்க வேண்டியுள்ளது.

யு–19 உலகக் கோப்பை இறுதி ஆட்டம்

இன்று இந்தியா–ஆஸ்திரேலியா பலப்பரீட்சை

மௌண்ட் மௌங்கனுய், பிப். 2: பத்தொன்பது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு-19) உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா–ஆஸ்திரேலியா அணிகள் சனிக்கிழமை மோதுகின்றன.

இரு அணிகளுமே தலா 3 முறை உலகக் கோப்பையை கைப்பற்றியுள்ள நிலையில், 4-ஆவது முறையாக வாகை சூட இரு அணிகளுமே கடுமையாகப் போட்டியிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

உலகக் கோப்பை போட்டியின் முதல் ஆட்டத்திலேயே இந்தியா 100 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தியுள்ளது. அதே அணியை இறுதி ஆட்டத்தில் சந்திப்பது ஒருவகையில் எளிதானது தான். எனினும், முதல் ஆட்டத்தில் தோற்ற ஆஸ்திரேலியா, அடுத்தடுத்த ஆட்டங்களில் அபார வெற்றி கண்டது. எனவே, இறுதி ஆட்டத்தில் இந்தியாவுக்கு அந்த அணி கடும் சவால் அளிக்கும்.

கோப்பையுடன் இந்திய கேப்டன் பிருத்வி, ஆஸ்திரேலிய கேப்டன் ஜேசன்.

திராவிட் பயிற்சியின் கீழான இந்திய அணி இப்போட்டியில் தோல்வியே இன்றி முன்னேறி வந்துள்ளது. அதிலும், இது வரை ஆடிய 5 ஆட்டங்களில் அதிகபட்சமாக அரையிறுதியில் பாகிஸ்தானை 203 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்திய அணியின் பேட்டிங்கை பொருத்த வரையில், கேப்டன் பிருத்வி ஷா–மஞ்சோத் கல்ரா ஜோடி அருமையான தொடக்கத்தை அளிக்கும். இத்தொடர் முழுவதுமாகவே ரன்களை குவித்து வந்த 3-ஆவது வீரர் சுபம் கில், அணிக்கான மிகப்பெரிய பலம்.

வேகப்பந்துவீச்சில் ஷிவம் மாவி மற்றும் கமலேஷ் நாகர்கோடி ஆகியோர் ஆஸ்திரேலிய பேட்ஸ்மேன்களை திணறடிக்க உள்ளனர். சுழற்பந்துவீச்சில் அபிஷேக் சர்மா, அனுகுல் ராய் ஆகியோர் விக்கெட்டுகளை வீழ்த்த வழி வகுப்பர். இதில் அபிஷேக் சர்மா லோயர் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேனாகவும் ரன்கள் சேகரிக்க உதவியாகவும் இருப்பார்.

ஜேசன் சங்கா தலைமையிலான ஆஸ்திரேலிய அணியைப் பொருத்த வரையில், காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்களில் அபாரமாக வெற்றி கண்டுள்ளது அணியின் பலம். அணியின் ஆல்ரவுண்டரான ஆரோன் ஹார்டி காயம் காரணமாக விலகியுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் பேட்ரிக் ரோவி அணியின் இணைந்துள்ளார்.

அணிகள் விவரம்

இந்தியா: பிருத்வி ஷா (கேப்டன்), சுபம் கில், மஞ்சோத் கல்ரா, ஹிமான்ஷு ராணா, அபிஷேக் சர்மா, ரியான் பராக், ஹார்விக் தேசாய், ஷிவம் மாவி, கமலேஷ் நாகர்கோடி, இஷான் பொரேல், அனுகுல் ராய், ஷிவா சிங், ஆர்யான் ஜுயல், அர்ஷ்தீப் சிங், பங்கஜ் யாதவ்.

ஆஸ்திரேலியா: ஜேசன் சங்கா (கேப்டன்), வில் சுதர்லேண்ட், ஸேவியர் பார்ட்லெட், மேக்ஸ் பிரயான்ட், ஜேக் எட்வர்ட்ஸ், ஸாக் இவான்ஸ், ஜேரோட் ஃப்ரீமேன், ரையான் ஹேட்லி, பேக்ஸ்டர் ஹோல்ட், நாதன் மெக் ஸ்வீனி, ஜோனதன் மெர்லோ, லாய்ட் போப், பராம் உப்பல், ஆஸ்டின் வாக்.

ஆட்டநேரம்: மாலை 6.30

குளிர்கால ஒலிம்பிக்கில் ஷிவா, ஜெகதீஷ்



புது தில்லி, பிப். 2: தென் கொரியாவின் பியோங் சாங் நகரில் நடைபெற இருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில், இந்தியாவின் லூக் வீரர் ஷிவா கேசவன், ஸ்கீ வீரர் ஜெகதீஷ் சிங் பங்கேற்கின்றனர்.

இதில் ஷிவா கேசவன் 6-ஆவது முறையாகவும், ஜெகதீஷ் சிங் முதல் முறையாகவும் குளிர்கால ஒலிம்பிக்கில் போட்டியிடுகின்றனர்.

ஷிவா கேசவன் முதல் முறையாக 1998-இல் ஜப்பானில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றார். அதைத் தொடர்ந்து 2002, 2006, 2010, 2014 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளிலும் களம் கண்டார்.

இதில் 1998, 2002 ஆகிய ஒலிம்பிக் போட்டிகளில் ஷிவா மட்டுமே பங்கேற்ற நிலையில், இதர ஒலிம்பிக்கில் ஷிவாவுடன் மொத்தமாக 6 இந்தியர்கள் பங்கேற்று இருந்தனர்.

செய்திகள் சில வரிகளில்...

- டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியின் உலக குரூப் சுற்றில் ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ்-ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாரை வெல்ல, ஆஸ்திரேலியாவின் நிக் கிர்ஜியோஸ்-ஜெர்மனியின் ஜான் லெனார்ட் ஸ்ட்ரஃபை வீழ்த்தினார்.
- டல்லாஸ் சேலஞ்சர் டென்னிஸில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்–அமெரிக்காவின் ஜோ சலிஸ்பரி இணை அரையிறுதிக்கு முன்னேறியது.
- ஸ்குவாஷ் சர்வதேச தரவரிசையில் இந்திய வீரர்கள் வரிசையில் முதல் முறையாக சௌரவ் கோஷல் 14–ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். மகளிர் பிரிவில் ஜோஷ்னா சின்னப்பா 17–ஆவது இடத்துக்கு வர, தீபிகா பலிக்கல் 20–ஆவது இடத்தில் நீடிக்கிறார்.
- தமிழக கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டரான வாஷிங்டன் சுந்தருக்கு ‘இளம் சாதனையாளர் விருது’ வழங்கி சென்னை ரோட்டரி சங்கம் கௌரவித்துள்ளது.
- இரவு விடுதி சர்ச்சையில் சிக்கி விசாரணை காரணமாக சர்வதேச போட்டி வாய்ப்புகளை இழந்த இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ், நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கிறார்.

சென்னை ஓபன் சேலஞ்சர்

தாம்சன், யூகி பங்கேற்பு

சென்னை, பிப். 2: சென்னையில் வரும் 12-ஆம் தேதி தொடங்கும் சென்னை ஓபன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆஸ்திரேலியாவின் ஜோர்டான் தாம்சன், இந்தியாவின் யூகி பாம்ப்ரி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் உலகின் 94–ஆம் நிலை வீரரான தாம்சன் போட்டித் தரவரிசையில் முதலிடத்திலும், உலகின் 111–ஆம் நிலை வீரரான பாம்ப்ரி 2–ஆவது இடத்தில் இருப்பதாக தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் தெரிவித்துள்ளது.

ஸ்பெயினின் மார்செல் கிரானோலர்ஸ், தென் கொரியாவின் சூன்வூ குவோன் ஆகியோருக்கு முறையே போட்டித் தரவரிசையில் 3 மற்றும் 4–ஆவது இடங்கள் வழங்கப்படும் எனத் தெரிகிறது.

இப்போட்டியில் இதர இந்தியர்களான சாகேத் மைனேனி, சுமித் நாகல், பிரஜனேஷ் கன்னேஸ்வரன் ஆகியோர் பிரதான சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளனர். அவர்கள் தவிர, மேலும் 4 இந்தியர்களுக்கு வைல்டு கார்டு வாய்ப்பு மூலம் நேரடி பிரதான சுற்று வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இப்போட்டிக்கான தகுதிச் சுற்றுகள் வரும் 10–ஆம் தேதி தொடங்குகிறது. இறுதி ஆட்டம் 17–ஆம் தேதி நடைபெறுகிறது.

இந்திய ஓபன் பாட்மிண்டன்: அரையிறுதியில் சிந்து

புது தில்லி, பிப். 2: இந்திய ஓபன் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து மகளிர் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

முன்னதாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில், போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் சிந்து 21–12, 19–21, 21–11 என்ற செட்களில் போட்டித் தரவரிசையில் 8–ஆவது இடத்தில் இருந்த ஸ்பெயினின் பீட்ரிஸ் காரெல்ஸை வீழ்த்தினார். இருவருக்கும் இடையேயான ஆட்டம் 35 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது.

சிந்து தனது அரையிறுதியில், போட்டித் தரவரிசையில் 3–ஆவது இடத்தில் இருக்கும் தாய்லாந்தின் ரட்சனோக் இன்டனோனை எதிர் கொள்கிறார். சாய்னா தனது காலிறுதியில் 10–21, 13–21 என்ற செட்களில் அமெரிக்காவின் பெய்வென் ஸாங்கிடம் வீழ்ந்தார்.

சாய்னா தோல்வி

காஷ்யப், சாய் பிரணீத் தோல்வி: ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஒன்றில் இந்தியாவின் பி.காஷ்யப் 16–21, 18–21 என்ற செட்களில் சீனாவின் கியாவ் பின்னிடம் வீழ்ந்தார். மற்றொரு காலிறுதியில் சாய் பிரணீத் 15–21, 13–21 என்ற செட்களில் தைவானின் சௌ டியன் சென்னிடம் தோற்றார்.

பீட்ரிஸுக்கு பந்தை திருப்பும் சிந்து

ஆடவர் இரட்டையர் பிரிவில் மானு அத்ரி–சுமீத் ரெட்டி ஜோடி 19–21, 19–21 என்ற செட்களில் இந்தோனேஷியாவின் மார்கஸ் ஃபெர்னால்டி கிடியன்–கெவின் சஞ்சயா சுகமுல்ஜோ இணையிடம் தோற்றது. மகளிர் இரட்டையரில் அஸ்வினி பொன்னப்பா–சிக்கி ரெட்டி இணை 17–21, 21–23 என்ற செட்களில் சீனாவின் டு யுவே–லி யின் ஹுய் ஜோடியிடம் தோற்றது.

வோஸ்னியாக்கியின் வெற்றிக்கான தாரக மந்திரம்...

க.தி.மணிகண்டன்

2012 ஆஸ்திரேலிய ஓபன். இந்த முறையாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்ல வேண்டும் என்ற ஆர்வத்துடன் பங்கேற்றார் டென்மார்க் தேசத்தின் டென்னிஸ் தேவதையும், அப்போதைய உலகின் முதல் நிலை வீராங்கனையுமான கரோலின் வோஸ்னியாக்கி.

காலிறுதி வரை முன்னேறிய அவர், பெல்ஜியத்தின் கிம் கிளிஜ்ஸ்டர்ஸிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார். அத்துடன், நம்பர் 1 அந்தஸ்தையும் இழந்தார்.

‘ஒரு கிராண்ட்ஸ்லாம் கூட வெல்லாத வோஸ்னியாக்கி, தரவரிசையில் முதலிடம் வகிக்க என்ன தகுதி இருக்கிறது?’ என்று ஏற்கெனவே அவருக்கு எதிராக விமர்சனங்கள் எழுந்திருந்த நிலையில், இந்தத் தோல்வி அவரை சற்று துவளச் செய்தது.

செய்தியாளர்கள் சந்திப்பில், ‘இந்தத் தோல்வி குறித்தும், நம்பர் 1 அந்தஸ்தை இழந்தது குறித்தும் எந்தக் கவலையும் இல்லை. தரவரிசையில் மீண்டும் முதலிடத்துக்கு வருவேன். எனது டென்னிஸ் பயணம் இத்துடன் முடிந்துவிட்டதாக சிலர் பேசுகின்றனர். என் முன்னால் இன்னும் சிறப்பான ஆண்டுகள் காத்திருக்கின்றன’ என்று கூறிவிட்டு சென்றார்.

காலங்கள் கடந்து, இந்த ஆண்டு (2018) அதே ஆஸ்திரேலிய ஓபன் சிறப்பாகத் தொடங்கியது. நடப்பு சாம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், இருமுறை ஆஸ்திரேலியன் ஓபன் சாம்பியனான பெலாரஸின் விக்டோரியா அஸரென்கா உள்ளிட்ட வீராங்கனைகள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் போட்டியிலிருந்து விலகினர். எனினும், ஊக்கமருத்து குற்றச்சாட்டில் விதிக்கப்பட்ட தடைக் காலம் முடிவடைந்த முன்னாள் சாம்பியனான ரஷியாவின் மரியா ஷரபோவா பங்கேற்றார்.

‘நம்பர் 1’ இடத்தில் இருந்த ருமேனியாவின் சைமோனா ஹேலப், ஸ்பெயினின் கார்பைன் முகுருசா ஆகியோரோடு, வோஸ்னியாக்கியும் களம் கண்டார்.

யார் ஜெயிப்பார்கள்? என்ற எதிர்பார்ப்பு தொடக்கம் முதலே தொற்றிக் கொண்டது. தடைகளை தகர்த்து, இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார் வோஸ்னியாக்கி. எதிர்பார்த்தது போல நம்பர் 1 நாயகியான சைமோனாவும் அந்தச் சுற்றுக்கு வந்தார். இருவருமே இதுவரை ஒரு கிராண்ட்ஸ்லாம் கூட வென்றதில்லை.

வெற்றியாளரை தீர்மானிக்கும் இறுதி ஆட்டத்தில், சைமோனாவை சாய்ப்பது வோஸ்னியாக்கிக்கு

அவ்வளவு சாதாரணமாக இருக்கவில்லை. இருப்பினும், ஆற்றல் அனைத்தையும் திரட்டி ஆக்ரோஷமாக ஆடி வாகை சூடி வரலாறு படைத்தார் இக்கட்டுரையின் கதாநாயகியான வோஸ்னியாக்கி. ரசிகர்கள் ஆரவாரத்தில் அரங்கம் அதிர்ந்தது.

வோஸ்னியாக்கியின் பயிற்சியாளரும், அவரது தந்தையுமான பியோட்டரும் சாதனை மகளின் சாட்சியாக அரங்கில் அமர்ந்து ஆட்டத்தை ரசித்திருந்தார். இந்த தருணத்தில், வாகை சூடிய வோஸ்னியாக்கியின் வரலாற்றை சற்று திரும்பிப் பார்ப்போம்.

இளமைக் காலம்: வோஸ்னியாக்கி, டென்மார்க்கின் ஒடென்ஸ் நகரில் 1990–ஆம் ஆண்டு ஜூலை 11–ஆம் தேதி பிறந்தார். தந்தை பியோட்டர் கால்பந்து வீரர். தாயார் கைப்பந்து வீராங்கனை. போலந்து நாட்டைச் சேர்ந்த இருவரும், பின்னர், டென்மார்க்குக்கு குடிபெயர்ந்தனர். சகோதரர் பாட்ரிக், டென்மார்க் கால்பந்து அணியின் முன்னாள் வீரர். குடும்பத்தில் அனைவரும் விளையாட்டுத் துறையில் இருந்ததால், வோஸ்னியாக்கிக்கு இயல்பாகவே விளையாட்டின் மீது ஆர்வம் பிறந்தது.

ஏழு வயதில் டென்னிஸ் மட்டையைக் கையில் எடுத்தார். டென்னிஸ் மீது கட்டுக்கடங்காத காதல் பிறந்தது. ஆட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்து அவரது தந்தை ஊக்கப்படுத்தினார். குருவை மிஞ்சிய சிஷ்யையாக 9–ஆவது வயதில் உருவெடுத்தார் வோஸ்னியாக்கி. அந்த வயதிலேயே அவரது பெற்றோரையும், உடன் பிறந்த வரையும் டென்னிஸில் வீழ்த்தியிருந்தார். பின்னர், முறையாக பயிற்சி பெறத் தொடங்கினார்.

அந்த வயதிலேயே அவர் கடுமையான பயிற்சிகள் மேற்கொள்வதை கண்ட தந்தை பியோட்டர், மகள் ‘நம்பர் 1’ டென்னிஸ் வீராங்கனையாக உருவெடுக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என நினைத்துக் கொண்டார். சர்வதேச மகளிர் டென்னிஸ் சங்கம் (டபிள்யூடிஏ) சார்பில் ஜூனியர் பிரிவில் நடத்தப்பட்ட போட்டிகளில் 15–ஆவது வயதில் பங்கெடுக்கத் தொடங்கினார் வோஸ்னியாக்கி.

அதற்கு அடுத்த ஆண்டே ஆஸ்திரேலியன் ஓபன் ஜூனியர் பிரிவில் இறுதிச்சுற்று வரை முன்னேறினார். பிரெஞ்ச் ஓபன் ஜூனியர் இரட்டையர் பிரிவிலும் இறுதிச் சுற்று வரை முன்னேறினார். இறுதியில், விம்பிள்டன் ஜூனியர் ஒற்றையர் பிரிவில் சாம்பியனாகி தனது திறமையை நிரூபித்தார்.

அந்த 2006–ஆம் ஆண்டு, தான் ஒரு தொழில்முறை வீராங்கனை என்று நிரூபிப்பதற்கான வாய்ப்பும் வோஸ்னியாக்கிக்கு அமைந்தது. 17 வயதில் சர்வதேச தரவரிசையில் 64–ஆவது இடம்பிடித்த வோஸ்னியாக்கி, 2008–இல் 12–ஆவது இடத்துக்கு முன்னேறி அசுர வளர்ச்சி அடைந்திருந்தார். அடுத்ததாக கிராண்ட்ஸ்லாம் பட்டத்துக்கு இலக்கு நிர்ணயித்த வோஸ்னியாக்கி, அதற்காக தீவிர பயிற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 2009 விம்பிள்டனில் 4–ஆவது சுற்று வரையும், அதே ஆண்டு அமெரிக்க ஓபனில் இறுதிச்சுற்று வரையும் முன்னேறினார். ஆனால், கிராண்ட்ஸ்லாம் கனவு, கனவாகவே நீடித்தது. அதே நேரம், தரவரிசையில் 4–ஆவது இடத்துக்கு முன்னேறி ‘டாப் 5’ வீராங்கனைகள் வரிசையில் இடம்பிடித்தார்.

நம்பர் 1: 2010–ஆம் ஆண்டில் டபிள்யூடிஏ போட்டிகளில் 6 பட்டங்களை வென்று ஆண்டின் இறுதியில் தரவரிசையில் முதல் முறையாக முதலிடத்துக்கு வந்தார் வோஸ்னியாக்கி. முதலிடம் என்பது டென்னிஸ் வீரர், வீராங்கனைகளின் லட்சியங்களில் ஒன்றாயிற்றே. அந்த இடத்தை யாருக்கும் விட்டுக்கொடுக்காமல் 67 வாரங்கள் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டார் வோஸ்னியாக்கி.

பிறகு வெற்றி–தோல்விகளை கலந்து சந்தித்து வந்த நிலையில், 2012–13 காலகட்டத்தில் சரிவைச் சந்தித்தார். கிராண்ட்ஸ்லாம் கனவும் தள்ளிப்போனது. ஆனாலும் சோர்ந்து போகாத வோஸ்னியாக்கி, தனது பெற்றோர் கூறிய வெற்றிக்கான தாரக மந்திரத்தை தன்னுள் கூறிக்கொண்டார். தீவிர பயிற்சி செய்தார். கிராண்ட்ஸ்லாமை வென்றே தீர வேண்டும் என்ற வைராக்கியம் மனதில் கனன்று கொண்டிருந்தது.

2014–ஆம் ஆண்டு முதல் மீண்டும் பழைய ஃபார்முக்கு திரும்பினார். டென்னிஸ் உலகம் அவரை உற்று நோக்க ஆரம்பித்தது. அந்த ஆண்டு விம்பிள்டனில் 4–ஆவது சுற்று வரை சென்றதுடன், அமெரிக்க ஓபனில் மீண்டும் இறுதிச்சுற்று வரை முன்னேறினார்.

ஓய்வு நேரங்களில் புது மொழிகளைக் கற்றுக்கொண்டார். ஃபேஷன் ஷோக்களில் ஆர்வம் காட்டினார். நடிகையாகவும் உருவெடுத்தார். ஆனால், டென்னிஸில் இருந்து மட்டும் அவர் கவனம் சிதறவில்லை. ஆண்டுகள் உருண்டோடின. முன்னணி வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் டபிள்யூடிஏ ஃபைனலில் 2017–ஆம் ஆண்டில் சாம்பியன் ஆனார். ஆண்டின் முடிவில் 3–ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

2018 தனக்கான ஆண்டு என்று முடிவு செய்தார். கிராண்ட்ஸ்லாம் வென்றே ஆக வேண்டும் என்ற உறுதியுடன் ஆஸ்திரேலியன் ஓபனில் பங்கேற்றார்.

இறுதிச்சுற்றில், ஹேலப்பை போராடி வென்றார். முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் வென்ற டென்மார்க் வீராங்கனை என்ற வரலாறு படைத்தார். நீண்டகால கனவு நிறைவேறியதுடன், மீண்டும் ‘நம்பர் 1’ இடத்துக்கு வந்துவிட்டார். கண்களின் ஓரம் கண்ணீர்த் துளி எட்டிப் பார்த்தது. பின்னர், இதழோரம் புன்னகை படர ஆரம்பித்தது. கோப்பைக்கு முத்தமிட்டார். ‘கனவு நிறைவேறிவிட்டது’ என்று தெரிவித்தார். ரசிகர்கள் கைதட்ட அரங்கம் அதிர்ந்தது.

‘உன் மீது நம்பிக்கை கொள்’– வோஸ்னியாக்கியின் பெற்றோர் கூறிய தாரக மந்திரம் இதுதான்.

> நம்பிக்கை... நம்பிக்கை... இதுதான் வெற்றியின் தாரக மந்திரம். தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் இருந்தால் எதிலும் வெற்றி பெறலாம்.

நேரில் கள ஆய்வு

ஐநா பாதுகாப்பு கவுன்சிலுக்கு மியான்மர் அனுமதி மறுப்பு

நியூயார்க், பிப். 2: மியான்மரில் ரோஹிங்கயா இனத்தவருக்கு எதிராக வன்முறைகள் நடைபெறுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்ய அந்த நாடு அனுமதி மறுத்துள்ளது.

இதுகுறித்து, ஐ.நா.வுக்கான குவைத் தூதர் மன்சூர் அல்-ஒடாய்பி ஐ.நா.வில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மியான்மரில் ரோஹிங்கயா இனத்தவர் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமைகள் மீறல் குறித்து நேரடியாக ஆய்வு மேற்கொள்ள ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் குழுவினர் வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் மியான்மர் செல்வதாக இருந்தது.

எனினும், அதற்கான அனுமதியை மியான்மர் அதிகாரிகள் மறுத்துள்ளனர். மியான்மரில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் குழுவினர் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கு மியான்மர் அரசு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

எனினும், அத்தகைய ஒரு சுற்றுப் பயணத்துக்கு இது ஏற்ற காலமல்ல என்று அவர்கள் கருதுகின்றனர். தற்போது,ராக்கைன் மாகாணத்தில் பதற்றம் நிலவி வருவதால், அங்கு பாதுகாப்பு கவுன்சில் பிரதிநிதிகள் வருவது ஆபத்தானதாக இருக்கும் என்று மியான்மர் அதிகாரிகள் கருதுகின்றனர் என்றார் அவர்.

வன்முறைக்கு அஞ்சி வங்கதேசத்துக்கு வரும் ரோஹிங்கயா அகதிகள் (கோப்புப் படம்).

மியான்மரின் ராக்கைன் மாகாணத்தில் பெரும்பான்மையாக வசித்து வரும் ரோஹிங்கயா முஸ்லிம் இனத்தவர்கள், வங்கதேசத்தைப் பூர்விகமாகக் கொண்டவர்கள். பல தலைமுறைகளாக மியான்மரில் வசித்து வந்தாலும், அந்த நாட்டில் அவர்கள் சட்டவிரோத வங்கதேச அகதிகளாகவே பரவலாகக் கருதப்படுகின்றனர்.

மியான்மர் அரசும், ரோஹிங்கயா இனத்தவருக்கு முழுமையான குடியுரிமை அளிப்பதைத் தவிர்த்து வருகிறது.

இதன் காரணமாக, தங்களது உரிமையை நிலைநாட்ட ரோஹிங்கயாக்களில் ஒரு பிரிவினர் தீவிரவாதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் அவர்கள் நிகழ்த்திய தாக்குதலில் சில பாதுகாப்புப் படையினர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, மியான்மர் ராணுவம் நடத்திய கடுமையான பதிலடித் தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

மேலும், உள்ளூர் கலவரக்காரர்களுடன் இணைந்து ரோஹிங்கயா கிராமங்களுக்கு ராணுவம் தீவைத்ததாகவும், பாலியல் பலாத்காரம் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த வன்முறைக்கு அஞ்சி, கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து மட்டும் சுமார் 7 லட்சம் ரோஹிங்கயா அகதிகள் வங்கதேசத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், மியான்மரில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கவும், வங்கதேசத்தில் தஞ்சமடைந்த அகதிகளை திரும்ப அழைப்பதற்கான சூழல் குறித்தும் ஆய்வு செய்ய ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் குழுவினர் அந்த நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள முடிவு செய்தது.

எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவாக செயல்பாடு: எஃப்.பி.ஐ. மீது டிரம்ப் குற்றச்சாட்டு

வாஷிங்டன்,பிப்.2: அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷியத் தலையீடு குறித்த விசாரணையில், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாகச் செயல்படுவதாக அமெரிக்கப் புலனாய்வுத் துறையான எஃப்.பி.ஐ. மற்றும் நீதித் துறை மீது அதிபர் டொனால்ட் டிரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 2016-ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில், டொனால்ட் டிரம்ப்புக்கு ஆதரவாக மக்கள் கருத்தைத் திரட்டும் வகையில் அவரது பிரசாரக் குழுவினருக்கு ரஷியா உதவிகள் செய்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனுக்கு எதிரான ரகசியத் தகவல்களை, இணையதளம் மூலம் ஊடுருவித் திருடி வெளியிட்டது உள்பட ரஷியா செய்த பல்வேறு உதவிகளால் தான் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற்றதாகவும் கூறப்படுகிறது.

மேலும், இது தொடர்பான விசாரணையையும் எஃப்.பி.ஐ. நடத்தி வருகிறது. விசாரணை தொடங்கிய உடனேயே அப்போதைய எஃப்.பி.ஐ. தலைவர் ஜேம்ஸ் கோமியை பதவி நீக்கம் செய்துவிட்டு, கிறிஸ்டோபர் ரேயை புதிய இயக்குநராக டிரம்ப் நியமித்தார்.

இந்த நிலையில், ரஷியத் தலையீடு குறித்த விசாரணையில், எஃப்.பி.ஐ. முறைகேடான வேவுப் பணிகளில் ஈடுபட்டதாக டிரம்ப் தரப்பு குற்றம் சாட்டி வருகிறது. மேலும், அத்தகைய விசாரணைகள் குறித்து தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையை வெளியிடவும் டிரம்ப் அனுமதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்த அறிக்கை வெளியிடப்பட்டால், தனது அதிகாரத்துக்குள்பட்ட அதிகாரிகள் மீதே குற்றச்சாட்டுகளையும், அதற்கான ஆதாரங்களையும் ஒரு அதிபர் வெளியிடுவதாகிவிடும் என்று சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தச் சூழலில், டிரம்ப் வெளியிட்டுள்ள சுட்டுரை (டுவிட்டர்) பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எஃப்.பி.ஐ. மற்றும் நீதித் துறை உயரதிகாரிகள், ரஷியத் தலையீடு குறித்த விசாரணையை அரசியல் மயமாக்கிவிட்டனர். ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாகவும், குடியரசுக் கட்சிக்கு எதிராகவும் அவர்களது விசாரணையின் போக்கு உள்ளது என்று தனது சுட்டுரைப் பதிவில் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

எஃப்.பி.ஐ. மற்றும் நீதித் துறைக்கு எதிராக சர்ச்சைக்குரிய அறிக்கை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அதற்கு முன்னதாகவே அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள இந்த சர்ச்சைக்குரிய கருத்து அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஃபிடல் காஸ்ட்ரோவின் மகன் தற்கொலை

ஹவானா, பிப். 2: கியூபாவின் முன்னாள் அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோவின் மூத்த மகன் தற்கொலை செய்து கொண்டதாக அந்த நாட்டின் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கியூபா அரசின் அதிகாரப்பூர்வ நாளிதழான 'கிரான்மா' தெரிவித்துள்ளதாவது: ஃபிடல் காஸ்ட்ரோவின் மூத்த மகன் டையாஸ்-பலார்ட் வியாழக்கிழமை காலை தற்கொலை செய்து கொண்டார்.

மிகவும் மோசமான மன அழுத்தத்துக்காக அவர் பல மாதங்களாக சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், தனது வாழ்வை முடித்துக் கொள்ள அவர் முடிவு செய்துவிட்டார் என்று அந்த நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 68 வயதான ஃபிடல் காஸ்ட்ரோ டையாஸ்-பலார்ட், காஸ்ட்ரோவின் முதல் மனைவி மிர்தா டையாஸ்-பலார்ட்டுக்குப் பிறந்தவர்.

கியூபாவில் கம்யூனிஸப் புரட்சியை ஏற்படுத்திய ஃபிடல் காஸ்ட்ரோ, கடந்த 1959-ஆம் ஆண்டு ஜனவரி 8-ஆம் தேதி நடைபெற்ற புரட்சியின் வெற்றி விழாவின்போது, ஆலிவ் நிற ராணுவச் சீருடையுடன் சிறுவன் டையாஸ்-பலார்ட்டை அழைத்து வந்தார்.

அதிலிருந்து, கியூபா மக்களின் அபிமானத்தைப் பெற்று விளங்கிய டையாஸ்-பலார்ட், சோவியத் யூனியனில் பொறியியல் படித்தவர். ஃபிடல் காஸ்ட்ரோவைப் போலவே உயரமாகவும்,அலசலான தாடியுடனும் காணப்பட்ட அவர், ஆட்சியில் எந்தப் பங்கும் வகிக்காமலேயே கியூபா மக்களிடையே பெரும் புகழ் பெற்று விளங்கினார். கியூபாவின் அணுசக்தித் துறை வளர்ச்சியில் டையாஸ்-பலார்ட் முக்கியப் பங்காற்றியதாகக் கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களாகவே கடுமையான மன அழுத்த நோய்க்கு ஆளாகியிருந்த அவர், புறநோயாளியாக அதற்கான சிகிச்சைப் பெற்று வந்தார்.

மாலத்தீவு தேர்தலில் மீண்டும் போட்டி

சிறைத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் நஷீத் அறிவிப்பு

மாலே, பிப். 2: மாலத்தீவில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் அதிபர் முகமது நஷீத் உள்ளிட்ட அரசியல் கைதிகள் உச்ச நீதிமன்றத்தில் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வரும் தேர்தலில் அதிபர் யாமீன் அப்துல் கயூமை எதிர்த்துப் போட்டியிடப் போவதாக முகமது நஷீத் அறிவித்துள்ளார்.

மாலத்தீவின் அதிபராக முகமது நஷீத் பதவி வகித்தபோது, குற்றவியல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லா முகமதுவைக் கைது செய்ய உத்தரவிட்டது தொடர்பாக நடைபெற்ற வழக்கில், நஷீதுக்கு கடந்த 2016-ஆம் ஆண்டு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், இந்த வழக்கு அதிபர் யாமீன் அப்துல் கயூமால் அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்பட்டதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் குற்றம் சாட்டின.

கடந்த 2015-ஆம் ஆண்டில் மாலத்தீவு முன்னாள் அதிபர் முகமது நஷீதைக் கைது செய்து, நீதிமன்றத்துக்கு முரட்டுத் தனமாக அழைத்துச் செல்லும் போலீஸார் (கோப்புப் படம்).

இந்த நிலையில், அரசியலில் தன்னை எதிர்த்து வந்த பலரையும் பல்வேறு வழக்குகளில் சிக்க வைத்து, அதிபர் யாமீன் அப்துல் கயூம் சிறையில் தள்ளியதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக, எதிர் வரும் தேர்தலில் எதிர்ப்புகளே இல்லாமல் வெற்றி பெற்று யாமீன் அப்துல் கயூம் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், முகமது நஷீத் உள்ளிட்ட 9 அரசியல் கைதிகளை சிறைத் தண்டனையிலிருந்து விடுவித்து, மாலத்தீவு உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

இதையடுத்து, அரசியல் எதிரிகளை உள்நோக்கத்துடன் சிறையில் தள்ளிய அதிபர் யாமீன் பதவி விலக வேண்டும் என்று மாலத்தீவு முழுவதும் எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சூழலில், பிரிட்டனின் அடைக்கலம் பெற்றுவசித்துவரும் முன்னாள் அதிபர் முகமது நஷீத், அதிபர் யாமீனை எதிர்த்து தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து இலங்கையின் கொழும்பு நகரில் அவர் வெள்ளிக்கிழமை கூறியதாவது:

உச்ச நீதிமன்றத்தால் சிறைத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதால்,எதிர்வரும்பொதுத்தேர்தலில் அதிபர் யாமீனை எதிர்த்து என்னால் போட்டியிட முடியும்; நிச்சயம் போட்டியிடுவேன். அந்தத் தேர்தலில் வெற்றியும் பெறுவேன் என்றார் அவர். மாலத்தீவில் சிறைக் கைதியாக இருக்கும்போது மருத்துவச் சிகிச்சைக்காக பிரிட்டன் சென்ற நஷீதுக்கு, அந்த நாட்டு அரசு அரசியல் அடைக்கலம் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கொரிய நாடுகளின் நல்லிணக்கத்தை அமெரிக்கா கெடுக்கிறது

நியூயார்க், பிப். 2: கொரிய தீபகற்ப நாடுகள் இடையே ஏற்பட்டு வரும் நல்லிணக்கத்தைக் குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்வதாக வட கொரியா குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து ஐ.நா. பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸுக்கு வட கொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் ரி யோங் ஹோ எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் முடிந்தவுடன் தென் கொரியாவுடன் இணைந்து கொரிய தீபகற்பம் அருகே போர் ஒத்திகையில் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

இதற்காக, வட கொரியாவைச் சீண்டும் வகையில் அணுசக்தியில் இயங்கும் விமானம் தாங்கிக் கப்பலை எல்லைக்கு வெகு நெருக்கத்தில் கொண்டுவந்து அமெரிக்கா நிறுத்தி வருகிறது.

ரி யோங் ஹோ

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது மட்டுமின்றி, இந்த உலகத்தையே அணு ஆயுதப் போர் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது.

எனவே, இந்த விவகாரத்தில் ஐ.நா. தலையிட்டு அமெரிக்காவின் தவறான நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வட கொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் ரி யோங் ஹோ குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா ஏவுகணைச் சோதனைகளையும், அணு குண்டு சோதனைகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. இதனால் கொரிய தீபகற்பத்தில் கடும் போர்ப் பதற்றம் நிலவி வந்தது.

இந்த நிலையில், இந்த ஆண்டின் தொடக்கத்தில், தென் கொரியாவில் தொடங்கவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக்கில் தங்கள் நாட்டு வீரர்களை அனுப்புவது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன் தெரிவித்தார்.

இதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பான்முன்ஜோம் எல்லை கிராமத்தில், பேச்சுவார்த்தை நடத்த தென் கொரியா முன்வந்தது. இதையடுத்து, கடந்த டிசம்பர் 2015-ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக இரு நாடுகளுக்கிடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

தென் ஆப்பிரிக்கா

தங்கச் சுரங்கத்தில் 955 பேர் சிக்கித் தவிப்பு



தியுனிசென், பிப். 2: தென் ஆப்பிரிக்காவின் பீட்ரிக்ஸ் தங்கச் சுரங்கத்தில் மின்வெட்டு காரணமாக சுமார் 955 தொழிலாளர்கள் கடந்த புதன்கிழமை முதல் சிக்கித் தவித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தச் சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாலும், வெள்ளிக்கிழமை மீண்டும் ஏற்பட்ட மின்வெட்டு காரணமாக பதற்றம் அதிகரித்தது. இந்த நிலையில், மீண்டும் மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், சுரங்கத்தில் சிக்கியுள்ள 955 தொழிலாளர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறும் என்றும் சுரங்க நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கா

துப்பாக்கிச் சூடு: 12 வயது பெண் கைது

லாஸ் ஏஞ்சலீஸ், பிப். 2: அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரிலுள்ள நடுநிலைப் பள்ளியொன்றில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு தொடர்பாக, 12 வயது பெண்ணை போலீஸார் கைது செய்துள்ளனர்.

அந்தத் துப்பாக்கிச்சூடு நடைபெற்ற சில நிமிடங்களில் அந்தப் பெண்ணைக் கைது செய்து அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வரும் போலீஸார், அவரிடமிருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்ததாகத் தெரிவித்தனர்.

யாரும் காயமடையாத இந்தச் சம்பவம் தொடர்பாக, பள்ளிக்கு துப்பாக்கி எடுத்து வந்தது, அலட்சியமாகச் செயல்பட்டது உள்ளிட்ட பிரிவுகளில் அந்தப் பெண்ணின் மேல் போலீஸார் குற்றச்சாட்டு பதிவு செய்வார்கள் என்று தெரிகிறது.

லிபியா

90 அகதிகளுடன் படகு கவிழ்ந்து விபத்து

பாரீஸ், பிப். 2: லிபியா கடல் பகுதி வழியாகச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகு கவிந்து விபத்துக்குள்ளானதில் 90 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று ஐ.நா. அகதிகள் நலப் பிரிவு அச்சம் தெரிவித்துள்ளது.

அந்தப் படகில், பாகிஸ்தானிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் நாடிச் சென்ற அகதிகளே அதிகம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, லிபியாவின் ஸுவாரா நகரில் 10 அகதிகளின் உடல்கள் கரையொதுங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொழில்-வர்த்தகம்

அசோக் லேலண்ட் லாபம் மும்மடங்கு உயர்வு

புது தில்லி, பிப். 2: ஹிந்துஜா குழுமத்தைச் சேர்ந்த அசோக் லேலண்ட் நிறுவனத்தின் மூன்றாம் காலாண்டு லாபம் மும்மடங்கு உயர்ந்தது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வினோத் கே தாசரி கூறியுள்ளதாவது:

நிறுவனம் மூன்றாம் காலாண்டில் சிறப்பான செயல்பாட்டை பதிவு செய்துள்ளது. நடப்பு நிதி ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் மொத்த வருவாயாக ரூ.7,151.12 கோடி ஈட்டப்பட்டுள்ளது. கடந்த நிதி ஆண்டின் இதே கால அளவில் வருவாய் ரூ.4,854.03 கோடியாக இருந்தது. வருவாய் கணிசமாக உயர்ந்ததையடுத்து நிகர லாபம் ரூ.161.71 கோடியிலிருந்து மும்மடங்கு அதிகரித்து ரூ.449.7 கோடியாகி உள்ளது என்றார் அவர்.

பட்ஜெட் எதிரொலி!

பங்குச் சந்தைகளில் கடும் வீழ்ச்சி: சென்செக்ஸ் 839 புள்ளிகள் சரிவு

மும்பை, பிப்.2: பட்ஜெட் அறிவிப்புகள் சாதகமாக இல்லாததால் பங்குச் சந்தைகளில் வர்த்தகம் கடும் வீழ்ச்சி கண்டது. இதன் காரணமாக, சென்செக்ஸ் கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத வகையில் மிக மோசமான சரிவைக் கண்டது.

நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் நிதி பற்றாக்குறை 3.2 சதவீதமாக இருக்கும் என முன்பு மதிப்பிடப்பட்டிருந்த நிலையில், வியாழக்கிழமை வெளியிடப்பட்ட மத்திய பட்ஜெட்டில் இது 3.5 சதவீதத்தை எட்டும் என மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்திருந்தார். அதுமட்டுமின்றி, பங்குச் சந்தைகளில் ஈட்டும் வருவாய்க்கு வரி விதிக்கும் முடிவையும் அவர் வெளியிட்டார். இத்தகைய அறிவிப்புகள் முதலீட்டாளர்களுக்கு பேரிடியாக அமைந்தது.

தரக் குறியீட்டு நிறுவனமான ஃபிட்ச், அதிகரித்து வரும் மத்திய அரசின் கடன் இந்தியாவின் தரக் குறியீடை உயர்த்துவதில் தடைகளை ஏற்படுத்தும் என தெரிவித்தது. மேலும், சர்வதேச சந்தை நிலவரங்களும் சாதகமாக இல்லாதது பங்கு வர்த்தகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. முதலீட்டாளர்கள் லாப நோக்கம் கருதி பங்குகளை அதிக அளவில் விற்பனை செய்து விட்டு வெளியேறினர். இதையடுத்து, பங்குகளின் விலை பாதாளத்துக்கு சென்றதால் முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் ரூ. 4.5 லட்சம் கோடிக்கும் அதிகமாக இழப்பு ஏற்பட்டது.

சென்செக்ஸில் இடம்பெற்றுள்ள அனைத்து துறைகளைச் சேர்ந்த குறியீட்டெண்களும் சரிவுடனேயே முடிவடைந்தன. குறிப்பாக, ரியல் எஸ்டேட் துறை குறியீட்டெண் 6.28 சதவீதமும், உள்கட்டமைப்பு 4.03 சதவீதமும், மின்சாரம் 3.94 சதவீதமும், பொறியியல் சாதனங்கள் 3.59 சதவீதமும் வீழ்ச்சியடைந்தன.

பஜாஜ் ஆட்டோ பங்கின் விலை 4.90 சதவீதமும், பார்தி ஏர்டெல் 4.62 சதவீதமும் சரிந்தன. இவைதவிர, மாருதி சுஸுகி, ஆக்ஸிஸ் வங்கி, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், டாடா ஸ்டீல், அதானி போர்ட்ஸ், இன்டஸ் இண்ட் வவங்கி, என்டிபிசி நிறுவனப் பங்குகளின் விலை 4.28 சதவீதம் வரை குறைந்தன.

மும்பை பங்குச் சந்தையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் 839 புள்ளிகள் (2.34%) சரிந்து 35,066 புள்ளிகளில் நிலைத்தது.

தேசிய பங்குச் சந்தையில் நடைபெற்ற வர்த்தகத்தில் நிஃப்டி 256 புள்ளிகள் (2.33%) வீழ்ச்சி கண்டு 10,760 புள்ளிகளில் நிலைத்தது.

விப்ரோ: நவீன வகை மின் விளக்குகள் அறிமுகம்

சென்னை, பிப்.2: இணையதளம் மூலம் செயல்படும் நவீன தொழில்நுட்பத்திலான மின் விளக்குகளை விப்ரோ நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இது குறித்து விப்ரோ நுகர்வோர் பாதுகாப்பு, ஒளியமைப்பு வணிகப் பிரிவின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி மகரந்த் சைனிஸ் சென்னையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: 'இன்டர்நெட் ஆஃப் லைட்டிங்' ('ஐஓஎல்') என்ற புதிய தொழில்நுட்பத்தை விப்ரோ லைட்டிங் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய தொழில்நுட்பத்திலான விளக்குகளை அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள், தெருக்கள் ஆகியவற்றில் பொருத்தலாம்.

மடிக் கணினி மூலம் இணையத்தின் உதவியோடு விளக்குகள் எரிவதைக் கட்டுப்படுத்த முடியும். இதற்கு 'வை-ஃபை' அல்லது வயர் மூலம் செயல்படும் இணைய வசதி தேவையில்லை. கண்ணுக்கு புலப்படும் ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்தி, இணையத்தை பயன்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பமான லை-ஃபை (Li-Fi) தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இது நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் வைஃபை-ஐ காட்டிலும் 100 மடங்கு வேகமாக செயல்படக் கூடியது. வைஃபையில் பயன்படுத்தப்படும் ரேடியோ அலைவரிசைகளை விடவும், லைஃபை 10,000 மடங்குகள் திறன்கொண்டது. இதன் மூலம் விநாடிக்கு 1 ஜிகாபைட் வேகத்தில் இணைய பயன்பாட்டைப் பெற முடியும்.

இந்த தொழில்நுட்பத்திலான விளக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை 50 சதவீதத்துக்கும் மேல் சேமிக்க முடியும்; எந்த இடத்தில் இருந்து வேண்டுமானாலும் விளக்குகளை இயக்கலாம்; புத்தகம் படிக்க, வேலை செய்ய, உறங்குவதற்கு என பல விஷயங்களுக்கு நமது விருப்பத்துக்கேற்றவாறு ஒளியின் அளவைக் குறைத்துக் கொள்ளவோ கூட்டிக் கொள்ளவோ இயலும். இந்த விளக்குகள் 50,000 மணி நேரம் வரை எரியும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

கரூர் வைஸ்யா வங்கியின் வணிகம் ரூ.1,01,955 கோடி

KVB

கரூர், பிப்.2: கரூர் வைஸ்யா வங்கியின் மொத்த வணிகம் கடந்த 9 மாதங்களில் ரூ. 1,01,955 கோடியை எட்டியுள்ளது.

இதுதொடர்பாக வங்கியின் மேலாண்மை இயக்குநர் சேஷாத்திரி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் வைஸ்யா வங்கி ஸ்திரமான அடித்தளத்தோடு, கூடுதலான வணிகம் செய்து வளர்ச்சியோடு லாபத்தையும் ஈட்டியுள்ளது. வங்கியின் மொத்த வட்டி வருவாய் கடந்த 9 மாத இறுதியில் ரூ. 161 கோடி உயர்ந்து, 1,655 கோடியாகியுள்ளது. இது 10.78 சதவீத வளர்ச்சி. வங்கியின் இதர வருவாய் ரூ. 550 கோடியில் இருந்து ரூ.691 கோடியாக உயர்ந்துள்ளது. இது 25.64 சதவீத வளர்ச்சி. வங்கியின் நிகர லாபம் 9 மாதத்தில் ரூ. 295 கோடியாக உயர்ந்துள்ளது. வங்கியின் செயல்பாட்டு லாபம் ரூ. 1,298 கோடியாக அதிகரித்துள்ளது. வங்கியின் மொத்த வணிகம் ரூ.1,01,955 கோடியை எட்டியுள்ளது.

வங்கியின் வைப்புத்தொகை ரூ. 57,119 கோடியாகவும், வழங்கிய கடன் ரூ. 44,836 கோடியாக உள்ளது என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்தோறும்
தினமணியுடன்...
தினமணி
இளைஞர்மணி
படியுங்கள்

தினமணி
சனிக்கிழமை, 3 பிப்ரவரி 2018

நம்பிக்கை நாணயம் கைராசி
E.B.K
Ph : 235765, 230775
Cell : 9360 311179
தங்க மாளிகை A/C
ஹால் மார்க் 916 KDM ஷோரூம்
காந்திஜி ரோடு, மணிக்கூண்டு எதிரில், தஞ்சாவூர்.
மற்றும் தெற்கலங்கம், தஞ்சாவூர்.

திருச்செந்தூர் கோயிலில் நாளை தை உத்திர வருஷாபிஷேகம்

திருச்செந்தூர், பிப். 2: திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தை உத்திர வருஷாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை (பிப். 4) நடைபெறவுள்ளது.

இதுகுறித்து கோயில் இணை ஆணையர் பா. பாரதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மூலவரான சுப்பிரமணியர் பிரதிஷ்டை செய்தது தை உத்திர நட்சத்திரத்தில் ஆகும். எனவே, ஆண்டுதோறும் தை மாதம் உத்திர நட்சத்திரத்தன்று கோயிலில் வருஷாபிஷேகம் நடைபெறுகிறது. இந்த ஆண்டு தை உத்திர வருஷாபிஷேகத்தை முன்னிட்டு, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு கோயில் நடைதிறக்கப்பட்டு, 3.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 4 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து, கும்பங்கள் வைக்கப்பட்டு பூஜை நடைபெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு வருஷாபிஷேகம் நடைபெறும். இரவு மூலவருக்கு அபிஷேகம் நடைபெறாது. புஷ்பாஞ்சலி நடைபெறுகிறது. புஷ்பாஞ்சலிக்கு அழகும், மணமும் மிக்க மலர்களை (கேந்தி பூ தவிர) பக்தர்கள் அன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக உள்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கலாம். இரவு சுவாமி குமரவிடங்கப்பெருமான் அம்பாளுடன் தங்கமயில் வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கும் வைபவம் நடைபெறவுள்ளது.

வள்ளலார் சித்தி பெற்ற இடத்தில்

வளாகத் திருவறை தரிசனம்

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

வடலூர் அருகே உள்ள மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் வள்ளலார் பயன்படுத்திய பொருள்கள் அடங்கிய பேழை.

நெய்வேலி, பிப். 2: கடலூர் மாவட்டம், வடலூர் அருகே மேட்டுக்குப்பம் கிராமத்தில் வள்ளலார் சித்தி பெற்ற திருமாளிகையில் திருவறை தரிசனம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

வடலூரில் வள்ளலார் நிறுவிய சத்திய ஞான சபையில், நிகழாண்டின் 147-ஆவது தைப்பூச ஜோதி தரிசன விழா, கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கி, புதன்கிழமை ஜோதி தரிசனம் நடைபெற்றது. தொடர்ந்து வெள்ளிக்கிழமை, வடலூர் அருகே மேட்டுக்குப்பம் கிராமத்தில் உள்ள வள்ளலார் சித்தி பெற்ற வளாகத்தில் திருவறை தரிசனம் நடைபெற்றது.

முன்னதாக, வடலூர் ஞான சபை வளாகத்திலிருந்து வள்ளலார் பயன்படுத்திய பொருள்கள் அடங்கிய பேழை ஊர்வலமாக மேட்டுக்குப்பம் கிராமத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. செல்லும் வழியில் பேழைக்கு பார்வதிபுரம், நைனார்குப்பம், கருங்குழி கிராம மக்கள் வரவேற்பளித்தனர். தொடர்ந்து, மேட்டுக்குப்பத்தில் கிராம மக்கள் சீர்வரிசைப் பொருள்கள் அடங்கிய தட்டுகளுடன் பேழையை வரவேற்று திருமாளிகைக்கு எடுத்துச் சென்றனர். பின்னர், அங்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு, வள்ளலார் தேக சித்தி பெற்ற திருவறை பக்தர்கள் தரிசனத்துக்காக பிற்பகல் 1.15 மணி முதல் மாலை 6 மணி வரை திறக்கப்பட்டது. திருவறை தரிசனத்தை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசித்தனர்.

இந்த நிகழ்வையொட்டி, திருமாளிகை வளாகத்தில் சன்மார்க்க சொற்பொழிவு நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் கி.ரேணுகாதேவி, செயல் அலுவலர் ஆர். கருணாகரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

பழனி அருகே கிடைத்த பழங்கால ஓலைச்சுவடி

பழனி, பிப். 2: திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே கிடைத்த பழங்கால ஓலைச்சுவடியில் காவடி எடுத்தால் தீரும் நோய்கள் மற்றும் முருகனின் காவடி சிந்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

பழனியை அடுத்த கோதைமங்களத்தை சேர்ந்த யுவராணி என்ற மாணவி பழனி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்து வருகிறார். இவர் வீட்டில் பழங்கால ஓலைச்சுவடி இருப்பதாக தமிழாசிரியர் நந்திவர்மனிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து தமிழாசிரியர் நந்திவர்மன், வரலாற்று ஆசிரியை ராஜேஸ்வரி ஆகியோர் அந்த ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து ஆசிரியர் நந்திவர்மன் கூறியதாவது: இந்த ஓலைச்சுவடிகளின் இருபுறமும் எழுத்தாணி மூலம் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

மொத்தம் 50 சுவடியில் நூறு பாடல்கள் உள்ளன. இவை அனைத்தும் முருகனின் காவடிச்சிந்து பாடல்களாக உள்ளன. அவை இலக்கண முறைப்படியும், எதுகை, மோனை, இயைவு வழுவாமலும் எளிய முறையில் சந்தப் பாடல்களாக எழுதப்பட்டுள்ளது. மேலும் ஓலைச்சுவடிகளில் முருகனுக்கு எடுக்கும் காவடிகளால் தீரும் 30 வகையான நோய்கள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இதுவரை அச்சில் ஏற்றப்படாத பாடல்கள். இவற்றை அச்சில் ஏற்றிய பின் அரசு அருங்காட்சியகத்துக்கு வழங்கப்படும் என்றார்.

விவசாயிகள் பக்கம் திரும்பிய மத்திய அரசு

பட்ஜெட் குறித்து கமல் கருத்து

சென்னை, பிப். 2: மத்திய பட்ஜெட் மூலம் விவசாயிகள், கிராமங்களின் பக்கம் தனது பார்வையை மத்திய அரசு திருப்பியுள்ளதாக நடிகர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

ஹார்வர்டு பல்கலைகழகத்தில் உரையாற்றுவதற்காக சென்னையில் இருந்து அமெரிக்காவுக்கு வெள்ளிக்கிழமை புறப்பட்டு சென்றார் நடிகர் கமல்ஹாசன். அப்போது சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

நாம் பல காலமாக புறக்கணிக்கப்பட்டுதான் இருக்கிறோம். இருப்பினும் இந்த பட்ஜெட்டில் உள்ள நன்மைகளைப் பார்க்கலாமே. பட்ஜெட் மூலம் மத்திய அரசு விவசாயிகள், கிராமங்களின் பக்கம் பார்வையை அதிகமாக திருப்பியுள்ளது. ஆனால், நடுத்தர வர்க்கத்தை பொறுத்தவரை இந்த பட்ஜெட் பாராமுகமாக உள்ளது என்றார் கமல்ஹாசன்.

குன்னூரில் முகாமிட்டுள்ள யானைகளை விரட்ட வனத் துறையினர் தீவிரம்

குன்னூர், கேஎம்கே நகர் பகுதியில் முகாமிட்டுள்ள யானைகள்.

குன்னூர், பிப். 2: நீலகிரி மாவட்டம், குன்னூர் கே.எம்.கே. நகர் பகுதியில் குட்டிகளுடன் யானைகள் உலவி வருவதால் அவற்றை விரட்டும் பணியில் வனத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நீலகிரி மாவட்டம், பர்லியாறு, கோழிக்கரை, புதுக்காடு, ரண்ணிமேடு ரயில் நிறுத்தம் உள்ளிட்ட பகுதிகளில் குட்டிகளுடன் யானைகள் முகாமிட்டிருந்தன. வெள்ளிக்கிழமை குன்னூர் பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள பார்வலஸ் சாலை, கே.எம்.கே.நகர் பகுதியில் காட்டுயானைகள் நின்றன. தண்ணீருக்காகவும், இங்குள்ள பழங்கள், மூங்கிலை உண்பதற்காகவும் இப்பகுதிக்கு அவை வந்துள்ளன. எனவே, அவற்றைஅடர்ந்த வனப் பகுதிகளுக்குள் துரத்தும் பணியில் வனத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக, கேரள எல்லைப் பகுதிகளில் மாவோயிஸ்ட்களைத் தேடும் பணி தீவிரம்

தேடுதல்வேட்டையில் ஈடுபட்ட நக்ஸல் தடுப்பு தேடுதல் படையினர்.

குன்னூர், பிப்.2: தமிழக, கேரள எல்லைப் பகுதிகளில் மாவோயிஸ்ட்களைத் தேடும் பணியில் வெள்ளிக்கிழமை நக்ஸல் தேடுதல் படையினர் தீவிரமாக ஈடுபட்டனர்.

கேரள மாநிலம், மலப்புர மாவட்டம், நிலம்பூர் வனப் பகுதியில், மாவோயிஸ்ட்கள் நடமாட்டம் இருப்பதாக வந்த தகவலைஅடுத்து நீலகிரி மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் மாவோயிஸ்ட்களைக் கண்காணிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனைப்பள்ளம், பில்லூர் உள்ளிட்ட வனப் பகுதிகள், நீரோட்டம் அதிகம் உள்ள பகுதிகள், பாறைக் குகைகள் உள்ளிட்ட இடங்களிலும், ஆதிவாசி கிராமங்களிலும் மாவோயிஸ்ட்களைத் தேடும் பணியில் நக்ஸல் தடுப்பு தேடுதல் படையினர் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்நிலையில், கேரளத்தில் இருந்து நீலகிரி ஆதிவாசி கிராமங்களுக்குள் மாவோயிஸ்ட்கள் எளிதாக வரக்கூடும் என்பதால், 8 பேர் கொண்ட நக்ஸல் தடுப்பு தேடுதல் படையினர் ஆயுதங்களுடன் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரஜினி மக்கள் மன்றம்: தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகள் நியமனம்

சென்னை, பிப். 2: ரஜினி மக்கள் மன்றத்தின் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக இம்மன்றத்தின் நிர்வாகி வி.எம். சுதாகர், சென்னையில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்தி:

கடந்த மாதம் 27-ஆம் தேதி நடைபெற்ற தூத்துக்குடி மாவட்ட ரஜினி மக்கள் மன்ற ஆலோசனைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டச் செயலாளராக ஏ.ஜே. ஸ்டாலின் நியமிக்கப்படுகிறார். மாவட்ட இணைச் செயலாளராக ஜே. சக்திமுருகன் நியமனம் செய்யப்படுகிறார்.

இதேபோல் மாவட்டக் கௌரவச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் அணி இணைச் செயலாளர், மீனவரணிச் செயலாளர், விவசாய அணிச் செயலாளர், தகவல் தொழில்நுட்பப் பிரிவு அணி நிர்வாகிகள், மகளிர் அணிச் செயலாளர், வழக்குரைஞர் அணிச் செயலாளர் உள்ளிட்ட பதவிகளுக்கும் நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

லாரி பழுது: திம்பம் மலை பாதையில் போக்குவரத்து பாதிப்பு

திம்பம் 10-ஆவது வளைவுப் பாதையில் சரக்கு வாகனம் பழுதாகி நிற்பதால் ஏற்பட்ட போக்குவரத்து பாதிப்பு.

சத்தியமங்கலம், பிப். 2: மக்காச்சோளம் பாரம் ஏற்றிய லாரி திம்பம் 10-ஆவது கொண்டை ஊசி வளைவில் பழுதாகி நின்றதால் இரு மாநிலங்களிடையே இரண்டு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தை அடுத்த திம்பம் மலைப் பாதையில் 27 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளன. தமிழகம் - கர்நாடகத்தை இணைக்கும் முக்கியவழித்தடமாகதிம்பம்மலைப் பாதை உள்ளது. இந்நிலையில், கர்நாடக மாநிலம், ஹாசனத்தில் இருந்து கோவைக்கு மக்காச்சோளம் பாரம் ஏற்றி வந்த லாரி திம்பம் 10-ஆவது வளைவில் திரும்பும்போது தடுப்புச்சுவர் மீது மோதி நின்றது. இதனால் இரு மாநிலங்களிடையே போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் மீட்பு வாகனம் மூலம் லாரியை நகர்த்தி போக்குவரத்தை சீரமைத்தனர்.

வர்த்தக மணி
முதலில் வரும் 1500 நபர்களுக்கு ஒரு Rorito Pen
முதலில் வரும் 1000 நபர்களுக்கு ஒரு வண்ண மீன்
இலவசம் !
மலர்களால் ஆன பிரம்மாண்டமான
தஞ்சை பெரிய கோவில் மற்றும் நந்தியை
காணவாரீர்!
PPDS
வழங்கும்
தஞ்சாவூர்
கார்ப்பரேசன் மைதானத்தில்
புது பஸ்ஸ்டாண்ட் பின்புறம்
தமிழகத்தில் மிகவும் புகழ்பெற்ற
ஐடியல் ஹோம்
கிரியேட்டர்ஸ்
வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும்
மலர்கண்காட்சி
பிப்ரவரி 11 -ந் தேதி வரை
நேரம் :- தினமும் மாலை 3.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை
☐ 3-வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மாஸ்க்
☐ பள்ளி மாணவர்கள் கொண்டு வரும் கூப்பன்களுக்கு அப்துல்கலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகம்
இலவசம் !



LIC's e Services
DIGITAL LIC
TRUST AND TECHNOLOGY
LIC App : Har Pal Aapke Saath
PRESENTING
The 3-in-1 App that enables you to Access LIC Anytime, Anywhere.

LIC Customer App:
- Register for e-Services
- View registered policies
- Online premium payment
- Premium paid statements
- Revival quotations
- Loan and claim status enquiry
- Email and SMS alerts
- Buy Online Policies

LIC PayDirect App:
- The simplest way to pay your premium through Internet Banking / Debit Card / Credit Card / eWallets / UPI / BHIM without registration
- Repay your loan / pay interest on your loan
- View transaction status

LIC Quick Quotes App:
Get an instant premium quotation for your choice of policy to help you understand the plan better.

Download MyLIC app on your smartphone or visit www.licindia.in
MyLIC app is available on App Store Google play
Follow us : LIC India Forever
Beware of spurious phone calls and fictitious / fraudulent offers. IRDAI clarifies to public that • IRDAI or its officials do not involve in activities like sale of any kind of insurance or financial products nor invest premiums. • IRDAI does not announce any bonus. Public receiving such phone calls are requested to lodge a police complaint along with details of phone call, number.
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
LIC/AR/17-18/25/ENG
IRDAI Regn No.: 512
TRUST - Thy Name is LIC

DINAMANI, Tiruchy Phone: 2743496, Fax: 0431-2743499 RNI Reg. No. TNTAM/2003/12849. Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Ltd., at Baba Towers. 2nd Floor, 24, Thennur High Road, Thillai Nagar, Tiruchy - 620 017. and Printed by him at M/S. V.C. Printograph, No.144, M.K.Kottai Road. Elumalaiyan Rice Mill Complex. Ambikapuram, Ariyamangalam, Tiruchy - 620 011. ஆசிரியர் கே. வைத்தியநாதன் Editor K. Vaidiyanathan Tiruchy Vol 16, No 33
COPYRIGHT: Express Publications (Madurai) Ltd . All right reserved Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited

C M Y K